கல்கி

KALKI 25.12.94 ரூ. 3.00




அம்மா இத்தனை வருடங்களாக
மறைத்து வைத்திருந்த ரகசியம்
அப்பா முதன்முதலில் பார்த்தபொழுது அம்மாவின் கூந்தலழகில்தான் மனத்தை பறிகொடுத்தாராம். ரகசியம்....? செம்பருத்தி கலந்த மூலிகையின் கலவை. அறிமுகப்படுத்துகிறோம்...! புதிய மீரா ஹெர்பல் செம்பருத்தி பவுடர். இதில் செம்பருத்தியுடன் ஆவாரம்பூ, உசிலம் மற்றும் பல அரிய மூலிகைகள் அடங்கியுள்ளது.
கூந்தலின் வேர் பாகத்தை உறுதியாக்கி முடி உதிர்வதைத் தடுக்கிறது.
O&M 8554 TM
மீரா
செம்பருத்தி பவுடர்

டைரி பரிசு யார் யாருக்கு?

புத்தாண்டு வாழ்த்துக்கள்! தீபாவளி சிறப்பிதழில் வாசகர்களின் கருத்துக்களைச் சேகரிக்க கூப்பன் இணைத்திருந்தோம். சிறந்த விமர்சனங்கள் எழுதிய ஐந்து பேருக்குச் சிறப்புப் பரிசு ரூ.50/-ம், கூப்பனை நிரப்பி அனுப்பியவர்களுள் 50 பேருக்குக் குலுக்கல் முறையில் 1995 டைரி பரிசும் அறிவித்திருந்தோம்.

சிறப்பு பரிசு பெறுவோர் :

1. என். சிவன் பிள்ளை, 89 ஏ, மேலத் தெரு, கிருஷ்ணன் கோவில், நாகர்கோவில் 629 001.

2. சி. நாச்சிமுத்து, 16, நேதாஜி வீதி - 2, சூரம்பட்டிவலசு, ஈரோடு - 638 009.

3. எம். சீனிவாசன், 6, கம்பர் தெரு, விவேகானந்தர் நகர், எருக்கஞ்சேரி, சென்னை - 51.

4. ச. எம். உஸ்மான், த. பெ. எண் 184, ரஸ்-அல்-கைமா, யு.ஏ.ஈ.

5. கு. நெப்போலியன், 3/50, வடக்கு தெரு, அம்மன்பேட்டை, வேதியபுரம் (அஞ்), திருவையாறு தாலுகா, தஞ்சை மாவட்டம் - 613 205.

டைரி பரிசுக்குரியவர்களைக் குலுக்கலில் தேர்ந்தெடுத்தவர் ஸாக்ஸஃபோன் கலைஞர் கதிரி கோபால்நாத்.

பரிசு பெறும் வாசகர்கள் :

1. எம். ரவீந்திரன், கச்சநகரம், கச்சனம் (அஞ்) திருவாரூர் (வழி) நாகை காயிதே மாவட்டம் - 610 201.

2. எஸ். சிவாஜிமனோகர், சக்தி எலக்டிரிக்கல்ஸ், 261, சாஸ்திரி ரோடு, இரத்தினபுரி, கோவை - 27.

3. திருமதி பூங்கோதை ராஜேந்திரன், 20, விநாயகம் பேட்டை தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 15.

4. ம. ஆறுமுகம், 90 ஏ, காமராஜ் தெரு, திருவள்ளுவர் நகர், அயன்புரம், சென்னை - 23.

5. கே. வெங்கடேஸ்வரன், பிளாட் நெ. 30, சுப்பிரமணிய நகர், மச்சுவாடி, புதுக்கோட்டை - 622 004.

6. எஸ். தேசிகன், 181, மின்வாரியக் குடியிருப்பு, பெரம்பலூர்.

7. மல்லிகா ராஜாராமன், 1511 கண்டிதால்லூசந்து, மேலவீதி, தஞ்சாவூர் - 613 009.

8. பி. ஜெயலக்ஷ்மி, 5, சோமு தெரு, சேலம் 636 001.

9. எஸ். தனினி விஸ்வநாதன், 129, ராஜவீதி, கோவை - 641 001.

10 கே. என். வேணுகோபால், 4, அக்ரகாரத் தெரு, காரியமங்கலம்.

11. W.V. துக்காராம், 4/110 கவரை ஒத்தத் தெரு, அம்மையப்பன் - 613 701. நாகை காயிதே மில்லத் மாவட்டம்.

12. எஸ். ஆண்டான் 25, கோபால்சாமி தெற்கு மாடத் தெரு, பாளையங்கோட்டை - 627 002.

13. தெ. திருவேங்கடம், 5/74, தென்கீரனூர் அஞ், கள்ளக்குறிச்சி வட்டம், வி.ரா.ப. மாவட்டம் - 606 202.

14. வே. ஹரிஹரகாளிதாஸ், 7/26 AIPEA நகர், பரவை - 625 401.

15. கே. சுப்ரமணியன், 8/1, அவுசிங் யூனிட், பீளமேடு, கோவை - 4.

16. தியாகராஜன், 33, பி. எம். செட்டி தெரு, சைதாப்பேட்டை, வேலூர் - 12.

17. பி. சந்துரு, 38, பதினைந்து மண்டப தெரு, திருவையாறு - 613 204.

18. ஆர். குருமூர்த்தி, 3, காசிம்கான் பேட்டை தெரு, சிதம்பரம் - 608 001.

19. என். வேலு, ஏ. 106, தமிழ்நாடு வீட்டு வசதி குடியிருப்பு, காஞ்சிபுரம்.

20. ஆர். கண்ணன், மே/பா வி. தியாகராஜன், 34/ஏ, தேரடித் தெரு, ஸ்ரீபெரும்புதூர் - 602 105.

21. என். சுந்தரராசன், 1/491 "மல்லிகை" போஸ்டல் காலனி, தஞ்சாவூர் - 613 006.

22. பி.பி. ராஜா, 22, கோவிந்தசாமி தெரு, போளூர் - 606 803.


23. பா. ரவிச்சந்திரன், மேலப்பண்ணை, டி. கடலூர் (அஞ்) வேடசந்தூர் (தாலுக்கா) 624 620 அண்ணா மாவட்டம்.

24. ஏ. ஆர். சீனிவாசன், 33 ஏ, நாச்சியப்பன் தெரு, மகாலிங்கபுரம், சென்னை - 34.

25. எம். எஸ். விசாலாக்ஷி, 21/38 காவேரி நகர், மேட்டூர் அணை - 1.

(...தொடர்ச்சி அடுத்த இதழில்)




தேர்தல் வெற்றி
என்.டி. ராமராவ்
ஜெ
எனக்கே கிரீடம் சூட்டின மாதிரியல்ல இருக்கு! இந்த சந்தோஷத்துல அ.தி.மு.க. ஓடி வந்து -கினது கூட மறந்து போச்சுங்க...
கட்சிக்குள் எதிர்ப்புகள்
மாநிலத் தேர்தல் தோல்விகள்
பிரதமர்
புயல் அடிக்கும் போல இருக்கே... இந்த பொங்கல் குளிரை வெச்சுக் கிட்டு எப்படித்தான் சமாளிக்கப் போறேனோ...?
10
நிபந்தனைகள்



ஸ்ரீ
கல்கி



1994
டிசம்பர் 25
பவ
மார்கழி 10
மலர் : 53
இதழ் : 21

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

இது ஜனநாயக சர்வாதிகாரம்!

பம்பாயில் ஜெர்மானிய வங்கி ஒன்றின் கிளை ஆரம்பிக்க வேண்டும் என்று இடம் தேடினார்கள். ஒரு கட்டிடம் விலைக்கு வந்தது - டாட்டா அரண்மனை! 1908 ல் அது தொழிலதிபர் ரத்தன் டாட்டாவுக்காகக் கட்டப்பட்டது. (இன்றைய டாட்டா நிறுவனங்களின் தலைவர் ரத்தன் டாட்டாவின் தாத்தா.) கட்டிடத்தை வாங்கிய ஜெர்மானிய வங்கி, அதன் எழிலில் மயங்கியது. அதன் பழம்பெருமை குன்றாமல், புராதன எழில் சிதையாமல் அப்படியே புதுப்பித்தது. அதில் மிக நவீனமான கம்ப்யூட்டர் உபகரணங்களுடன் இன்று ஜெர்மானிய வங்கி நடக்கிறது. வாடிக்கையாளர்கள் வங்கித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள மட்டுமின்றி அந்தக் கட்டிடத்தின் அழகை ரசிக்கவும் வருகிறார்கள்.


ஆனால் தமிழ்நாட்டில் நடப்பது என்ன? கடற்கரையில் உள்ள ஒரு கம்பீரமான புராதனக் கட்டிடத்தில் போலீஸ் ஐ.ஜி. காரியாலயம் நடந்து வருகிறது. அதைத் தகர்த்துப் புதிய கட்டிடம் எழுப்பும் திட்டத்தைக் கைவிடுமாறும், பழமையான அந்தக் கட்டிடத்தின் எழிலைக் காப்பாற்றி, அப்படியே புதுப்பித்து, நவீன வசதிகளை மட்டும் புகுத்திக் கொள்ளலாம் என்றும் அறிஞர் பெருமக்களின் கோரிக்கை அரசினால் தூக்கி எறியப்பட்டது. புதிய பல மாடிக் கட்டிடத்துக்கு அஸ்திவாரம் போட்டாயிற்று. 'கடற்கரை ஓரம் எழும் பல மாடிக் கட்டிடம், நகரின் காற்றோட்டத்தைப் பாதிக்கும்' என்ற ஆட்சேபணையும் அலட்சியம் செய்யப்பட்டது.

இதைவிடவும் அதிர்ச்சி தரும் சம்பவமும் நிகழ்ந்திருக்கிறது. கொடைக்கானலில் பல மாடிக் கட்டிடங்கள் உருவானால், அந்த மலைவாசஸ்தலத்தின் இயற்கை எழிலே பாழாகி விடும் என்பதால் இதற்கு தடைவிதிக்கும் சட்டம் ஒன்று இருக்கிறது. ஆயினும் அங்கே ஒரு பல மாடி ஓட்டல் உருவாகி வருகிறது. இது சட்டத்தை மீறிய செயல் என்று கருதப்படுவதால் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது. சுற்றுச் சூழல் பாதுகாப்பில் அக்கறை கொண்டோர் இந்த ஓட்டல் அனுமதியின்றி கட்டப்பட்டிருப்பதாகக் கருதி நீதிமன்றம் சென்றுள்ளனர். நீதிமன்றம் தாற்காலிகத் தடைவிதித்து விட்டு வழக்கை விசாரித்து வருகிறது. இதற்கிடையில் அந்த ஹோட்டலுக்கு அனுமதி வழங்கும் விதமாக சட்டத்தையே திருத்தி அமைக்கும் நோக்கில் அரசு உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டிருப்பது வியப்பை மட்டுமல்ல வேதனையையும் அளிக்கிறது. இதிலே இரண்டு அநீதிகள் உள்ளடங்கியுள்ளன.

முதலாவது, ஒரு தனி நிறுவனத்தின் வசதிக்காக, மக்களின் நலனுக்கென்றும் அவர்களின் அழகுணர்ச்சியை மதிப்பதற்காகவும் ஏற்பட்ட ஒரு சட்டத்தைத் திருத்தி அமைப்பது என்பதே மோசம். அதைவிடவும் கேவலம், இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கும்போதே சட்டத் திருத்தம் கொண்டு வருவது. இது நீதித் துறையையே அவமதிப்பதாகும். மாண்பமை நீதிபதிகள் அரசின் இந்த உத்தரவுக்கும் தாற்காலிகத் தடை விதித்ததில் ஆச்சர்யமில்லை. நாளை வழக்கின் தீர்ப்பு அந்த ஓட்டல் உரிமையாளர்களுக்கு சாதகமாகவே கூட முடியலாம். வழக்கை நாம் விமர்சிக்கக் கூடாது. ஆனால் அரசு நடந்து கொள்ளும் விதத்தைக் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை.

மெஜாரிட்டி பலத்துடன் பதவிக்கு வருகிறவர், தமக்கு வோட்டுப் போடாத பெரும்பான்மை மக்களுக்கும் தாம் முதல்வர் என்பதை மறக்கக் கூடாது. எனவே மாற்றுக் கருத்துக்களையும் கேட்டறிந்து அடக்கத்துடன் நடுநிலையில் செயல்பட வேண்டும். ஆனால் எதிர்கட்சிகளின் மறியல் என்று அறிவித்ததுமே, மறியல் தேதிக்கு இரண்டு வாரங்கள் முன்னதாகவே, எதிர்க்கட்சி தொண்டர்களை சிறையில் தள்ளும் ஆட்சியிடம் மேற்சொன்ன பண்பாட்டினையா எதிர்பார்க்க முடியும்?

"ஜனநாயகத்தில் அபரிமித மெஜாரிட்டியின் எதேச்சாதிகாரம் நிஜமான சர்வாதிகாரத்தை விடவும் கொடிது" என்பது டிசம்பர் 25ல் மறைந்த ராஜாஜி வாக்கு.



ராக்கெட்

1

உக்கிரமான இருட்டு. தென்னைகளின் சலசலப்பில் ஓர் அமானுஷ்யம் ஒளிந்திருந்தது. கொச்சுவேலி படகுத் துறையில் அவள் காத்திருந்தாள். படபடப்போடு. நகம் கடித்துக் கொண்டு. அடிக்கடி வழியும் வியர்வையைத் துடைத்துக் கொண்டு. மணி பதினொன்றைத் தொட்டதும் சட்டென்று எழுந்தாள். ஒரு கட்டு மரத்தை இழுத்து, தண்ணீரில் விட்டாள். அது மிதக்க ஆரம்பித்ததும் ஏறி உட்கார்ந்தாள். மூங்கில் கழியை நீரில் நுழைத்து, மெல்ல செலுத்த ஆரம்பித்தாள். அவள் பார்வை, எதிரே தூரத்தில் குன்றின் மேல் சாதுவாய் உறங்கிக் கொண்டிருந்த ராக்கெட் தளத்தில் லயித்தது. இந்திய விண்வெளி ஆய்வுத் துறையின் தும்பா தளம்.

ரயில் பாலத்தின் அடிபுகுந்து, தவழ்ந்து, கட்டுமரம் அந்தக் குன்றைச் சுற்றிக் கொண்டு பின்புறம் ஒதுங்கியது. அவள் இறங்கினாள். தன் கை, தனக்குத் தெரியாத அநியாய இருட்டு. தூரக் கடலின் சின்ன இரைச்சல். ஒரு கணம் குன்றை அண்ணாந்து பார்த்தாள். பின் மென்ன ஏற ஆரம்பித்தாள்.

ஐந்து நிமிடத்தில் உச்சியை அடைய முடிந்தது. ஒரு கணம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு, பூசாத காம்பௌண்டின் மேல் ஏறி, சப்தமில்லாமல் உள்ளே குதித்தாள்.

பிளந்து வைத்த வெள்ளரி மாதிரி காம்பௌண்டின் உள்ளே தார்ச்சாலை நியான் ஒளியில் ஜொலித்தது. ஒதுங்கி, இருளில் பதுங்கி முன்னேறினாள். வான் நோக்கி விரிந்த பிரும்மாண்ட தகவல் கின்னம். அங்கே லான்ச்சிங் போர்டு. இங்கே ப்ரொப்பல்லன்ட் காம்ப்ளக்ஸ். மஞ்சள் நிறக் கம்ப்யூட்டர் கேந்திரத்தினுள்ளே விளக்கு எரிந்தது.

அவள் மெல்ல விலகி, பின்புற டாய்லட்டை சமீபித்தாள். வெளிச்சம் இருந்தது. நிழல் இருந்தது. நிழலுக்குள் ஒரு உருவம் இருந்தது. இவளைப் பார்த்ததும் மெல்ல வெளிப்பட்டு, "வா, வஹிதா. ஏதும் சிக்கல் இருந்ததா, வருவதில்?"

"ஆம். ஒரே ஒரு சிக்கல்... இந்த ஜீன்ஸ் மிகவும் டைட். ஏறுவதில் கொஞ்சம் சிரமம்."

"ஜோக்கடிக்கிறாய். ஆனால் அதற்கு இது வல்ல தருணம். இதோ நீ கேட்ட தும்பா ராக்கெட் கேந்திரத்தின் வரைபடம். ஆனால் இது உனக்கெதற்கு என்றுதான் புரியவில்லை. லிக்விட் ப்ரொப்பல்லன்ட் தயாரிப்பு முறைகள், ஸாட்டிலைட் வாகன அமைப்பு, கலன் ஏவும் காரணம், இவை யாவும் தான் உடனுக்குடன் தரப்பட்டு விடுகிறதே?"

"காரணம் உங்களுக்கு அநாவசியம், ரிஷி. மேலிடக் கட்டளை. வரைபடம் வாங்கிவா என்று. நம் கடன் பணி செய்து கிடப்பதே. உங்கள் அக்கவுண்ட்டில் தொகை ஏற்றுவது அவர்கள் கடன். எனக்கு நேரமாகிறது."

அவர் ஒரு கணம் அவளை உற்றுப் பார்த்தார். இருளிலும் அவள் விழிகள் ஒளிர்ந்து சிறகடித்தன.

"நான், கேவலம் பணத்திற்காக இதைச் செய்யவில்லை தெரியுமா?"

இக்கதைக்கான. அண்டர் கிரௌண்ட் விவரங்கள் தேடி, திருவனந்தபுரம் சென்ற போது, பலவகையிலும் தகவல்கள் தந்து உதவிய எழுத்தாளர் ஆ. மாதவன், 'கலா கௌமுதி' ஸ்ரீதரன், எஸ்.எஸ்.மணி, பெயர் தர விரும்பாத சில ராக்கெட் தள விஞ்ஞானிகள், மற்றும் குறைந்த 'தட்சணை'யில் ராக்கெட் கேந்திரத்தை எட்டிப் பார்க்க உதவிய அந்த முகம் தெரியாத காவலாளி ஆகியோருக்கு நன்றி!

ஓநாய்கள்!

கவர் 'ஸ்டோரி'

"பின்?"

"உனக்காக! நீ சொன்னால் எதையும் செய்ய வேண்டுமென்கிற உந்துதல்."

"சரிதான். வரட்டுமா?"

"ஒரு நிமிஷம். நாளை காலை பதினோரு மணிக்கு அம்பி உன்னைச் சந்திக்க வருவார்."

"காரணம்?"

"தொண்ணூற்றைந்தில் ஏவப்படவிருக்கிற விண்கலம் குறித்து இன்று காலையிலிருந்து வலியமலையில் ஒரு அவசர கான்ஃபரன்ஸ் நடந்து கொண்டிருக்கிறது. விவரங்கள் நாளை உன்னிடம் சொல்ல வருவார்."

"வாழ்க உங்கள் தேசபக்தி!" என்றபடி அவள் இருளில் மறைந்து, கரைந்தாள்.

2

இது தென்னை மரங்கள் சூழ்ந்த நகரப் பரம்பு சாலை. அவ்வப்போது விரையும் பஸ்கள். உறுமும் ஆட்டோக்கள். அங்கே புழை. இங்கே கடை. எதிரே ஒரு பகவதி கோவில். அருகே ஒரு வளைவு. ஹோட்டல் சாம்ராட். பிரும்மாண்ட ஸைன் போர்டில் 'பார் அட்டாச்டு.'

இரண்டாவது மாடி. ஏழாவது அறை.

இடைவெளி விட்டு கதவைத் தட்டி, அம்பி காத்திருந்தார். வலியமலை ராக்கெட் தளத்தின் ஹீரோ. திரவ ராக்கெட் எரிபொருளின் தந்தை. நெடிய உருவம். சுத்தமான வெள்ளை தாடி. சிந்தனைச் சிற்பி. ஆகவே கண்ணாடியின் பவர் - 6.

அவள் தென்பட்டாள். சிவப்பு பனியனும் கறுப்புக் கண்ணாடியும். அரையே அரைக்கால் கதவைத் திறந்து பார்த்து விட்டு, "வாருங்கள்" என்றாள்.

உள்ளே நுழைந்து அவர் உட்கார்ந்ததும், "தொண்ணூற்றைந்து ஜனவரி இறுதியில் கலம் ஏவுவது உறுதிதானே?" என்று உடனே கேட்டாள் வஹிதா.

"ஆம். ஆனால் கலம் இயக்கும் கமாண்டுகளை, ஃபார்முலாக்களை இம்முறை இயக்குநரே நேரடிப் பார்வையில் தயாரித்துக் கொண்டிருக்கிறார். அதனால்...."

"அதனால்?"

"ப்ரொக்ராம் சார்ட்டுகளை உன்னிடம் சேர்ப்பது சிரமம் என்று நினைக்கிறேன்."

"ஏன்?"

"பேப்பர் வொர்க் முழுதும் வழக்கம் போல் தும்பாவில் தயாராகிறது. வெரிஃபிகேஷன், ஆல்ட்டரேஷன் விஷயங்களை எப்போதும் என் மாதிரி துணை, உதவி இயக்குநர்கள்தான் கவனிப்போம். இம்முறை இயக்குநரே! அதனால் பேப்பர்கள் என் கைவசம் வருவது சிரமம்...."

பா. ராகவன்

அவள் மர்மமாகப் புன்னகைத்தாள்.

"இதை நான் எதிர்பார்த்தேன்."

"எப்படி, எப்படி?"

"பிஎஸ்எல்வி. -1 தோல்வியில் உங்கள் இயக்குநர் கொஞ்சம் உஷாராயிருக்க வேண்டும்!"

அவர் அதிர்ந்தார்.

"தெரிந்திருக்கும் என்கிறாயா?"

"அப்படியில்லை. என்ன, கொஞ்சம் கூடுதல் எச்சரிக்கை. அவ்வளவுதான்! பிரச்னை இல்லை. தும்பாவிலிருந்து ப்ரொக்ராம்களை அவை வலியமலை செல்வதற்குள் எப்படியும் பெற்று விடுவேன்!"

"எப்படி எப்படி?"

அவள் கண்ணடித்தாள்.

"உம்மைப் போல் ஒருவன்!"

"யார்? யாரது?"

"அது உங்களுக்கு அநாவசியம். பை த பை இன்னும் பதினைந்து நாட்களில் என் விஸா முடிகிறது. நான் மாலே திரும்ப வேண்டும்."

"மறுபடி உங்கள் அதிபருக்கு எதிராகப் புரட்சியா?"

"ஹ, நல்ல ஜோக். இங்கே நம் பணிகள் செவ்வனே நடைபெற அது ஒரு திரை."

3

ராதாகிருஷ்ணன் கனவுகளில் ஊர்ந்து கொண்டிருந்தான்.

மினி. இரண்டெழுத்துப் பூப்புயல். விழிகளில் கொக்கி. இதழ்களில் மின்சாரம். முறுவலில் பூகம்பம். மொழியில் சாமரம்.

முதன் முதலில் தும்பா ராக்கெட் கேந்திரத்தின் கம்ப்யூட்டர் தளத்துக்கு ஸாஃப்ட்வேர் கன்ஸல்டன்ட்டாக அவள் நுழைந்த போதே ராதாகிருஷ்ணனுக்கு பட்சி சொல்லிவிட்டது: 'மாப்ளே, இவ உன் ஆளு!'

பத்தே நாளில் காரியம் கை கூடியது சாதனை.

ராதாகிருஷ்ணன், மாலை வரக் காத்திருந்தான். மணி நாலானதும், டெர்மினலை ஆஃப் பண்ணிவிட்டு, ப்ரீஃப் கேஸை எடுத்துக் கொண்டு, கன்ஸோலை விட்டு வெளியே வந்தான்.

நீள காரிடாரின் இருபுறமும் கண்ணாடிச் சுவர். வழுக்கும் தரையில் பத்தடிக்கொரு குப்பைத் தொட்டி. வெளியே தூரத்தில் ப்ரொப்பல்லன்ட் காம்ப்ளக்ஸின் பூதக் கிண்ணங்கள், வெயிலில் ஜொலித்துக் கொண்



டிருந்தன.

வேலி பாலத்தருகில் மினி காத்திருந்தாள். நீலப் புடைவையில் தேவதையாய் ஜொலித்தாள்.

"உள்ளே வரவேண்டியதுதானே?"

"ஐயோ, சரிதான். உங்கள் கொலீக் கங்காதரன் முழுங்கறாப்பல பார்க்கறான்."

ராதாவுக்குப் பெருமையாயிருந்தது.

"பின்னே பார்க்க மாட்டானாக்கும்? அவன் பெண்டாட்டி தாரை வம்சம்."

"சரிதான். போலாமா?"

திருவல்லம் சாலையில், சித்ராஞ்சலி ஸ்டுடியோ தாண்டி ஒரு நிலச்சரிவில் மினி, தன் ஸ்கூட்டரை நிறுத்தினாள்.

சின்னக் குடிசை. வாசலில் கயிற்றுக் கட்டில். இங்கே பலா. அங்கே தென்னை. அருகில் சலசலக்கும் தண்ணீர். சுத்தமான நிசப்தம். சுருதி சேர்க்கும் பறவையினம்.

"ப்யூட்டிஃபுல்!" என்றான் ராதா.

"அங்கிள் வீடாக்கும்."

அங்கிளாகப்பட்டவர், "வரூ, இருக்யூ" என்று விட்டு சாயா வாங்கப் புறப்பட்டுப் போனார்.

ராதா, கட்டிலில் உட்கார்ந்தான்.

"சொல் மினி. ஏதும் முக்ய விஷயமா?"

"உம்!"

"சொல்லூ!"

"ராதா நிஜமாவே என்னை லவ் பண்றதா?"

"சே! என்ன சந்தேகம்?"

"கல்யாணம் கழிக்குமா?"

"மெட்ராஸ்ல என் தங்கைக்குக் கழிஞ்ச உடனே - சே. ஆன உடனே!"

"ராதாவுக்கு என்னைப் பத்தி முழுசும் தெரியுமோ?"

"அழகான, அறிவுள்ள ஸாஃப்ட் வேர் இஞ்சினியர்."

"பிறகு?"

"வேறென்ன, வீடு, குலம், கோத்ரம்தானே? ஐ டோன்ட் பாதர்."

"மேல நிறையத் தெரியணும்."

"ஆயுசு முழுக்க டயம் இருக்கு. மெதுவா தெரிஞ்சுக்கலாம். இப்ப அதைவிட முக்யமான விஷயம் தெரிஞ்சுக்க இருக்கு."

"அதென்ன?"

"கிட்டவா."

"ஐயோ, அதென்னும் இப்ப வேண்டாம்."

"வேண்டாம்னா எப்படி? கண்கள் படாமல், கைகள் தொடாமல் காதல் வருவதில்லைன்னு எங்க ஊர் கவிஞர் ஒருத்தர் பாடியிருக்கார்."

"வேண்டாமே? உன்கிட்ட ஒரு முக்ய விஷயம் கேக்கணும்."

"கேளு."

"ராதா எனக்கொரு ஹெல்ப் பண்ணுமா?"

"சொல் மினி. எதுவும் செய்வேன் - உனக்காக!"

"நான் இந்த ஊர் இல்லை தெரியுமா? மாலே."

"போடு சக்கை. தீவுத் தேவதையா அப்போ நீ?"

"உக்கும். ராதா என்னைக் கல்யாணம் கழிச்சி, மாலே வந்துடுமா?"

"நீ என்ன சொன்னாலும் சரி, மினி!"

அவள் தன் தேவைகளைச் சொல்ல ஆரம்பித்தாள்.

4

கோவளக்கரை. சலசலக்கும் தென்னை. சப்தமில்லாக் கடல். அங்கே படகு. இங்கே குடிசை. மிகவும் இருட்டு. பரதவர்கள் உழைத்த களைப்பில் உறங்கிப் போக, நிழலாக மிதந்து வந்தாள் வஹிதா. உக்கிரமான நிசப்தத்தில் மணல்வெளி மல்லாந்து கிடந்தது. கடலுக்குள் சற்று உள் தள்ளி, கரையிலிருந்து இருபதடி தூரத்தில் உட்கார்ந்திருந்த பாறைக்கு, மார்பளவு நீரில் நடந்து போய், ஏறி, மறுபுறம் இறங்கி மறைந்து கொண்டாள்.

இது, இங்கே அவளது கடைசி ப்ராஜெக்ட். இரண்டே நாட்களில் விசா முடிகிறது. சமர்த்தாக, பிளீவஸ் முடித்தவள் போல் ஊர்திரும்ப வேண்டும். வேறெங்கேனும் அனுப்புவார்கள். நபர்களை வளைக்க வேண்டும். தகவல்கள், தகவல்கள்... என்ன பாடுபட்டேனும் பெற வேண்டும். ஒற்றனுக்கு உயிர் முக்கியமல்ல. துணிச்சல் முக்கியம். எட்டு வருஷங்கள். எத்தனை சாதனைகள்! இருபத்தொரு ராக்கெட் ரகசியங்களைக் கடத்தியிருக்கிறாள். உழைப்பாளிகளின் வியர்வையை வெறும் முத்த எச்சிலால் எப்படி விலை பேசி விட முடிகிறது!

மணி பனிரெண்டரை. சட்டென்று அவள் நிமிர்ந்து கொண்டாள். சிக்னல் தெரிந்தது. வருகிறார்கள். அவளுக்கு வியர்த்தது. நல்லபடியாக முடிய வேண்டும். நாளை இளம்ப உத்தரவு வந்துவிட்டால் பிரச்னை இல்லை.

தூரத்தில் விளக்கையும் எஞ்சினையும் அணைத்துவிட்டு அந்தப் படகு மெல்ல மிதந்து அவளருகே வந்தது. சட்டென்று அவள் உள்ளே இழுத்துக் கொள்ளப்பட்டாள்.

5

இது தகரப்பரம்பு சாலை. மறுபடி ஹோட்டல் சாம்ராட். இரண்டாவது மாடி. ஏழாவது அறை.

"வஹிதா, நீ சொல்வது நிஜமா?" என்று அதிர்ந்து கேட்டார் ரிஷிகுமார்.

"நிஜமெனில், இதிலிருக்கும் அபாரமான அபாயம் தெரியுமா?" என்றார் அம்பி.

"தெரியும்!"

"அதும் இத்தனை குறுகிய கால அவகாசத்தில் சாத்தியமேயில்லை. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் 'இஸ்ரோ' செக்யூரிட்டி பற்றி?"

"ஹு! உங்கள் செக்யூரிட்டி பற்றி என்னிடம் புகழாதீர்கள். பொறை பார்த்த பட்டிகள்."



அடுத்த இதழ்....

நகைச்சுவை சிறப்பிதழ்!

"எனில், தும்பாவிலிருந்து அந்த ப்ரொக்ராம் குறிப்புகள்? கிடைத்து விட்டதா? அதற்குள்ளா?"

அவன் சிரித்தான். "சின்ன மீன்கள் இனி தேவையில்லை என்று மேலிடம் சொல்லி விட்டது."

அறையில் சகிக்க முடியாத அமைதி படர்ந்தது. வஹிதா தொடர்ந்து, "கேளுங்கள். நேற்றிரவு கோவளக் கரையில் தகவல் வந்தது. நியாயப்படி இன்று ஊர் திரும்பியிருக்க வேண்டியவள். இந்த 'ஆப்பரேஷனு'க்காக இன்னும் மூன்று நாட்கள் காத்திருக்க வேண்டியவளாகிறேன். விசா முடிந்து போவதையும் பொருட்படுத்தாமல். இருபதாம் தேதி - வியாழன் இரவு - ரிஷி, நீங்கள் தும்பா கேந்திரத்தில் ஏதோ காரணம் சொல்லித் தங்குகிறீர்கள். ப்ரொப்பலன்ட் காம்ப்ளக்ஸுக்கு கிட்டே எந்த ஜீவராசியும் வராமல் பாதுகாக்க வேண்டியது உம் பொறுப்பு. நடு நிசியில் நான் வருவேன். திரவ எரிபொருள் சேமிப்புக் கிடங்கின் மையப் பகுதியைக் காட்ட வேண்டியது அம்பியின் பொறுப்பு. அவர் என்னுடன் வருவார். டைமர் செட் செய்து பொருத்தி, சரி பார்த்துக் கிளம்பப் பத்து நிமிடங்கள். வேளி பாலத்தில் வாகனம் காத்திருக்கும். ஏறி, கோவளக் கரை போய்ச் சேர அரைமணி. சரியாக, ஒரு மணிக்குப் படகு நமக்கு அங்கே காத்திருக்கும். நாம் ஏறிய வினாடி தும்பாவில் வெடிக்கும். இது திட்டம்."

ரிஷியும் அம்பியும் வியர்த்திருந்தனர். பூமி ஒரு கணம் நின்று சுழல்வது போல் பட்டது அவர்களுக்கு.

"கலபமாகச் சொல்கிறாய் வஹிதா. விளைவுகளை யோசித்தாயா? சேமிக்கப்பட்டிருக்கும் எரிபொருளின் தன்மை தெரியுமா உனக்கு? தும்பா அல்ல - திருவனந்தபுரமே காலி!"

"வெகு உத்தமம்."

"விஷயம் தெரிந்தால் எங்கள் நிலைமை!"

அவன் சிரித்தான்.

"உலகம் கேரளாவைத் தாண்டி, இந்தியாவுக்கு வெளியேயும் இருக்கிறது தெரியுமா?"

6

ராதாகிருஷ்ணன், அன்று காலை அலுவலகத்துக்கு ஒரு மணி நேரம் பர்மிஷன் சொல்லிவிட்டு திருவல்லம் ரோட்டிலுள்ள மினியின் அங்கிள் வீட்டுக்கு ஆட்டோ பிடித்தான். பத்து நாட்கள் முன்பு மினியுடன் அங்கு போயிருந்த போது, அவள் கேட்ட உதவியும் சற்றும் யோசிக்காமல் உடனே, உடனே ஒப்புக் கொள்ளச் செய்த தன் காதல் வேகமும் அவனுக்கு ஞாபகம் வந்தது. ஃபார்முலாக்கள். ராக்கெட் ஏவும் ஃபார்முலாக்கள். திசை திருப்பும் உத்திகள். எதற்கு அவளுக்கு? கேட்கவில்லை. கேட்கத் தோன்றவில்லை... அவள் கண்கள் அப்படி. அதன் கட்டிப் போடும் சக்தி அப்படி. ஆனால் நேற்று ஃபோன் பண்ணி அவசரமாக வேண்டாம் என்று ஏன் சொன்னாள்? தவிரவும் அந்தக் குரலில் தெரிந்த 'விலகல்' தன்மை....

கேட்டுவிடுவதென்ற முடிவில் அங்கிள் வீட்டை அடைந்த போது, கதவு திறந்திருந்தது. மினி இல்லை. அங்கிள், புழையில் குளித்துக் கொண்டிருந்தது தெரிந்தது. சுபாவமாய் உள்ளே போனான். யதேச்சையாய் மேஜை மேலிருந்த ஃபைல் தென்பட, வியப்புடன் பிரித்தான், படித்தான். புரட்டினான். படித்தான். புரட், புரட், புரட், புரட்....

ராதாகிருஷ்ணன் அதிர்ந்தான். சே! என்ன ஒரு கேவலம்! என்னை மாதிரி எத்தனை பேரிடம் தொடர்பு கொண்டிருக்கிறாள்!

சட்டென்று ஒரு கணம் வெட்கம் அவனை மூடியது. 'அசாத்தனமான காதலில் என்ன ஒரு துரோகம் செய்யவிருந்தேன் நாட்டுக்கு!'

மூடிவைத்தான். மெல்ல வெளியே வந்தான். அங்கிள் இன்னும் ஜலக்ரீடையில் இருக்க, பேசாமல் ஆட்டோவில் ஏறி, "போலாம்" என்றான்.

சில நிமிடங்களில் தகரப் பரம்பு போலீஸ் நிலையத்தில் ஃபோன் ஒலிக்க, ஒரு அனாமதேயக் குரல், மினி என்ற பெண்ணைப் பற்றி, விஸா முடிந்து போனதில் தொடங்கி பல தகவல்களை உதிர்க்க ஆரம்பித்தது.

7

உலகப் பிரசித்தி பெற்ற அந்த வியாழன் மாலை, மினி என்கிற வஹிதா என்கிற இருபத்தைந்து வயதுப் பெண் ஹோட்டல் சாம்ராட்டில் போலீசால் கைது செய்யப்பட்டாள்.

விசா முடிந்தும் போதிய காரணங்களின்றி சந்தேகத்துக்கு இடமான வகையில் தங்கியிருந்த குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டதாகவும், அபாயகரமான சதிச் செயல்களிலிருந்து மயிரிழையில் தும்பா ராக்கெட் தளம் காப்பாற்றப் பட்டதாகவும் நாளிதழ்கள் சொல்லின.

பி.கு.

ராக்கெட் சதிபற்றிய இதர விவரங்கள் தினசரிகளில் பக்கம் பக்கமாய்ப் படித்திருப்பீர்கள். கண்ணில் படாமல், ஏழாம் பக்கத்தின் சின்ன மூலையில் ஒரு குட்டிச் செய்தியை அநேகமாகத் தவறவிட்டிருப்பீர்கள். 'திருவனந்தபுரத்தில், காதல் தோல்வியால் விஷம் குடித்து வாலிபர் தற்கொலை....'

அவன் பெயர் ராதாகிருஷ்ணன்.

அட்டை வண்ணப்படம் :
கேமரா திருஞானம்

HMV

அனைத்திந்திய வானொலியுடன்

(ALL INDIA RADIO)

இணைந்து பெருமையுடன் வழங்கும்

"சங்கீதகலாநிதி" **எம். எஸ். சுப்புலக்ஷ்மி** பாடிய

நான்கு ஆடியோ கேசட்டுகள் அடங்கிய செட்



இந்த நான்கு கேசட்டுகளிலும் அனைத்திந்திய வானொலியில்ஒலிபரப்பான திருமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் கச்சேரிகளிலிருந்து தேர்ந்தெடுத்த பாடல்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

திருமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் பாடிய இந்த நான்கு கேசட் தொகுப்பு கர்நாடக இசை ரசிகர்கள் வெகுகாலம் மிகவும் விரும்பி எதிர்பார்த்திருப்பதாகும். இவர் பாடிய பாடல்களில் பக்திரஸம் எப்போதும் ததும்பியிருப்பதுடன், சூரியனின் ஒளி போலவும், தேனின் இன்சுவை போலவும், மலரின் மென்மணம் போலவும், கம்பீரமும், பாவமும், நயங்களும் இயல்பாகவே கலந்து சுடர்விடுகின்றன.

RPG

அனைத்து HMV
வியாபாரிகளிடமும் கிடைக்கும்

HMV

Kalki Shopping Page

USE YOUR LEISURE !

MAKE MONEY WITH A COMPUTER AT HOME

- 100% risk-Free Scheme
- Very low investment
- Good returns
- Training and total support available
- For the unemployed, house-wives and teachers

- LIMITED OFFER -

Contact :

MICRO LINK
72, Ranga Complex,
Pondy Bazar, Madras - 600 017.

Franchise open all over Tamil Nadu

ADQUEST 158-94

B.M. SILK SAREES

BMSS ன் பண்டிகைகால திறப்புத் தள்ளுபடி

B.M. சில்க் சாரீஸ் காஞ்சிபுரம் பட்டுசேலை தயாரிப்பாளர்:

டிசம்பர் 15 முதல் ஜனவரி 15வரை

BMSS

B.M. SILK SAREES
5, வடக்கு மாட வீதி,
மைலாப்பூர்,
சென்னை 600004.
Phone : 4940291

குறிப்பு : அனைத்து பட்டு சேலைகளும் தறி விலைக்கே கிடைக்கும்.

All Credit Cards Accepted.

COMPACT DISC

Classical, Devotional & Films

Tamil, Telugu, Malayalam, Hindi & English

SEA RECORDS · PYRAMID · SHANKAR

Marketed In India By :

SUPER AUDIO

17, Raheja Complex,
Ground Floor,
834, Anna Salai,
Opp. Anna Statue,
Madras - 2. Ph : 835188

(CD's are also available at Sankara Hall at Discount Price)

ARC மாயவரம்

JEWELLERRS

114, Kodambakkam
High Road,
(Between Valluvar Kottam and Kodambakkam Bridge)
Madras - 600 034.
Ph : 8277944, 8277970

ARC என்றும் ராசி

WIDE RANGE OF GIFT ARTICLES

GOLD — DIAMOND — SILVER

Kalki Shopping Page

இயர்புக் - 95

◆ 1994 ஆம் வருடம் பற்றிய முழுமையான கண்ணோட்டம், விமர்சனங்கள், கட்டுரைகள் அடங்கியது.

◆ கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து வெளி வந்து கொண்டிருக்கிறது.

◆ 1995 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் தேதி முதல் கிடைக்கும். தனி இதழ் விலை ரூ. 10/-.

விவரங்களுக்கு :

நியூ பாரத் பப்ளிகேஷன்
25 இராயப்பேட்டை நெடுஞ்சாலை, III வது தெரு,
மயிலாப்பூர்,
சென்னை - 600 004.

உயர்ரக சுங்குடி
புடவைகள் மற்றும்
ராணி சாரீஸ்
இந்த துணி லேபிலை
கவனித்து வாங்குங்கள்

RANI SAREES
MADURAI - 12
R.A.M

தரத்தின் உத்திரவாதம்

மதுரை
டெக்ஸ்டைல்ஸ்
2.சிவப்பிரகாசம் ரோடு,
பாண்டி பஜார், சென்னை–17.
(பிரில்லியண்ட் டுடோரியல் அருகில்)

சின்முத்ரா.... உங்கள்முதலீட்டுக்குப் பூரண பாதுகாப்பை அளிக்கும் ஒப்பற்ற நிதி நிறுவனம்.
சின்முத்ரா.... முதலீடு செய்த அன்றே, குறிப்பிட்ட தேதி காசோலை மூலம் உங்கள் வட்டி மற்றும் முதலீடு தொகையை வழங்குகிறது.

சின்முத்ரா உங்கள் முதலீட்டிற்கு
24%
வருட வட்டியை வழங்குகிறது

எங்களது சிறப்பு அம்சங்கள்

- குறைந்தபட்ச முதலீடு ரூ. 5,000/-
- பென்சன்தாரர், வயது முதிர்ந்தோர், அறக்கட்டளை ஸ்தாபனங்களுக்கு 1.5% ஊக்கத் தொகை அளிக்கிறது.

டெபாசிட் செய்வோருக்கும், டெபாசிட்டரை அறிமுகம் செய்வோருக்கும் மதிப்புமிக்க பரிசுகள் உண்டு.

சின்முத்ராவின் "சங்க நிதி" வைப்பு நிதித் திட்டம்

- 3 ஆண்டுகள் 1 மாதத்திற்கு வைப்புநிதிகளுக்கு வட்டி 24%
- 2 ஆண்டுகளுக்கு வைப்பு நிதிகளுக்கு வட்டி 21%
- 1 ஆண்டு 1 நாளுக்கு வைப்பு நிதிகளுக்கு வட்டி 18%
- குறைந்தபட்ச முதலீடு ரூ. 5,000/- அதற்குமேல் ரூ. 1,000/- வீதம்

சின்முத்ராவின் "பத்ம நிதி" வைப்பு நிதி பத்திரம்

- உங்கள் முதலீடு 37 மாதங்களில் இரு மடங்காக ஆகிறது.
- குறைந்தபட்ச முதலீடு ரூ. 10,000/- அதற்குமேல் ரூ. 1,000/- வீதம்
- 37 மாதங்கள் ஆனதும் முதலீடு செய்யப்பட்ட தொகை இருமடங்காகத் திருப்பித் தரப்படும்
- முதலீடு ரூ. 10,000/- என்றால் 37 மாதங்கள் முடிவடைந்ததும் ரூ. 20,000/-

மேலும் விவரங்களுக்கு அணுகவும்: போன் : 4937040 & 4937784
சின்முத்ரா ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்
102, கற்பகம் அவின்யூ, மந்தவெளி, சென்னை - 600 028.
● சின்முத்ரா சிட்ஸ் (பி) லிட். ● சின்முத்ரா ஃபைனான்ஷியல் சர்வீஸஸ், ● சின்முத்ரா இன்வெஸ்ட்மெண்ட்ஸ்
உங்கள் வளர்ச்சி, எங்கள் மகிழ்ச்சி! சின்முத்ரா

''டி.வி.யிலே படம் பார்த்து பழக்கப்பட்ட என் மகனை முதன் முதலா தியேட்டருக்கு கூட்டிக்கிட்டுப் போனேன். படம் பாத்துக்கிட்டிருந்த வன் திடீர்னு அழுது ஆர்ப்பாட்டம் பண்ண ஆரம்பிச்சுட்டான்.''

''ஏன் அப்படி பண்ணினான்?''

''டி.வி.யிலே வர்றா மாதிரி இடை யிடையே விளம்பரம் வரலையாம்.''

- அ. ஜாகீர்ஹுசேன்.





"என்ன சார் நீங்க! காகிதக் கூடையைப் போய் ஷோ-கேஸ் பீரோ வுல பாதுகாப்பா வெச்சிருக்கீங்க?"

"இது சாதாரண காகிதக் கூடை இல்லே சார்; என்னோட 'நாவல்'ல கூழாக்கி தயாரிச்ச கூடையாக்கும்!"

- சீர்காழி வி. ரேவதி

''இப்ப நீ காதலிச்சுட்டிருக்கற ரகுவை நம்பாதே மாலா!''

''ஏன்?''

''அவன் என்னை மாதிரி கிடையாது... உண்மையிலேயே உன்னைக் கல்யாணம் பண்ணணும்னு எண்ணத்தோட காதலிக் கறான்!''

- அம்பைதேவா





''அந்தக் கல்யாணத்திலே ஓசி சாப்பாடு சாப்பிட்ட நான், பிள்ளை வீட்டுக்காரன்னு சொன்னாலும் உதைச்சாங்க... பெண் வீட்டுக்காரன்னு சொன்னாலும் உதைச்சாங்க...!''

''ஏன்...?''

''அது பூணூல் கல்யாணம்கிறது அப்புறம் தான் தெரியவந்தது.''

- கார்த்திக் ராஜா

நீங்கள் கேட்டவை – தராசு

● **மு. ரவிச்சந்திரன், சேலம்.**

? தங்களையறியாமலே சிரித்த சம்பவம் ஒன்று?

! இருபதுக்கு மேற்பட்ட மந்திரிகள் பட்டாளம் சென்று பிரசாரம் செய்தும், ஏழு தொகுதிகளில் ஆறினைக் கோட்டை விட்ட 'ஜெ', என்.டி. ஆரின் புகழில் குளிர்காய அவரது பதவி ஏற்பு வைபவத்தில் கலந்து கொண்டது.

● **சி. மணி, திருச்சி.**

? அரசு ஊழியர்கள் லஞ்சம் கேட்டால் புகார் செய்யலாம் என்று தமிழக அரசு அறிவித்திருப்பது?

! நல்ல ஜோக்!

● **தெ. க. திலீபன், வத்ராயிருப்பு.**

? தமிழ்நாடு பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தினால்தான் அதற்குரிய நிதியைத் தர இயலும் என்று மத்திய அரசு கண்டிப்புக் காட்டுகிறதே?

! தேர்தலை நடத்தி பெறும் நிதியை விட நடத்தாமலிருந்து நடக்கும் வசூல் அதிக ஆதாயமாச்சே!

● **ஆர். பாஸ்கரன், பவித்திரமாணிக்கம்.**

? வை.கோ. கைது எவ்வித பரபரப்பையும் ஏற்படுத்தவில்லையே?

! அதற்காகத்தான் அடிக்கடி மறியல், போராட்டம் என்று அறிவிக்கக் கூடாது என்பது. மக்களுக்கு அலுத்துப் போகும். நிற்க, சிறைச்சாலைக்குள் "தமிழகம் அதிகம் கெட்டதற்குக் காரணம் கோபாலபுரமா, போயஸ் கார்டனா?" என்று பட்டிமன்றம் நடத்தியதில் செமை பரபரப்பாம்!

● **எஸ். குமார், காரைக்குடி.**

? வீரப்பன் பிடிபடுவானா, சரணடைவானா?

! ஆயிரம் கோடி ரூபாய் காணிக்கை, கறுப்புப் பூனை பாதுகாப்பு, சிறைப்பட்டுள்ள தன் கூட்டாளிகளின் விடுதலை, வழக்குகள் வாபஸ், துப்பாக்கிகள் ஏந்த லைசென்ஸ் என்றெல்லாம் பத்து நிபந்தனைகளை அடுக்கிய பிறகு சரணாவது ஒன்றாவது? பிடிபட்டால்தான் உண்டு. ஆனால் அப்படி பிடிக்க யத்தனித்தால் பிணைக் கைதிகளின் கதி? பகீர்!

● **ஆர். சங்கரநாராயணன், குணசீலம்.**

? "ம்ஹூம்! இது தேறாது" என்று முகம் சுளித்தது எதற்கு?

! ஆந்திரா, கர்நாடகா தேர்தல் தோல்விகளையடுத்து மக்கள் அவையில் காங்கிரஸ் உறுப்பினர்களே மத்திய காங்கிரஸ் அரசை எதிர்த்துப் பேசி, 'ஸேம் ஸைட் கோல்' போட்டது.

● **எஸ். கண்ணன், மதுரை.** ❑

? வீரப்பனை போலீஸ் பிடிக்கும் காலம் போய், போலீஸை வீரப்பன் பிடிக்க வேண்டிய நிலை உருவானது ஏனோ?

! முளையிலேயே கிள்ளாத குறைதான். வளரவிடக் காரணமான அரசியல்வாதிகளின், அதிகாரிகளின் பேராசைதான்.

● **ம. மகேஷ், வீரராக்கியம்.**

? "முதல்வர் கண் ஜாடை காட்டினால் போதும், தமிழகத்தில் சேஷன் கால் வைக்க விட மாட்டோம்" என்று அமைச்சர் கு. ப. கிருஷ்ணன் கூறுகிறாரே?

! 'இடி அமீன் ஆகும் தகுதி கருணாநிதியைத் தவிர வேறு யாரும் பெற முடியாது' என்ற எஸ்.டி.எஸ்ஸின் கூற்று தவறானது; இதில் ஜெயை விஞ்ச யாருமில்லை என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்!

● **எச். மோகன், மன்னார்குடி.**

? கர்நாடகாவில் காணாமற்போயிருந்த ஜனதா தளம் மீண்டும் உயிர்பெற்றிருப்பது பற்றி?

! காங்கிரஸின் உட்பூசல்களையும் லஞ்ச ஊழலையும் வெறுத்த மக்கள், தேடிக் கண்டு பிடித்தார்கள்; ஆட்சியில் அமர்த்தினார்கள். முதல்வர் பதவிக்கு ஏற்பட்ட போட்டி, ஜேஎச். பட்டேலுக்கு துணை முதல்வர் பொறுப்பு தரப்பட்டதில் தீர்ந்து சுப ஆரம்பம். அளவான அமைச்சரவை; நிலையான ஆட்சி; யதார்த்தமான பொருளாதார அணுகுமுறை, உற்பத்திக்கு உதவாத செலவினங்களில் கட்டுப்பாடு. மந்திரிகளையும் விசாரிக்கும்

வீரப்பன் பிடிபடுவானா? சரணடைவானா?

உரிமை பெற்ற லோக் அயுக்தா என்று தொடக்க நாளில் தெரிவிக்கப்பட்ட திட்டங்கள் "சபாஷ்" போட வைக்கின்றன. "அரசுப் பணம் பொது மக்களின் பணம்; தர்மகர்த்தாக்களாக இருந்து செயல்படுவோம்" என்றார் தேவே கௌடா. சொற்கள் அப்படியே செயலானால் கர்நாடகா சொர்க்க லோகமாகும்.

● **தியாகராஜன், கும்பகோணம்.**

? சேலம் பிஷப் வீட்டிலிருந்த சிறுமி கர்ப்பம் என்று செய்தி வந்துள்ளதே! பிற மதச் சாமியார்களின் செக்ஸ் நடவடிக்கைகள் அமுக்கப்படுகின்றன என்பது நிஜம் தானே?

! அமுக்கப்படுமானால் எப்படி ஸார் செய்தி வரும்? சிறுமியின் தாய் போராடி தூக்கிலே தொங்கியேனும் அம்பலத்துக்குக் கொண்டு

❑ ரூ 25 பரிசு பெறுபவர்:
எஸ். கண்ணன்,
69/70 கீழவெளி வீதி,
மதுரை - 1.

வந்து விட்டாரே! நிற்க, சிறுமியைக் கெடுத்தது வேலைக் காரனா, பிஷப்பா என்பது சர்ச்சையாகி, வழக்கு நீதிமன்றத்தில். சிறுமிக்கு நியாயம் கிடைக்கும் என்று எதிர்பார்ப்போம்.



● **ச. செந்தில் வேலன், சங்கராபுரம்.**

? ஆடம்ஸின் அற்புத ஆட்டம்?

! மேற்கிந்திய தீவுகள் அணியின் 443 ஒரு பலமான அஸ்திவாரமாக அமைய உதவிய அசத்தலான 174. இரண்டாவது இன்னிங்ஸில் மூன்று விக்கெட் இழப்புக்கு 'டிக்' செய்து இந்தியாவுக்கு சவால் விட உதவிய சாகசம். என்றாலும் தான் அவுட் ஆனதை யாருமே கண்டுகொள்ளாத போது, 91ல் தனக்குத் தானே அவுட் கொடுத்துக் கொண்டு பெவிலியன் திரும்பிய லாராவின் கண்ணியம் மற்ற எல்லாவற்றையுமே தூக்கிச் சாப்பிட்டு விட்டது!



• அடுத்த திருப்பங்கள்

● **கனகராஜ், திருச்சி.**

? உலக தமிழ் மாநாடு நடக்கும் சமயம் மறுபடி பந்த் நடத்தப் போகிறார்களாமே?

! தஞ்சை ஹோட்டல்களும் மூடப்படும் என்று செய்திகள் மனச் சங்கடம் அளிக்கின்றன. ஒரு சர்வதேச வைபவத்தின் போது இப்படி நடந்து கொண்டு அரசை தர்மசங்கடத்தில் ஆழ்த்துவது பிளாக்மெயில் செய்வதற்கு ஒப்பாகும். அரசும் வரட்டு கௌரவம் பாராமல் பேச்சு வார்த்தை நடத்துவது நலம். அதோடு 'தமிழ் விழாவுக்கு அரசு உத்தரவின்பேரில் பஸ் விட வேண்டியிருப்பதால் ஐயப்ப பக்தர்களுக்கு பஸ் இல்லை' என்ற அபவாதத்துக்கும் இடமில்லாமல் அரசு பார்த்துக் கொள்ள வேண்டும்.





• கின்னஸ் சாதனை?

● **கிருஷ்ணன், சென்னை.**

? சீசன் எப்படி?

! இப்பத்தானே ஆரம்ப விழாக்களே ஆரம்பமாகியிருக்கின்றன! திரிவேணி ஆர்ட்ஸ் சொஸைட்டியில் சுகுணா புருஷோத்தமனுக்கு "சுருதி சாகரம்" விருது. அவர் லயசாகரமும் கூட. தின்னியம் வேங்கடராம அய்யர், முசிறி சுப்பிரமணிய அய்யர் ஆகியோரிடம் பாடம் கேட்டவர். இரண்டு கைகளாலும் தாளம் போட்டு பாடக் கூடியவர்! பல்லவி எக்ஸ்பர்ட். அதோடு பாட்டு சொல்லிக் கொடுப்பதற்கு ஒரு பட்டம் உண்டு என்றால் முதலில் இவருக்குத்தான். தெரியாமலா தமிழ்நாடு அரசு கர்நாடக இசைக் கல்லூரியில் விசிடிங் புரொஃபஸராய் இழுத்துப் போட்டார்கள்!



• சுருதி சாகரம்

நுங்கம்பாக்கம் கல்சுரல் அகாடமி கின்னஸ் சாதனை புரிய விரும்பியோ என்னமோ 625 கலைஞர்களைக் கொண்டு 32 நாட்களுக்கு தினம் நாலு நிகழ்ச்சிகளைத் தருகிறது! சீசன் டிக்கெட்டே புத்தகம் மாதிரி கனக்கிறது. முதல் நாள் விருது பெற்ற மனோஹர், பத்மா சுப்பிரமணியம், கே. வி. நாராயணசுவாமி ஆகியோருக்கு இணையாகப் பாராட்டுக்கு உள்ளானவர் காரியதரிசி நடராஜன். வெள்ளி விழாவில் தங்கப் பதக்கங்கள் தந்து, தமிழ் - ஆங்கிலம் கலந்து கர்ஜித்து, அமர்க்களம் பண்ணி விட்டார் போங்கள்!



• புகழில்...

• தெவிட்டிய கண்ணியம்

● **பாரதி முருகன், மணலூர்பேட்டை.**

? வரும் 1995 பற்றி?

! 94-ஐ விட மோசமாகவா இருந்து விடப் போகிறது? தைரியமாக இருங்கள். கல்கி வாசகர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!





• ...குளிர் காய்கிறார்



36

அஞ்சனா காரை அதிகபட்ச விரைவில் ஓட்டிக் கொண்டிருந்தாள். பின்னிருக்கையில் ராஜாராமனுடன் உட்கார்ந்திருந்த அமராவதியின் உணர்ச்சிகள் உலகத்தின் மிகச் சக்தி வாய்ந்த மொழி என்று ஒன்று இருக்குமாயின் அதன் சொற்களுக்குள் கூட அடங்காதவையாக இருந்தன.

"ஏம்ப்பா, அது அவர்தானா. இல்லே, இவ பாட்டுக்கு வேற யாரை யாவது தப்பாப் புரிஞ்சுண்டு கூப்பிட்டுட்டாளா?"

"பதறாதேம்மா. போய்ப் பார்த்தா தன்னால தெரியறது."

மணிக்கொடி

"அவருக்குச் சாப்பிடறதுக்கு ஏதாவது எடுத்துண்டு வந்திருக்கலாம். தோணவே இல்லே. அவருக்குப் பிடிச்ச வெங்காய அடை தட்டினோம், எடுத்துண்டு வந்திருக்கலாம்."

அஞ்சனாவின் உதடுகள் புன்சிரிப்பால் மேனோக்கி வளைந்தன...

அமராவதி அடையை மறந்தாலும் இன்னொரு முக்கியமான விஷயத்தை மட்டும் மறக்கவில்லை. நரேந்திரநாத்தின் கடிதங்களுக்கெல்லாம் அவ்வப்போது தான் எழுதி வைத்த பதில்கள் அடங்கிய உறையை அவள் எடுத்து வந்திருந்தாள். அவன் விலாசம் தெரியாததால் கடிதங்களைத் தபாலில் அனுப்ப முடியவில்லை, ஆயினும் என்றாவது சந்திக்கும் போது நேரில் தந்து தனது உணர்ச்சிகளையெல்லாம் கொட்டி எழுதியிருந்த கடிதங்களைப் படிக்கச் சொல்லலாம் என்ற எண்ணத்தில் அவற்றைத் தொகுத்து வைத்திருந்தாள். அதை அவனிடம் தர முடியுமா, அனுமதிப்பார்களா என்பதொன்றும் தெரியவில்லை. முயன்று பார்க்கலாமே என்ற ஆசையில் எடுத்து வந்திருந்தாள்.

கப்பலின் நுழைவாயிலில் கங்காதரனுடன் பவித்திரா பரபரப்பே உருவாய் நின்றிருந்தாள். ராஜாராமன் தமது நண்பர் நாராயண அய்யர் உதவியுடன் கப்பல் அதிகாரியை சந்தித்து, நரேந்திரநாத்துடன் சில நிமிஷங்கள் தனிமையில் பேச அனுமதி பெற்றார். அவ்வதிகாரி அச்சிற்றறையில் இருந்த பிற கைதிகளை மற்றொரு சிற்றறைக்கு மாற்றி விட்டு நரேந்திரநாத் மட்டும் அங்கிருக்கப் பணித்தார். ஐந்து பேரும் சன்னல் வழியே நரேந்திரநாத்துடன் பேசினார்கள்.

கன்னத்துத் தழும்பும், நெற்றியின் கீறலும் நரேந்திரநாத் பானர்ஜியின் முகச்சாயலை மாற்றி இருந்தன. ஆனால், தலையில் ஒரு நரை கூட இல்லை.

"நரேன், மை சன், மை டியர் சன்" என்றவாறு உள்ளே கை விட்ட ராஜாராமனை நோக்கிச் சிரித்தபடி அவரது கையைப் பிடித்துக் கொண்ட நரேந்திரநாத், அதை முத்தமிட்டபின், "சன் இல்லே, சார். சன்-இன்-லா" என்று அவரைத் திருத்திச் சிரித்தான். ராஜாராமனால் சிரிக்க முடியவில்லை. சிறு குழந்தை மாதிரி விம்மினார்.

"தமிழை மறக்காம இருக்கேளா?" என்று அஞ்சனா கேட்க, "தமிழை எப்படி மறப்பேன்?" என்ற அவன், ராஜாராமனின் கையை விட்டு விட்டு அஞ்சனாவின் கையை உள்ளே

ஜோதிர்லதா கிரிஜா

இழுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டபின் அதை விடுவித்தான்.

"இவன் யாருன்னு பவித்திரா சொன்னாளா?" என்று கங்காதரனைக் காட்டி அஞ்சனா வினவினாள்.

"பவித்திரா! என் மகளின் பெயரா அது? எவ்வளவு அழகான பெயர்! அவளோடு வந்தது சின்னக் குழந்தையாக நான் பார்த்த 'கங்காடமூன்' என்று புரிந்து கொண்டேன்."

அமராவதி துடைக்கத் துடைக்க மேலும் மேலும் பெருகிய கண்ணீரைத் திரும்பத் திரும்பத் துடைத்தபடி நின்றிருந்தாள். அடுத்து அவன் பார்வை ஆழமாக அவள் மீது படிந்ததும், "அப்பா, வாங்கப்பா. அவா ரெண்டு பேரும் கொஞ்ச நேரம் ஃப்ரீயாப் பேசிக்கட்டும்," என்று அஞ்சனா கூறினாள். எல்லாருமே அப்பால் நகர்ந்தனர்.

"அமராவதி மை லவ்! மை ஒன்லி லவ்."

இருவரும் கைகோத்துக் கொண்டு உருகினார்கள்.

"எங்கே, உங்கள் அந்தக் கையைக் காட்டுங்கள்."

முழங்கைக்குக் கீழே துண்டிக்கப்பட்டிருந்த அந்தக் கையை அவன் நீட்டினான்.

"விபத்தில் கை போயிற்று என்று எழுதி இருந்தீர்கள். என்ன விபத்து என்று விவரம் ஏதும் இல்லை."

"நாங்கள் வைத்துள்ள இரகசிய வெடி குண்டுத் தொழிற்சாலையில் ஒருநாள் ஒரு குண்டு வெடித்து இப்படி ஆகி விட்டது. இன்னொருவனுக்கு இரண்டு கால்களும் போய் விட்டன. ஆனால் அதை எண்ணி வருந்தும் நேரமில்லையே இது. இந்த நிமிஷத்தில் என்னை விட மகிழ்ச்சியானவன் எவனும் இந்த உலகத்தில் இல்லை, அமராவதி. நீயும் அப்படித்தானே?"

"ஆமாம்."

நரேந்திரநாத் பானர்ஜி அவளது கையை அழுத்தினான். அதை முகத்துக்கு எடுத்துச் சென்று கன்னங்களில் தேய்த்துக் கொண்டு கண்ணீர் விட்டான்.

"அமராவதி உனக்கு நான் மிக மிக நன்றி சொல்ல வேண்டும். உன்னைப் பாராட்டவும் வேண்டும்."

"எதற்கு?"

"நம் குழந்தையைப் பெற்று வளர்த்து என்னிடம் காட்டியதற்காக நன்றி. எவ்வளவு அபவாதத்தை நீ ஏற்றுச் சகித்திருப்பாய் என்பது புரிவதால் பாராட்டு. பாவத்தில் பிறந்ததாகக் கருதாமல், 'பவித்ரா' என்று பெயர் சூட்டினாயே அதை எண்ணி எண்ணிப் பெருமிதப்படுகிறேன். அது சரி, அம்மா எங்கே? சந்தடியில் மறந்தே போனேன்."

அவள் சேதியைச் சொன்னதும் நரேந்திரநாத் உடைந்து போனான்.

மணிக்கொடி - முன்கதை

சுதந்திரப் போராட்ட வீரர்களான ராமசாமி – ராஜாராமன் இருவரும் கதையை மாறி மாறிக் கொண்டு போகிறார்கள். ராஜா ராமனின் மூத்த மகன், தனது தீவிரவாத நடவடிக்கைகளால் லண்டனில் இருந்து (படித்துக் கொண்டிருந்தவன்) பிரான்ஸுக்குத் தப்பிப் போய், அங்கு கைது செய்யப்பட்டு இறந்து விடுகிறான். மூத்த மகள் அஞ்சனா, திருமணமாகி, ஒரு குழந்தைக்குத் தகப்பனான, மனைவியை இழந்த ராமசாமியை காதலிக்கிறாள். இளையவளான அமராவதி,

சீக்கிரமே தன்னை தேற்றிக் கொண்டு, "நம் மகள் மிக அழகாக இருக்கிறாள். உன்னைப் போல் நற்குணமுள்ளவளாகவும் தெரிகிறாள்," என்றான். இருக்கிற நேரத்தில் துயரங்களை எண்ணாமல் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள ஆசைப்பட்டான்.

"உங்களைப் போல் துணிச்சல்காரியும் கூட. கல்லூரிப் படிப்பை நிறுத்தி விட்டு தேச விடுதலை இயக்கத்தில் சேரப் போகிறாளாம்!"

"சபாஷ்! ஆனாலும் படிப்பை முதலில் முடிக்கட்டும்."

"உங்களின் ஒவ்வொரு கடிதத்துக்கும் அவ்வப்போது நான் எழுதிய பதில்களையெல்லாம் கொண்டு வந்திருக்கிறேன். தரட்டுமா?"

"அதனால் ஆபத்துக்கள் நேரலாம், அமராவதி. அது நியாயமும் இல்லை. நம்மைச் சந்திக்க அனுமதித்த அதிகாரிக்கு அதனால் தொந்தரவு ஏற்படக்கூடும். இப்போது வேண்டாம். பிறிதொரு சந்தர்ப்பம் வாய்க்கவே செய்யும். அப்போது பார்த்துக் கொள்ளலாம்."

"அந்தமான் சிறையில் எத்தனை நாள் இருக்க வேண்டும்?"

"பதினான்கு வருடங்கள்."

"அய்யோ! அதற்குள் நான் கிழவியாகிச் செத்தும் போயிருப்பேன்."

"அப்படியெல்லாம் பேசாதே, அமராவதி. அப்போது, உனக்கு ஐம்பத்தொரு வயதுதான் ஆகி இருக்கும். எனக்கு ஐம்பத்தைந்து ஆகும். இதெல்லாம் ஒரு வயதா?"

"......................"

"பவித்திராவைக் கூப்பிடு அமராவதி. அவளை நான் இன்னும் கொஞ்ச நேரம் பார்த்து அவளது உருவத்தை என் நெஞ்சில் பதித்துக் கொள்ள வேண்டும்."

அவள் கூப்பிட்டதும் பவித்திரா வந்தாள்.

அமராவதியின் கையை விடுவித்து மகளின் கையைப் பற்றி இழுத்துக் கொண்ட

கல்கத்தாவைச் சேர்ந்த தீவிரவாதியான நரேந்திரநாத் பானர்ஜியைக் காதலித்து, திருமணம் முடித்து, ஒரு பெண் குழந்தைக்கும் தாயாகிறாள். இந்நிலையில் நரேந்திரநாத் பானர்ஜி ஆங்கிலேய அரசால் கைதாகிறான். ஒரு கை துண்டிக்கப்பட்ட நிலையில் அந்தமானுக்குச் சிறை செல்லவிருந்தவன், வழியில் சென்னை துறைமுகத்தில் கப்பல் நிற்க, அங்கு கப்பலை வேடிக்கை பார்க்க வந்த பவித்ரா, நரேந்திரநாத் பானர்ஜிதான் தன் தந்தை என்பதைத் தெரிந்து கொண்டு, வீட்டுக்குத் தகவல் தருகிறாள். ராஜாராமன், அஞ்சனா, அமராவதி, யாவரும் பானர்ஜியைக் காண, துறைமுகம் விரைகிறார்கள்.

நரேந்திரநாத் பானர்ஜி, "தேச விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடப் போகிறாயாமே?" என்றான்.

"ஆமாம். உங்கள் மகள் பின் வேறென்ன செய்வாளாம்?"

"அந்தப் பையன் கங்காதரன்?"

"அவரும்தான்."

மகன் கவனிக்காத கணம் பார்த்து இருவரையும் சுட்டிக்காட்டி நரேந்திரநாத், அமராவதியை நோக்கிக் கண்ணடித்தான். அவள் சிரித்தாள். 'இருவரும் காதலிக்கிறார்களா?' என்ற கேள்வியும், 'அப்படித்தான் தோன்றுகிறது' என்ற பதிலும் இருவர் செயல்களிலும் ஊடாடின.

"நேரமாகிறது. நீங்கள் கலைந்து செல்ல வேண்டும் உடனே" என்று வெள்ளைக்கார கப்பல் அதிகாரி அங்கு வந்து தெரிவித்தார்.

37

காரிலிருந்து இறங்கி வீட்டுக்குள் நுழைந்ததும் சோபாவில் பொத்தென்று விழாக்குறையாக உட்கார்ந்த அமராவதி உணர்ச்சிகளின் பிடியில் சிக்கி அழத் தொடங்கினாள்.

"அம்மா, அம்மா, இப்ப எதுக்கும்மா அழறே? இத்தனை வருஷம் பிரிஞ்சிருந்த அப்பாவைச் சந்திக்கிற நாள் வரும்கிற நம்பிக்கையாவது உனக்கு இருந்ததா? இன்னிக்கு நாம் எல்லாரும் அவரைச் சந்திச்சதும் பேசினதும் எவ்வளவு பெரிய அதிருஷ்டம்" என்றபடி அவளுக்கு அருகே நெருங்கி உட்கார்ந்து, கண்ணைத் துடைத்தாள் பவித்திரா.

அமராவதி அழுகையை நிறுத்திக் கண்களைத் துடைத்துக் கொண்டு வேதனையுடன் புன்னகை செய்தாள்.

"நீ சொல்றது சரிதான், பவித்ரா. ஆனா அந்தமான்ல இன்னும் பதினாலு வருஷம் அடைபட்டுக் கிடக்கணுமேங்கிறதை நினைச்சா என்னமோ பண்றது... அவர் பதினாலு வருஷம் கழிச்சு ரிலீஸ் ஆறதுக்குள்ள சுதந்திரம் கிடைச்சுடுமாப்பா?"

ராஜாராமன் சிரித்தார். "அப்படி அதுக்குள்ள கிடைச்சுட்டா, எல்லா அரசியல் கைதிகளையும் உடனடியா விடுதலை பண்ணிடுவாளேம்மா? தண்டனைக் காலம் முடியற வரைக்கும் காத்திண்டிருக்க மாட்டாளே? ஏன்னா அது அப்ப நம்ம சர்க்காரான்னா இருக்கும்?"

"ஏம்ப்பா? நீங்க என்ன நினைக்கிறேள்? இந்தியாவுக்கு எப்ப சுதந்தரம் கிடைக்கும்னு நீங்க நினைக்கிறேள்?" என்றாள் அஞ்சனா.

"காந்தியோட சாத்துவீகச் சட்ட மறுப்புப் போராட்டம், ஒத்துழையாமை இயக்கம் இதுகளோட மதன்லால் திங்ரா, சாவர்க்கர் மாதிரியான ஆட்களோட தீவிரவாத நடவடிக்கைகளும் சேர்ந்தாத்தாம்மா நல்லது. காந்தி மாதிரி ஆட்கள் வெள்ளைக்காரனோட பேசியும் எழுதியும் நாடு நாடாப் பிரயாணம் பண்ணி பிரிட்டனுக்கு எதிரா உலக அபிப்பிராயத்தை உருவாக்கியும் அவாளோட ரத்தம் சிந்தாத வழியில போராட்டும். இந்தப் புரட்சிக்காரா பாட்டுக்குக் கிடைச்ச சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திண்டு வெள்ளைக்காரனை அடிச்சுப் போட்டும் மிதிச்சுப் போட்டும், 'இனி இந்தியாவில இருக்கிறது ஆபத்துடா. மூட்டை முடிச்சோட ஓடிடறதுதான் நல்லது'ன்னு நினைக்கும்படியான காரியங்கள்ல ஈடுபடட்டும். இப்படி ரெண்டு விதமாவும் தாக்கினா ஒருநாள் அவன் பொறுக்க முடியாம பிச்சண்டு ஓடிடத்தான் போறான்."

"ஆனா வன்முறையால அவனை விரட்ட முடியாதுன்னுதானே சரித்திரம் சொல்றது சார்" என்றான் கங்காதரன். எத்தனை எத்தனையோ அரசர்களும், சிற்றரசர்களும், ஏன்? ராணிகளும் கூட, அவனை எதிர்த்துப் போரிட்டிருக்காளே. ஜான்சி ராணி, கிட்டூர் சென்னம்மா, கட்டபொம்மன், மருது சகோதரர்கள், குன்வர் சிங், நானா சாகிப், அஜீமுல்லாகான், ராம் சிங், தத்தியா தோப், பிகாஜி காமா இப்படி எத்தனையோ பேர் இன்னிக்குப் போராடறவாளுக்கு முன்னோடிகளா இருந்திருக்கா, பலன் என்ன? ஒண்ணுமில்லையே!"

"கங்காதரா உனக்கு வாசுதேவ் பல்வந்த் பட்கேயைப் பத்தின சுவாரசியமான கதை தெரியுமோ?"

"என்ன சார்?" என்றான் கங்காதரன் ஆவலுடன்.

"வாசுதேவ் பல்வந்த் பட்கே மகாராஷ்டிர மாகாணத்தைச் சேர்ந்தவன். அரசாங்க உத்தியோகம் பார்த்துண்டிருந்தான். உரிய நேரத்துல மேலதிகாரிகள் - வெள்ளைக்காரா லீவ் குடுக்காததுனால அவனால தன்னோட அம்மாவை அவளுடைய உயிர் பிரி



"கதாகாலட்சேபம் பண்ணினவர் இப்போ கச்சேரி பண்ண ஆரம்பிச் சுட்டார்."

"ஆடியன்ஸுக்கு நடுவில் தட்டு எடுத்து வசூல் பண்ணும்போதே நினைச்சேன்!"

-பரணி

யறதுக்கு முன்னாடி பார்க்க முடியல்லே. அது அவனுக்கு வெள்ளைக்காரா மேல அடக்க முடியாத கோபத்தை உண் டாக்கித்து. அப்புறம் பரோடா மன்னரை வெள்ளைக்காரங்க ஆட்சி பீடத்துலேருந்து சதி பண்ணி இறக்கிட்டதுனால மகாராஷ் டிர மாகாணம் முழுக்க அந்த நேரத்துல ஒரே கொந்தளிப்பில இருந்தது. மோசமான பஞ்சம் வேற அப்ப. பிரிட்டிஷ் அரசாங்கம் பஞ்சத்துல பாதிக்கப்பட்ட ஜனங்களுக்காக எதுவுமே செய்யல்லே. எல்லாமா சேர்ந்து பட்கேக்கு ஆத்திரமூட்டியது. ஐக்கிய வர்த் தினி சபான்னு ஒரு அமைப்பை ஏற்படுத்தி மக்களைச் சந்திச்சு பிரிட்டிஷாருக்கு எதிரா நிறையப் பேரை அணி திரட்டினான். பிரிட் டிஷாருக்கு எதிரா இன்னிக்கு ஆயுதம் ஏந் தற தீவிரவாதிகளுக்கெல்லாம் பட்கேதான் முன்னோடி. கவர்ன்மெண்ட் கஜானாக் களைக் கொள்ளையடிச்சுப் பணம் திரட்டி ஒரு படையும் திரட்டிண்டான். பிரிட்டி ஷாரை அப்பப்ப தாக்கினான். கவர்ன் மெண்ட் தொடர்பு நிலையங்களையெல்லாம் முடிஞ்சப்பல்லாம் தவிடுபொடியாக்கினான். அவனோட தலைக்கு அரசாங்கம் விலை வெச்சுதுன்னா பார்த்துக்குங்களேன். அவன் பதிலுக்கு என்ன பண்ணினான், தெரி யுமோ?"

"என்ன சார் பண்ணினான்?"

"பம்பாய் கவர்னரைப் பிடிச்சுக் குடுக் கிறவாளுக்கு நானும் பரிசு தருவேன்னு பதி லுக்கு அறிக்கை விட்டான்! அதுல கவர்ன் மெண்ட்டையும் பயங்கரமாத் தாக்கி மிரட்டி இருந்தான். கடைசியில அவனைப் பிரிட் டிஷ்காரங்க பிடிச்சுட்டாங்க. அந்தமான்ல சிறை வைக்கிறது கூட ஆபத்துன்னு பயந்து, அவனை ஏடனுக்கு அனுப்பினாங்கன்னா, அவன் மேல வெள்ளைக்காரங்களுக்கு இருந்த பயத்தை நாம ஊகிச்சுக்கலாம். ஏடன்ல ஈவு இரக்கமில்லாத மோசமான நிலையில சிறைவைக்கப்பட்டதால, பட்கே, கடைசியிலே, சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து 1883 ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் செத்துப் போனான்."

"வருஷம் மாசம், முதற்கொண்டு ஞாபகம் வைச்சிண்டிருந்து சொல்றேனே, சார்! அப்படின்னா எவ்வளவு ஆர்வத் துடிப்பு இருக்கணும் உங்களுக்கு!" என்று கூறியவாறே கங்காதரன் எழுந்தான்.

"என்ன பிரமாதமா சொல்லிட்டேன்? மிஸ்டர் ராமசாமியை விடவா பேசிடப் போறேன்? நான் ரொம்ப விசாரிச்சேன்னு சொல்லு... போன மீட்டிங்ல பார்த்தது. இனி அடுத்த மீட்டிங்லதான் பார்த்துப்போம்..."

"சரி, சார்" என்று கூறி விடைபெற்றான் கங்காதரன்.

பவித்திரா அவனை வழியனுப்பி வைக்க எழுந்து போனாள்.

நடந்து சென்ற இருவரையும் பார்த்தபடி, "ரெண்டு பேரும் நல்ல ஜோடி. இல்லே?" என்றாள் அஞ்சனா மெதுவாக.

"ஆமா, நரேன் கூட எங்கிட்ட கேட்டார் - 'ரெண்டு பேரும் லவ் பண்றாளா'ன்னு. 'அப்படித்தான் தோணறது'ன்னு சொல்லி வெச்சேன். எனக்கு நிச்சயமாத் தெரியல் லேன்னாலும், தனக்கு ஒரு நல்ல பையன் மாப்பிள்ளையா வரப் போறான்கிற சந் தோஷமாவது அவருக்கு அந்தமான் ஜெயில்ல மிஞ்சட்டுமேன்னுதான்" என்றாள் அமராவதி.

(தொடரும்)



"பாடகர் கச்சேரி பண்ணும்போது நடுநடுவில் என்னவோ சொல்றாரே!"

"விளம்பரங்களையும் அவரேதான் சொல்லணும்னு ஸ்பான்ஸர் பண்ற வங்க சொல்லிட்டாங்களாம்!"

– குழல்



INVITES DEPOSITS

Fixed Deposits will be accepted at the following rates of interest and subject to the terms and conditions as indicated in the form of application of deposit available at the administrative Office and other branch offices of the Company.

DEPOSIT SCHEMES

CUMULATIVE DEPOSIT SCHEME			FIXED DEPOSIT SCHEME	
Period in Months	For Rs. 1000 Deposit Amount Payable on Maturity	Effective Annual Yield	Period in Months	Rate of Interest per annum Monthly Quarterly
12 Months & 1 Day	Rs. 1150/-	15.00%	12 Months & 1 Day	
24 Months & 1 Day	Rs. 1321/-	16.05%	24Months & 1 Day	
36 Months	Rs. 1518/-	17.27%	36 Months	
48 Months	Rs. 1745/-	18.63%	48 Months	14% 14.16%
60 Months	Rs. 2006/-	20.12%	60 Months	

RECURRING DEPOSIT SCHEME (Minimum Rs. 500/-)			
Period in Months	Rate of Interest Per Annum	Maturity Value (for Rs. 500)	For Every Additional Rs. 100/-
12 Months & 1 Day	14%	Rs. 6480/-	Rs. 1296/-
24 Months & 1 Day		Rs. 13915/-	Rs. 2783/-
36 Months		Rs. 22470/-	Rs. 4494/-

1. Interest warrants payable at par at all branches of SBI.

Information required to be specified as per Non-Banking Financial Companies (Reserve Bank) Direction, 1977 and Non Banking Financial Companies and Miscellaneous Non Banking Financial Companies (Advertisement) Rules, 1977, are given below.

A. Name of the Company : The Investment Trust of India Ltd.

B. Date of Incorporation : 2nd August 1946

C. Business carried on by the Company and its subsidiaries with details of branches or units, if any :

Business : Hire Purchase Financing, Investments, Leasing, Industrial Financing, Mortgage Financing etc.

Subsidiary : I.T.I. Pioneer AMC Ltd. And I.T.I. Capital Markets Ltd.

Branches : Refer to Head Office.

D. Brief Particulars of the Management of the Company.

The Company is managed by the Managing Director under the supervision, direction and control of the Board of Directors.

E. Name, address & occupation of the Directors.

Mr. B.H. KOTHARI, Chairman & Managing Director, "Kothari Bagh", 11, Nungambakkam High Road, Madras-600 034, Industrialist. Mr. A.L. MUDALIAR, "Avanti", 838, Poonamallee High Road, Kilpauk, Madras- 600 010, Business Executive & Management Consultant. Mr. G.K. SUNDARAM, "Ranakondalu" Circuit House Road, Coimbatore-641 018, Industrialist. Mr. G. CHIDAMBAR, 101-A, Janakpuri, 2nd St. Off: Velachery Road, Madras-600 032, Former Managing Director-LIC. Mr. N. SRINIVASAN, T-18, Sixth Avenue, Besant Nagar, Madras-600 090, Chartered Accountant. Mr. RAM GANAPATHI, No. 27, "Ashok Crescent", D.L.F. Kudap Enclave, Phase-1, Gurgaon, Haryana - 122 001, Former Chairman of BIFR. Mr. C.R. RAMAKRISHNAN, "Meenakshi", No.4, Sir P.S. Sivasamy Road, Mylapore, Madras 600 004, Former Joint Managing Director of Larsen & Toubro Ltd. Mr. M.R. SHAH, A-23/24, Woodlands Apartments, Peddar Road, Bombay 400 026, Business.

ஒரு பிக்செட் டெபாசிட் முதிர்வடையும்வரை, வாழ்க்கை பல ஆண்டுகள் காத்திருக்காது என்பது எங்களுக்குப் புரிகிறது

➢ ஒரு பிக்செட் டெபாசிட்டில் நீங்கள் முதலீடுசெய்யும்போது, முதிர்வு காலம் முடியும் முன்பே பணத்தை எடுத்துக்கொள்ளும் எண்ணம் உங்களுக்கு அநேகமாக இருக்காது. ஆனால் அவசரத் தேவைகள் வரத்தான் செய்கின்றன. அத்தகைய காலங்களில், போட்ட பணத்தை மிக விரைவாக திரும்பப் பெறவே நீங்கள் விரும்புவீர்கள். ➢ ITI டிரஸ்ட் ப்ளஸ் இதையறிந்து, நீங்கள் எண்ணிப் பார்க்கமுடியாத அளவுக்கு முன்பே உங்கள் பணத்தைத் திருப்பித் தந்துவிடுகிறது. அதற்கு அறுபது நிமிடங்கள் ஆனாலே அதிகம்தான். ஆனால், மிக வேகமாக செயல்படுவது மட்டுமே எங்களின் சிறப்பம்சமா? அதே வேகத்துடன் நாங்கள் வழங்கும் மற்ற சேவைகளையும் சற்று பாருங்கள். ➢ இலவச வரி ஆலோசனை *. எங்களது 35 கிளை அலுவலகங்கள் மூலம் எங்களுடன் நீங்கள் எளிதில் தொடர்புகொள்ளலாம். இன்னும் எத்தனையோ 'கூடுதல் நன்மைகள்'. எடுத்துக்காட்டாக, டெபாசிட் செய்ய நீங்கள் எங்களிடம் வரவேண்டிய சிரமமில்லை; நாங்களே உங்களிடம் வருகிறோம். ➢ இவை அனைத்தும் ITI தரும் கூடுதல் நன்மைகள். இந்தக் காரணங்களால்தான், தென்னிந்தியாவிலுள்ள பெரும்பாலான குடும்பங்கள் ITI-யில் முதலீடு செய்வதில் முனைந்துள்ளன. இது நம்பிக்கையின் அடிப்படையில் உருவான மரபு. இப்படி இன்னும் எத்தனையோ! எனவே சிந்தித்து செயல்படுங்கள். ITI-யைப் பொறுத்த வரை, இதை உடனடியாகச் செய்வது எளிது. எனினும், நீங்கள் விரும்பினால், இதற்கு ஒரு மணி நேரம்தான் ஆகும். ITI எனில் கூடுதலான நன்மைகள் பல!

தி இன்வெஸ்ட்மென்ட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா லிமிடெட்.

ஒரு H. C. கோத்தாரி குரூப் கம்பெனி

"மஷ்கூர் பில்டிங்ஸ், 1, கிருஷ்ணமாசாரி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

தொ.பே: 8276297, 8274871, 8274885, 8271691.

* இந்த சேவை சென்னைக்கு மட்டுமே விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இந்த சேவையால் ஏற்படும் பொறுப்புகளுக்கு ITI பொறுப்பாளி அல்ல.

(F) Profits of the Company before and after making provisions for tax for the three financial years immediately preceding the date of advertisement

(G) Dividend declared by the Company in respect of the said year. (Rupees in lakhs percentage).

	Profit before Depreciation & taxation	Profit before taxation	Profit after taxation	Amount (Rs. in lakhs)	Percentage
	(Rupees in lakhs)				
31-3-94	752.74	434.91	411.91	76.27	35
31-3-93	474.57	307.08	291.08	76.27	35
31-3-92	312.81	187.44	183.19	56.10	28

(H) Summarised financial position of the Company as appearing in the two latest Audited Balance Sheets

LIABILITIES	31-3-94 (Rs. in lakhs)	31-3-93	ASSETS	31-3-94 (Rs. in lakhs)	31-3-93
Share Capital	217.88	217.67	Fixed Assets	3239.01	2438.88
Reserves & Surplus	1233.31	897.35	Investments	341.13	315.66
Secured Loans	3229.69	2766.40	Current Assets, Loans & Advances	8871.19	6066.06
Unsecured Loans	3290.77	2802.41	Miscellaneous Expenditure	14.79	16.22
Current Liabilities	2535.08	1916.60			
Provisions	159.39	136.39			
	[illegible]	[illegible]		[illegible]	[illegible]

Note : Contingent Liabilities not provided for

(i) On partly paid Shares and Debentures — Rs. 5.08 lakhs

(ii) Sales tax on lease contracts under writ petitions — Rs. 22.35 lakhs

I. The amount which the company can raise by way of deposit under Reserve Bank of India directions — Rs. 143.64 crores.

Aggregate of deposits actually held on the last day of the immediately preceding financial year, viz 31-3-94 — Rs. 37.88 crores.

J. The Company has no over due deposits other than unclaimed deposits.

K. It is hereby declared that :-

(i) The company has complied with the applicable provisions of the directions.

(ii) The compliance with the directions does not imply that the repayment of deposits is guaranteed by the Reserve Bank of India.

(iii) The deposits accepted by the Company are unsecured and rank pari passu with other unsecured liabilities.

The above text of this advertisement has been approved by the Board of Directors on 27-5-94

(By order of the Board)
For The Investment Trust of India Limited

P.S. Balasubramanian
Chief Executive and Secretary.

Note : A copy of this text duly signed by a majority of the Directors of the Company has been filed with the Reserve Bank of India, Bangalore.

நிவாரணம்

ஊரே உருக்குலைந்து விட்டது.

புயலின் போது கொட்டிய பேய் மழையால் பயிர் பச்சைகள் முற்றிலும் மூழ்கி நாசமாகின. நகரங்களும் குக்கிராமங்களும் தனித்தனி தீவுகளாக மாறி, பசியும் பஞ்சமும் புயலை விடக் கோரத்தாண்டவம் ஆடின. கூடுதல் துன்பமாகக் குடிநீரும் கெட்டு, கொள்ளை நோய்கள் பரவி, பீதியை ஊட்டின.

குடிசைக்குள் தேங்கி நின்ற மழை நீரை வெளியேற்றி, பெருக்கித் துடைத்து கோணி சாக்குகளை விரித்து குழந்தைகள் இரண்டையும் படுக்க வைத்திருந்தாள் வீராசாமியின் மனைவி வீரம்மாள்.

அன்று பகலில் யாரோ கொண்டு வந்து கொடுத்து விட்டுச் சென்றிருந்த சாம்பார் சோற்றுப் பொட்டலங்களில் ஆளுக்கொன்று கொடுத்து விட்டு, புருஷனுக்கென்று ஒன்றைச் சட்டியில் போட்டு மூடி வைத்துக் காத்திருந்தாள்.

'பாழா போற மானம் ஒரேயடியா பொத்துக்கிட்டு ஊத்துச்சி. நடவு நாத்துன்னு நாலு எடத்துக்கு போவ முடியாம அடிச்சிது. அதெல்லாம் பத்தாதுன்னு பெயல்காத்து வேற. என்னெமாதி ஏழை பாழைல்லாம என்னா செய்றது?'

'எனக்குன்னு வாய்ச்ச ஆம்பளயப்பத்தி சொல்லவே வேணாம். கட்டா காலியெல்லாம் தேவலாம். ரெண்டு புள்ளக்கி தகப்பன் இப்படியா இருக்கிறது?

'காலம்பற போன மனுசன்... இருக்கமா செத்தமான்னு கூட வந்து திரும்பிப் பாக்கலம். இந்த ஆளுக்கெல்லாம் ஒரு குடும்பம் குட்டின்னு ஏன்?'

வீரம்மாளின் மனம் அரற்றியது.

அந்தி சாய்ந்து, இரவு ஏற ஏற அவளின் மனம் அளவற்று ஓலமிடத் தொடங்கியது.

முழங்கால்களுக்கிடையில் நன்றாக முகத்தைப் புதைத்துக் கொண்டு உடலைக் குறுக்கிக் கொண்டாள். பசி வயிற்றைப் பிசைந்தது. மனம் கணக்கற்ற எரிச்சலை உணர்ந்தது. திரும்பத் திரும்ப புயல் காற்றே அவளை மோதி அலைக்கழித்தன.

அரை உறக்கமும், மயக்கமும், கவலையுமாக குந்திக் கிடந்தவளை காலடி அரவம் திடுமெனக் குலுங்கி நிமிர வைத்தது. புருசன் தான் வருகிறான் என்பதை அவள் உள்ளுணர்வுகள் உணர்ந்து கொண்டன. ஒரு பக்கம் 'அப்பாடா' என்ற நிம்மதியையும், மறு கணம் இதுவரை சற்றே குறைந்திருந்த எரிச்சல் மீண்டும் கிளர்ந்தெழுவதையும் உணர்ந்தாள்.

கூரையிழந்த அந்தக் குடிசையின் ஒரு மூலையில் சுவரோரம் முணுக்முணுக்கென்று காற்றில் ஆடி எரிந்து கொண்டிருந்த சிம்னி விளக்கொளியில் வாசலில் வந்து பாதி நனைந்த அரை வேஷ்டியை கையில் பற்றியவாறு ஆடி அசைந்து நின்ற புருசனின் விழிகள் மாறுதலாய்... செவசெவத்து இருந்ததையும் ஒரே வீச்சில் கண்டு கொண்ட வீரம்மாளிடம், சுறுசுறுவென சினம் பற்றிக் கொண்டது.

அன்று முழுதும் அவன் மேல் அளவற்றுக் கனன்று கொண்டிருந்த அவளின் கோபத் தீயில் எண்ணெயைக் கொட்டியது போல் அமைந்தது அவன் வந்து நின்ற கோலம்.

"காலம்பற போன ஆம்பள பாதி ஜாமம் வரைக்கும் எங்க போயி வெட்டி முறிச்சய்யா? ச்சே! நீயெல்லாம் ஒரு ஆம்பளையாட்டம்" என்று வெடித்தாள்.

"குடிச்சிருக்கேன்னு பாக்குறியா? பகல் பூரா தாலுக்கா ஆபீசிலியே தாசில்தார் அய்யாவை பாக்கக் காத்துக்கிட்டு நின்னே...



ஆர்.ஐ. அய்யாவை தேடிக்கிட்டு தெருத் தெருவா சுத்துனோம். வேற எங்கயோ ஒரு கிராமத்துக்குப் போயிட்டாங்க. நாளைக்கு தான் நம்ம ஊரையெல்லாம் சுத்திப் பாத்து லிஸ்ட் எடுக்கப் போறாங்களாம். பொழுது போயிதான் அந்த வெவரமும் தெரிஞ்சிச்சி. ரொம்ப அலுப்பா இருந்திச்சி. நாட்டாம தான் கொஞ்சம் வாங்கிக் குடுத்தாரு."

"பொயலு அடிச்ச நாளா நெதைக்கும் இதயேதான்ய்யா சொல்லிக்கிட்டுத் திரியறே. இன்னைக்கு வராங்க. நாளைக்கு வராங்க. காலம்பற வராங்க, அந்திக்கு வராங்க. தோ வராங்க, லிஸ்ட் எடுக்குறாங்கன்னு தப்பு தான்ய்யா அடிக்கல நீ. ஆனா... ஒன்னால ஒன்னு ஆவல. வூட்டு அடுப்பும் இன்னும் பொகைஞ்ச பாடு இல்ல. நாளு தவறுனாலும் நீ குடிச்சிட்டு ஆடறது மட்டும் தவறுல" - என்ற வீரம்மா, மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க, சட்டியில் வைத்து மூடியிருந்த சோற்றுப் பொட்டலத்தை எடுத்து வந்து அவன்முன் 'பொத்'தென வைத்தாள்.

சோற்றுப் பொட்டலத்தைக் கண்டதும், வீராசாமியின் விழிகளில் இதுவரை ஏறியிருந்த செம்மை பொசுக்கென மாறியது. இரண்டு கைகளாலும் பொட்டலத்தை அவசரம் அவசரமாகப் பிரித்தான்.

"உருமநேரத்துல கொண்டாந்து வூடு வூடா குடுத்துட்டுப் போனாங்க. ஒன்னை எடுத்து வச்சிகிட்டு குந்திக் கெடந்தேன். கூறு கெட்ட ஜென்மத்துக்கெல்லாம் எங்க புரிய போவுது?"

"அது கெடக்குது வுடு புள்ள. வா. ரெண்டு பேரும் ஆளுக்குக் கொஞ்சமா திம்போம். நீ தின்னுருக்க மாட்ட, பாவம்" என்ற வீராசாமியின் குரலில் ஏகமான மாறுதல் இழைந்தது.

சோற்றைப் பிசைந்து ஒரு கவளத்தை அவள் வாயருகே கொண்டு போன வீராசாமியை அவள் தடுத்து பிகு பண்ணினாள். ஆனாலும், அவளின் உள்மனம் சந்தோஷத்தால் சிலிர்த்துக் கொண்டது.

அவளின் பொய் எதிர்ப்பை முறியடித்து அவள் வாயில் சோற்றைத் திணித்தான். அவ்வப்போது அவன் வாயிலும் அவளாகவே முன்வந்து சோற்றை அள்ளித் திணித்தாள். இருவரின் விழிகளிலும் அளவிடற்கரிய ஆனந்தம் மின்னியது.

மறுநாள் விடிந்த போது...

'டொக்' 'டொக்'கென்று கடப்பாறையால் தனது சிறிய குடிசை வீட்டின் மண் சுவரை இடிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்த வீராசாமியை, "ஏன்யா, இப்ப செவுத்த இடிக்கற?" எனப் பதறிப் போய் கேட்டாள் வீரம்மா.

"இன்னக்கி அதிகாரிகள்லாம் நம்ம தெருவுல பொயல் சேதத்தை பாத்து லிஸ்ட் எடுக்க வாராங்கல்ல."


"வந்தா?"

"முழுசா சேதப்பட்டிருந்தாதான் புள்ள ஒதவித் தொகையும் முழுசா கெடைக்கும். இல்லன்னா அர கொறையா எழுதிக்கிட்டுப் போயி நெவாரணத்தைக் கொறச்சிப்பிடுவாங்க. பேப்பர்ல்லாம் வந்திருக்குதே, கூரை வூடு சேதப்பட்டிருந்தா ஐநூறு ரூவான்னு பொயலு அடிக்கறதுக்கு முன்னாடியே ஆடர் போட்டிருக்குது" என்ற வீராசாமியை சட்டென்று கையைக் காட்டித் தடுத்தாள் வீரம்மா.

"பொயல் அடிக்கறதுக்கு முந்தியே ஆடர் போட்ட கெவர்மெண்டு பொயல் அடிச்சி பத்து பதினோரு நாளா வந்து நமக்கு நெவாரணம் குடுக்குதா? நல்லாயிருக்குய்யா நாயம், நீ வேற ராப் பகலா தாலுக்கா ஆபீசுக்கு அலையிறே. வேல வெட்டிக்குகூட போவாம, இது எங்கய்யா அடுக்கும்? அரசனை நம்பி புருசனை கைவுட்ட மாதி இருக்குற செவத்தையும் இப்பிடி இடிக்கிறியே இது ஒனக்கே நல்லாயிருக்காய்யா?"

ராஜகுரு





"இணைபிரியாத சகோதரர்கள்ங் கறது சரிதான்!"

— விஜிதா

"எனக்கும் மனசு கேக்கலதான் புள்ள. செவுரு முழுசா நின்னா நெவாரணம் கெடைக்குலன்னா என்னா செய்றது?" - என்ற வீராசாமி, தொடர்ந்து கடப்பாரையை ஓங்கிப் போட்டு சுவர்களை இடித்துத் தள்ளினான்.

அன்று முழுதும் யார் யாரோ அதிகாரிகள் வந்து போனார்கள். குடிசைகளைச் சூழ்ந்து நின்றிருந்த வெள்ளமும் சிறிது சிறிதாக வடிந்து கொண்டிருந்தது.

மறுநாள் பொழுதும் விடிந்தது.

அன்று புயல் நிவாரணம் வழங்கப்பட உள்ளதாக வி.ஏ.ஓ. வந்து நேற்றிரவே செய்தி சொல்லியிருந்தார். குப்பத்தைச் சேர்ந்த குடிசைவாசிகள் அனைவருமே அரக்கப் பரக்கக் கிளம்பி வட்டாட்சியர் அலுவலகம் நோக்கி நடந்தனர்.

குழந்தைகளோடு வீராசாமியின் வரவை ஒவ்வொரு நிமிடமும் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தாள் வீரம்மாள். பசித்த குழந்தைகளுக்கும் தகப்பனின் வருகையை எடுத்துக் கூறி சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள்.

மதியம் கழித்து மாலையும் வந்தது. புயலடித்து அன்றோடு பன்னிரெண்டு நாட்கள் நகர்ந்திருந்ததை மனசுக்குள் எண்ணிக் கணக்கிட்டாள்.

'இந்தப் பன்னெண்டு நாளா... வேணாம். ஒரு பத்து நாளா வேலைக்கி போயிருந்தா ரெண்டு பேருக்கும் நெதம் கொறைச்சலா அறுவது ரூவா மேனி கூலி கெடச்சிருக்கும், பாதி செலவழிஞ்சாலும் முன்னூறு ரூவா தேறியிருக்கும். ஏரநூறு கீத்து வாங்கி கூரையை மூடியிருக்கலாம். இந்தக் கூறு கெட்ட ஆம்பள நாம்ப சொல்றத இம்மியாச்கம் கேட்டாதான? போன எடத்துல என்னா ஆச்சோ? எம்மாங் குடுத்தாங்களோ? அந்தி சாயப் போவுது. ஆளயே காணோம். ம். பகப் பொழுது போயிட்டுது. ராப்பொழுது எப்பிடி போவப் போவுதோ? பெரியாச்சிக்குத் தான் வெளிச்சம்.'

"என்னா புள்ள பொலம்புற? இந்தா. பசங்களுக்கு தீனி வாங்கிக்கிட்டு வந்துருக்கேன்" என்ற வீராசாமி, கழுத்தில் போட்டிருந்த அழுக்குத் துண்டின் முனையில் முடிந்து வந்த பொட்டலங்களைக் கொட்டினான் வீரம்மாளுக்கு எதிரில்.

காய்ந்து கிடந்த குழந்தைகள் இரண்டும் ஓடி வந்து பொட்டலங்களை அள்ளியெடுத்து அவசர ஆவலோடு பிரித்துத் தின்ன ஆரம்பித்தன.

அவன் புயல் நிவாரணம் வாங்கி வந்து விட்டான் என்பது அவளுக்குப் புரிந்தது. 'அப்பாடா' என்ற நிம்மதிப் பெருமூச்சு அவளிடமிருந்து வெளிப்பட்டது.

"இந்தா புள்ள. இன்னக்கும் வாங்கப் பட்ட பாடு அப்பாடி" என்றான், பெரும் சாதனை புரிந்து வந்தவனைப் போல வீராசாமி.

அவன் நீட்டிய ரூபாய் நோட்டுகளை வாங்கிப் பிரித்தாள். நூறு ரூபாய் இருந்தது. அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.


"தலைக்கு நூத்தி அம்பது ரூவா புள்ள. அம்பதை அங்கயே புடுச்சிகிட்டு நூறு குடுத்தாங்க. வி.ஏ.ஓ. எடுத்து அனுப்பிச்ச லிஸ்ட்டுலயே பாதி பேர கலெக்டர் நீக்கிப்பிட்டாராம். அதனால கெடைக்காதவங்களுக்கு நாங்கள்ளாம் தலைக்கு அம்பது சேத்துக் குடுத்தோம். பாவம்" என்றான் வீராசாமி பெருமையாக.

"இந்த நூறு ரூவாய வாங்கிக்கிட்டு வர இத்தினி நாளா அலயணுமாய்யா? இந்த பொட்டச்சி பேச்ச கேட்டிருந்தா... இருந்த செவுத்தையும் இடிச்சிருக்க வேண்டியதில்ல. பன்னெண்டு நாளா அலய வேண்டில்ல. பசியும் பட்டினியுமா நாம கெடந்து காய வேண்டில்ல. பொயல் நெவாரணம் வாங்கிட்டல்ல பெரிசா? இன்னும் வேலக்கி போவலாமில்ல. நீயெல்லாம் ஒரு ஆம்பள. ச்சே!" என்ற வீரம்மா, தனது குழந்தைகள் இரண்டும் எதையும் கவனிக்காமல் தின்பண்டங்களை பறந்து பறந்து தின்பதைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

'இனிமே நெவாரணத்துக்கு அலயறமாரி நெலமையில நாம்ப இருக்கக் கூடாது' என்று அவள் மனம் சங்கற்பித்துக் கொண்டது.

மண்ணெண்ணெய் சிம்னியைக் கொளுத்தி வைத்தாள். மனசுக்குள் ஆறுதலாக உணர்ந்தாள்.





‘‘மாதங்களில் மார்கழி நான்.

பகவான் கூறுகிறார்:

சூரியோதயத்துக்குச் சற்று முன்புள்ள நேரம் பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது. ஆத்ம சாதனத்துக்கு அது சிறந்த வேளையாகும். மனிதர்களுடைய ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். தை மாதமாகிய உத்தராய புண்ணிய காலம் அவர்களுக்கு சூரியோதயம். அதிலிருந்து உத்தராயணம் ஆறு மாதம் அவர்களுக்கு பகல். ஆடியிலிருந்து மார்கழி வரையில் தக்ஷிணாயணம் அவர்களுக்கு இரவு. அதில் மார்கழி மாதம் விடியற் காலம் தேவர்களது நாளில் பிரம்ம முகூர்த்தமாகிறது. அப்பொழுது செய்யும் தேவாராதனை, வந்தனை, வழி பாடு முதலியன மனதை நன்கு பண்படுத்த வல்லவைகளாம். இங்ஙனம் மார்கழி மாதம் புலனடக்கம், கடவுள் வழிபாடு ஆகியவைகளோடு முழுதும் இணைக்கப்பட்டிருக்கிறபடியால் மாதங்களுள் தாம் மார்கழி மாதம் என்கிறார் பகவான்.

ஸ்வீட்களில் சிறந்தது **கிராண்ட் ஸ்வீட்ஸ்**

இனிப்புகள்:— மங்களூர் போளி, ரஸமலாய், ஸோன்பப்டி, இனிப்பு சோமாஸ், பொரிவிளங்காய் ,உருண்டை, தேங்காய் கோவா குங்குமப்பூ ஹல்வா.

காரவகைகள்:— தட்டை, தேன்குழல், கைமுறுக்கு, சீடை, ஸ்பெஷல் மிக்ஸர், சீப்புச்சீடை, இரயில்கட்டிடம், வறுபயறு, விஜிடபிள் சமோசா.

பொடிவகைகள்:— கருவேப்பிலைபொடி, பருப்புப்பொடி, இட்லிபொடி, ரசப்பொடி, சாம்பார்பொடி, உறுகாய்பொடி.

திருமண வைபவங்களுக்கு:— சீர்முறுக்கு, சீர்அதிரசம், முள்ளுத்தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால், அப்பம் முதலியன.





தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை-600 020.
போன்: 412557

'கஜினி'யுடன் கை குலுக்கலாம்!

'Virtual Reality வந்து விட்டது என்றால் நம்ம திரைப்படத் தயாரிப்பே புரட்சிகரமாக மாறிவிடக் கூடிய சூழ்நிலை உள்ளது''- சமீபத்திய பேட்டி ஒன்றில் கமல் சொன்னது இது.

திரையிலேயே மூன்றாவது பரிமாணத்தைக் காட்டி, சினிமா பார்ப்பதற்கு பதில் சினிமாவை உணரச் செய்யும் டெக்னிக்தான் Virtual Reality. கம்ப்யூட்டர்களின் துணையுடன் மனித இனம் அடைந்திருக்கும் கற்பனைக் கெட்டாத சாதனை! இது மட்டும் சுலபமாகவும் குறைந்த செலவிலும் கை வந்துவிட்டால், அப்புறம் கமலஹாசனிடமும் ரஜினி காந்திடமும் கால் ஷீட்டுக்கு அலையாமல் தயாரிப்பாளர்கள் செயல்படலாம். சம்பந்தப்பட்ட நடிகரின் அனுமதி பெற்று அவரது 'பிம்பத்தைத் திரையில் உருவாக்கி, கம்ப்யூட்டர் உதவியுடனேயே காதல் புரிந்து, சண்டை போட்டு, டூயட் பாட வைக்கலாம்! இன்னும் கமலின் முகமும் ரஜினியின் வேகமும் கொண்ட ஒரு புதிய 'கஜினி' நடிகரை உருவாக்கிக் கூட பிரபலப் படுத்தலாம். எப்படி செய்கிறார்கள் என்பதுதான் மில்லியன் டாலர்




* சாதாரணமாகத் தோன்றும் அறை...



கேள்வி. அமெரிக்கர்கள் கண்டுபிடித்து இப்போது ஐரோப்பியர்களும் நிறைய ஈடுபட்டுள்ள இந்தத் தொழில் நுட்பம் நம்மைப் போன்ற சராசரிகளுக்குப் புரிய வேண்டுமானால் ஒரு மருத்துவ உதாரணம் கை கொடுக்கும்:

ஜெர்மனியில் Virtual knee என்ற செயற்கை கால் மூட்டு ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். மருத்துவ மாணவர்கள், arthroscopy என்ற மூட்டுப் பரிசோதனையைப் பழகிக் கொள்வதற்கு முன்பெல்லாம் பிளாஸ்டிக் மூட்டுகள் பயன் படுத்தப் பட்டன. நிஜ மூட்டுக்களின் எலும்பு, நரம்பு, குருத்தெலும்பு, தசை நார், இத்தியாதி அப்படியே பிளாஸ்டிக்கில் வடிவமைக்கப்பட்டிருக்கும். இதை நிஜ மூட்டாக பாவித்து, ஆர்த்ரோஸ்கோப் என்ற கருவியை உள்ளே எப்படி செலுத்தி, எப்படி பார்வையிடுவது என்று மருத்துவர்கள் பழகிக் கொள்வார்கள். (வயிற்றை ஆராயும் endoscope போல மூட்டை ஆராய்வது arthroscope)



*Virtual reality யில் முப்பரிமாணத்துடன் புலனாகிறது.

இப்போது வர்சுவல் மூட்டு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. நிஜ மூட்டின் 64 குறுக்கு வெட்டுத் தோற்றங்களைப் படிப்படியாக இணைத்து இதைத் தயாரித்திருக்கிறார்கள். ஒரு டிரான்ஸ்மிட்டர் உதவியுடன் மானிட்டர் திரையில் இந்த முப்பரிமாண மூட்டு பிம்பம் தெரியும். அதே பிம்பத்தின் பிளாஸ்டிக் பிரதி ஒன்றும் இருக்கும். ஆர்த்ரோஸ்கோப்பை பிளாஸ்டிக் பிரதிக்குள் நுழைத்து இயக்கும்போதே அது எந்தப் பாதையில் எப்படி செல்கிறது என்று திரையில் பார்க்க முடியும்! அதாவது ஆர்த்ரோஸ்கோப்பை எப்படி இயக்கினால் எப்படி செல்லும், எந்த நரம்பை அல்லது, குருத்தெலும்பை அணுகுகிறோம் என்றெல்லாம் திரையில் பார்த்துக் கற்றுக் கொள்வதோடு, திருத்திக் கொள்ளவும் முடியும்.

பிளாஸ்டிக் பிரதிக்கும் கம்ப்யூட்டர் பிம்பத்துக்கும் தொடர்பு ஏற்படுத்த, நுணுக்கமான சென்சார்கள் (censor-இல்லை; Sensor - உணரும் கருவிகள்) பொருந்திய கையுறைகள் அணிய வேண்டும். Data glove என்று இந்த கையுறைக்குப் பெயர்.

Virtual சினிமா என்பதும் இப்படி முப்பரிமாண effect உடன் இருக்கும். ஸ்பெஷல் கண்ணாடிகள், ஹெட்போன்ஸ், கையுறைகள் உதவி கொண்டு சினிமாவை உணருவோம்.

இந்த டெக்னிக்கைப் பயன்படுத்தி தனி உலகங்களையே கம்ப்யூட்டரில் படைக்கலாம்; அந்த உலகங்களில் குடியிருக்கலாம்; அங்கு நாமே சிருஷ்டிக்கும் மனிதர்களுடன் உறவாடலாம்! நம் பேரன் பேத்திகள் காலத்தில் இதெல்லாம் சர்வ சாதாரணமாகி விடக்கூடும். அப்போது நிஜ உலகம் என்பதே செயற்கையாகத் தோன்றுமோ என்னவோ!

தொகுப்பு: யுரேகா
நன்றி: டியூட்ஸ் லேண்ட்

அமரர் கல்கி

பார்த்திபன் கனவு

இதுவரை...

பார்த்திப சோழன் ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்னால் உறையூரில் ஆட்சி செலுத்திய சிற்றரசன். அந்நாளில் தென்னாட்டில் பிரசித்த சக்ரவர்த்தியாயிருந்த காஞ்சி நரசிம்ம பல்லவனுக்கு அவன் கப்பம் செலுத்த மறுத்துப் போருக்கு ஆயத்தமாகிறான். யுத்தத்துக்குப் புறப் படுவதற்கு முன்னால் பார்த்திபன் தன் மகன் விக் கிரமனைச் சித்திர மண்டபத்துக்கு அழைத்துப் போகிறான். அங்கே வெகு நாளாய்ப் பூட்டிக் கிடந்த கதவைத் திறந்து கொண்டு உள்ளே செல்கிறான். சோழ ராஜ்யத்தின் வருங்கால மகோன்னதத்தைப் பற்றிப் பார்த்திபன் கண்டு வந்த பகற் கனவுகள் அந்த இரகசிய மண்டபத்தின் சுவர்களில் அவன் கையினால் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பார்த்திபன் இளவரசனுக்குக் காட்டி, அந்தக் கனவு களை உண்மையாக்கப் பாடுபடுவதாய் அவனிடம் பிரதிக்ஞை வாங்கிக் கொள்கிறான். அருகில் தீவட்டி ஏந்தி நின்ற படகோட்டி பொன்னனை இளவரசனுக் குத் துணையாயிருக்கும்படி ஆக்ஞாபிக்கிறான்.

ராணி அருள்மொழி தேவியிடமும் இளவரசனி டமும் விடை பெற்றுக் கொண்டு பார்த்திபன் போருக்குக் கிளம்புகிறான். பார்த்திபனின் மாற்றாந் தாய் மகனும், சோழர் படையின் பழைய சேனாதி பதியுமான மாரப்ப பூபதி போருக்குக் கிளம்பும் சமயத்தில் மூர்ச்சையாகி விழுந்து விட்டான் என்று செய்தி வருகிறது. பார்த்திபன் புன்னகை கொள் கிறான்.

புரட்டாசி பௌர்ணமியன்று வெண்ணாற்றங் கரையில் சோழர் படையும் பல்லவ சைன்யமும் சந்திக்கின்றன. மகத்தான பல்லவ சைன்யத்தின் முன் சோழரின் சிறு படை அதிவிரைவில் சின்னா பின்னமாகிறது. ஆனால், சோழர் படையில் ஒருவன் கூடத் திரும்பிச் செல்லவில்லை; அவ்வளவு பேரும் வீரப் போர் புரிந்து யுத்தகளத்திலேயே மடிகிறார்கள்.

போர் நடந்த அன்று இரவு யுத்தகளத்தில் சிவனடியார் ஒருவர் எதையோ தேடி அலைந்து கொண்டி ருக்கிறார். சோழர் களின் பட்டத்து யானை பார்த்திபனுடைய உடலைக் கண்டு பிடித்து அதன் அருகில் விழுந்து உயிர் விடுகிறது. சிவனடியார் அங்கே சென்று பார்த்திபனுடைய உடலை மடியில் போட்டுக் கொண்டு முகத்தில் தண்ணீர் தெளிக் கிறார். பார்த்திபனுக்கு உணர்வு வருகிறது. தன் னுடைய புதல்வன் விக்கிரமனை வீர புருஷனாக வளர்க்க வேண்டுமென்று சிவனடியாரிடம் பார்த்தி பன் வரம் வாங்கிக் கொள்கிறான். சிவனடியார் தமது ஜடா முடியை நீக்கியதும், பார்த்திபன், "ஆஹா! தாங்களா?" என்று அளவிலாத வியப்புடன் கூறி விட்டு உயிரை விடுகிறான்.

இதன் பிறகு ஆறு ஆண்டுகள் செல்கின்றன.

ஓர் அதிகாலை நேரத்தில், காவேரி நதிக்கரை யோரச் சாலையில் ஆஜானுபாகுவான ஒருவீரன் குதிரையில் செல்கிறான். ஓர் இடம் வந்ததும் அந்த வீரன் சிவனடியாராக வேஷம் தரித்துக் கொண்டு, பொன்னனின் குடிசைக்குச் செல்கிறான். சிவனடி யார், மகாராணி அருள்மொழித்தேவியையும் இள வரசனையும் அழைத்துவரச் சொல்கிறார். வரும் புரட்டாசிப் பௌர்ணமியன்று சிராப்பள்ளி மலைமீது பறக்கும் பல்லவர் கொடியை எடுத்தெறிந்து விட்டு சோழர் கொடியான புலிக் கொடியைப் பறக்கவிடப் போவதாகவும், அதற்குத் தனது சித்தப்பா மாரப்ப பூபதி உதவிசெய்யப் போவதாகவும் இளவரசன் விக்கிரமன் சிவனடியாரிடம் கூறுகிறான்.

அதற்கு ஆசிவழங்கிய சிவனடியார், புறப் படச் சித்தமாகிறார். அப்போது மகா ராணி இளவரசன் உயிரைக் காக்கும் பொறுப்பைச் சிவனடியார்தான் ஏற்க வேண்டும் என்று அவரி டம் வாக்குறுதி வாங்கிக் கொள்கிறாள்.

மாமல்லபுரத் துக்கு நரசிம்ம சக்ரவர்த்தி

யும் அவர் மகள் குந்தவிதேவியும் விஜயம் செய்கிறார்கள். மாமல்லபுரத்துக்கு அப்பெயர் ஏற்பட்ட காரணத்தைக் குந்தவிக்கு விளக்கிக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு தூதன் வந்து, சோழ இளவரன் விக்கிரமன் தனது சோழநாட்டின் சுதந்திரக் கொடியைப் பறக்க விடும் தகவலடங்கிய ஓலையைக் கொடுக்கிறான். "அப்பா, அந்த ராஜகுமாரனுக்கு எத்தனை அகந்தை! அவனுக்குத் தகுந்த தண்டனை கொடுக்க வேண்டும்!" என்கிறாள் குந்தவி.

"ஆமாம், அவனை காஞ்சிக்கு அழைத்து வரச் செய்து நானே தகுந்த தண்டனை விதிக்கப் போகிறேன்!" என்கிறார் சக்கரவர்த்தி.

6. கலைத் திருநாள்

மாமல்லபுரத்தில் சக்கரவர்த்தி மூன்று தினங்கள் தங்கியிருந்தார். அந்த மூன்று நாட்களும் அந்நகரம் ஆனந்த கோலாகலத்தில் மூழ்கிக் கிடந்தது.

முதல் நாள் பட்டணப் பிரவேச ஊர்வலம் வந்தது. சக்கரவர்த்தியையும் அவருடைய திருமகளையும் மாமல்லபுரவாசிகள் அவரவர்களுடைய வீட்டு வாசலில் தரிசித்து உபசரித்து மகிழ்ந்தார்கள்.

மறுநாள் சரஸ்வதி பூஜையன்று காலையில் நகரவாசிகள் தத்தம் வீடுகளில் வாணி பூஜை நடத்தினார்கள். பிற்பகலிலும் சாயங்காலத்திலும் பொது இடங்களில் கலைமகளின் திருநாளைக் கொண்டாடினார்கள். கோயில்கள், மடாலயங்கள், கலா மண்டபங்கள், வித்யாசாலைகள் எல்லாம் அமோகமான அலங்காரங்களுடன் விளங்கின.

அன்று சக்கரவர்த்தியும் குந்தவி தேவியும் சிவன் கோயில்களுக்கும் விஷ்ணு ஆலயங்களுக்கும் சென்று சுவாமி தரிசனம் செய்து, அர்ச்சகர்களுக்குச் சன்மானம் அளித்தார்கள். கலைக் கூடங்களுக்கும், வித்யாசாலைகளுக்கும் விஜயம் செய்து, ஆசாரியர்களுக்குப் பொன்னும் புது வஸ்திரங்களும் பரிசளித்தார்கள். அவர்கள் நகரில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போகும்போதெல்லாம் வீதியில் ஜனங்கள் கும்பல் கும்பலாக நின்று பலவித வாழ்த்தொலிகளினால் தங்களுடைய குதூகலத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

ஆனால், மாமல்லபுரவாசிகளுடைய குதூகலத்தின் முழு அளவையும் மறுநாள் விஜயதசமியன்றுதான் பார்க்கக் கூடியதாயிருந்தது. அன்று திருவிழா நகருக்கு வெளியே நடந்தது.

மாமல்லபுரத்துக்குத் தெற்கே நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் பரவி நின்ற சிறு குன்றுகளும் பாறைகளும் அன்று அற்புதமான தோற்றங்கொண்டு விளங்கின. பாறைகளின் சுவர்களிலெல்லாம் விதவிதமான வர்ண வேறுபாடுகளுடன் புராணக் கதைகள் சித்திரிக்கப்பட்டிருந்தன. ஒரு விசாலமான பாறையிலே, நந்த கோகுலத்தில் பாலகோபாலன் செய்த லீலைகள், பூதனை சம்ஹாரத்திலிருந்து காளிங்க நர்த்தனம் வரையில் வெகு அழகாகச் சித்திரிக்கப்பட்டிருந்தன. தயிர் கடைந்து கொண்டிருந்த யசோதையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு வெண்ணெய் வேண்டுமென்று கண்ணன் கெஞ்சிக் கொண்டிருந்த சித்திரத்தைப் பார்த்தவண்ணமே வாழ்நாளைக் கழித்து விடலாமென்று



தோன்றியது.

இரு பிளவாகப் பிளந்திருந்த இன்னொரு பாறையில் ஆகாச கங்கையைப் பூமிக்குக் கொண்டு வருவதற்காகப் பகீரதன் கடுந்தவம் செய்த காட்சி சித்திரிக்கப்பட்டிருந்தது. அவனுடைய தவ மகிமையினால் கவரப்பட்டுத் தேவர்கள், முனிவர்கள் எல்லாரும் வந்து இருபுறமும் நிற்கிறார்கள். அவர்களுடைய முகங்களில் வியப்பும் பக்தியும் காணப்படுகின்றன. இந்த ஒப்பற்ற சித்திரக் காட்சியை எழுதிய ஓவியக்காரன் நகைச்சுவை நிரம்ப உள்ளவனாகவும் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் ஒரு மூலையில் கண்ணை மூடிக் கொண்டு தவஞ் செய்வதாகப் பாசாங்கு செய்த ஒரு பூனையின் உருவத்தையும் அவன் எழுதியிருந்தான்.

இந்த மாதிரி எத்தனையோ அற்புதச் சித்திரக் காட்சிகள் ஒவ்வொரு பாறை முகப்பிலும் காணப்பட்டன. இந்தக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டு ஸ்திரீகளும் புருஷர்களும் சிறுவர் சிறுமிகளும் கும்பல் கும்பலாக அங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லாரும் பட்டுப் பட்டாடைகளை அணிந்து, திவ்ய ஆபரணங்களைப் பூண்டிருந்தார்கள். ஸ்திரீகள் கூந்தலில் மலர் சூடியிருந்தார்கள். புருஷர்கள் கழுத்தில் பூமாலைகளை அணிந்திருந்தார்கள். எங்கே பார்த்தாலும் ஒரே கோலாகலமாகவும் குதூகலமாகவும் இருந்தது.

ஜனங்களின் குதூகலத்தை அதிகப்படுத்துவதற்குச் சித்திரக் காட்சிகளைத் தவிர இன்னும் பல சாதனங்களும் அங்கேயிருந்தன.

ஆங்காங்கு வாழை மரங்களாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட சிறுசிறு பந்தல்கள் காணப்பட்டன. அந்தப் பந்தல்களில் இசை விருந்துகள் நடந்து கொண்டிருந்தன. ஒரு பந்தலிலிருந்து குழலோசை வந்து கொண்டிருந்தது. வேறொரு பந்தலில் வேதியர்கள் ஸாமகானம் செய்து கொண்டிருந்தார்கள். மற்றொரு பந்தலில் ஓர் இசைப் புலவர் அப்பர் பெருமானின் தேவாரப் பதிகங்களைக் கல்லுங்கனியப் பாடிக் கொண்டிருந்தார்.

ஜனங்கள் அரவர்களுக்கு இஷ்டமான இடத்திலே போய் நின்று சித்திரக் காட்சிகளையும், இசை விருந்துகளையும் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்த தண்ணீர் பந்தல்களிலும் கூட்டத்துக்குக் குறைவில்லை. அவல் பொரியும் சர்க்கரையும் பானகமும் நீர்மோரும் வந்தவர்களுக்கெல்லாம் உபசரிப்புடன் வழங்கப்பட்டன.



இவ்விதம் கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே ஜனசமுத்திரமாய்த் தோன்றியதாயினும் அந்த ஜனத்திரளுக்கு மத்தியில் ஓரிடத்தில் மிகவும் நெருங்கிய ஜனக்கூட்டம் காணப்பட்டது. இக் கூட்டம் ஒரே இடத்தில் நிலைத்து நில்லாமல் போய்க் கொண்டிருந்தது. அந்தக் காட்சியானது, சிறு சிறு அலைகள் எழுந்து விழுந்து கொண்டிருக்கும் சமுத்திரத்தில் ஒரே ஒரு பெரிய அலை மட்டும் தொடர்ச்சியாகப் போய்க் கொண்டிருப்பது போல் தோன்

றியது. இந்தப் பெரிய அலைக்குக் காரணமாயிருந்தவர்கள், சக்கரவர்த்தியும் அவருடைய செல்லப் புதல்வியுந்தான். நரசிம்ம வர்மர் உயர்ந்த ஜாதிப் புரவி ஒன்றின் மேல் வீற்றிருந்தார். குந்தவி தேவியோ பல்லக்கில் இருந்தாள். இவர்களுக்கு முன்னாலும் பின்னாலும் கூட்டத்தை விலக்கி வழி செய்வதற்காக ஒரு சில வீரர்கள் மட்டுமே சென்றார்கள். அவர்களுக்குச் சற்று முன்னால், சக்கரவர்த்தியின் வருகையை அறிவிப்பதற்காக, ஒரு பெரிய ரிஷபத்தின் மேல் முரசு வைத்து அடித்துக் கொண்டு போனார்கள்.

ஜனத் திரளுக்கு இடையே சென்று கொண்டிருந்த இந்த ஊர்வலம் ஆங்காங்கு நின்று நின்று போக வேண்டியதாயிருந்தது. சித்திரக் காட்சியைப் பார்ப்பதற்காகச் சக்கரவர்த்தி நின்ற இடங்களில் எல்லாம் அவர் மேலும் குந்தவி தேவியின் மேலும் பூமாரி பொழிந்தார்கள். நறுமணம் பொருந்திய பனிநீரை இரைத்தார்கள். சந்தனக் குழம்பை அள்ளித் தெளித்தார்கள். "ஜய விஜயீ பவ!" என்றும், "தர்ம ராஜாதிராஜர் வாழ்க!" "திருபுவன சக்கரவர்த்தி வாழ்க!" "நரசிம்ம பல்லவேந்திரர் வாழ்க!" "மாமல்ல மன்னர் வாழ்க" என்றும் கோஷித்தார்கள்.

சக்கரவர்த்தி ஒவ்வொரு சித்திரக் காட்சியையும் விசேஷ சிரத்தையுடன் பார்வையிட்டு, ஆங்காங்கு பயபக்தியுடன் நின்று கொண்டிருந்த ஓவியக்காரர்களிடமும், சிற்பக் கலைஞர்களிடமும் தமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டு வந்தார்.

இவ்விதம் சுற்றிப் பார்த்துக் கொண்டு கடைசியாக ஊர்வலம் துர்க்கை ஆலயத்தண்டை வந்து சேர்ந்தது. இந்தத் துர்க்கை ஆலயம் மகேந்திரவர்மனின் காலத்திலே குன்றில் குடைந்து நிர்மாணித்தது. திருப்பணி வேலை இடையில் தடைப்பட்டுப் பூர்த்தியாகாமல் இருந்தது. அன்று நடந்த கோலாகலமான விழாக் கொண்டாட்டத்தில் இந்தத் துர்க்கை ஆலயந்தான் நடுநாயகமாயிருந்தது. அந்தப் பாறைக் கோயிலுக்கு எதிரே மிகவும் விஸ்தாரமான பந்தல் போடப்பட்டிருந்தது. அந்தப் பந்தலுக்கு உள்ளேயிருந்து அண்ணாந்து பார்த்தால் அமாவாசையன்று நள்ளிரவில் துல்லியமான ஆகாயத்தைப் பார்க்கிறோமோ என்ற பிரமை உண்டாகும். அவ்விதம் பிரகாசமான நட்சத்திரங்களைப் போல ஜொலித்த எண்கோணப் பொட்டுக்கள் அமைந்த நீலப் பட்டாடையினால் மேல்விதானம் கட்டியிருந்தார்கள். பந்தலின் தூண்களில் விதவிதமான வர்ணப் பட்டாடைகளைச் சுற்றியிருந்தார்கள். பந்தலுக்கு மேலே வரிசையாகச் சிங்கக் கொடிகள் மாலைக் கடற்காற்றில் அசைந்து ஆடிக் கொண்டிருந்தன. பந்தலின் விளிம்புகளில் இளந் தென்னங் குருத்துகளினாலான தோரணங்கள் தொங்கி ஆடிக் கொண்டிருந்தன.

பந்தலின் மத்தியில், தேவியின் சன்னதிக்கு எதிரே சக்கரவர்த்திக்கும் அவருடைய புதல்விக்கும் இரண்டு அழகிய சிம்மாசனங்களும், அவற்றைச் சுற்றிலும் வரிசை வரிசையாக இன்னும் பல ஆசனங்களும் அமைக்கப்பட்டிருந்தன. புலிகேசியின் படையெடுப்பினால் தடைப்பட்டுப் போன சிற்பத் திருப்பணியை இந்தத் துர்க்காதேவியின் கோயிலில் விஜயதசமி தினத்தில் மீண்டும் தொடங்குவதாக ஏற்பாடாகி இருந்தது. சக்கரவர்த்தி வருவதற்கு நெடுநேரத்திற்கு முன்னமேயே பந்தலில் மந்திரி மண்டலத்தாரும், மற்ற அதிகாரிகளும் வந்து அவர்களுக்குரிய ஆசனங்களில் அமர்ந்து விட்டார்கள். சக்கரவர்த்தியும் குந்தவி தேவியும் பந்தலுக்குள் வந்ததும் சபையினர் அனைவரும் எழுந்து நின்றதுடன், ஜயகோஷங்களும் வாழ்த்தொலிகளும் வாத்திய முழக்கங்களும் வானை அளாவி எழுந்தன.


7. திருப்பணி ஆரம்பம்

சக்கரவர்த்தியும் குந்தவியும் முதலில் கோவிலுக்குள்ளே சென்று அம்பிகையைத் தரிசித்து விட்டு வந்தார்கள். பந்தலின் நடுவில் அமைந்திருந்த சிம்மாசனங்களில் சக்கரவர்த்தியும் குந்தவிதேவியும் வந்து அமர்ந்ததும் மந்திரி மண்டலத்தாரும் மற்றவர்களும்

அருள்வாக்கு

நம் உடம்பு மாறுகிறது. குழந்தையாயிருந்த உடம்பு வேறே; நடுத்தர வயஸ்க்காரனின் உடம்பு வேறே. எத்தனையோ விதத்தில் மாறி, வளர்ந்து குழந்தையின் உடம்பு மத்யம பிராயத்தினனின் உடம்பாகிறது. அதற்கப்புறம் ஜரை (மூப்பு) வருகிறது. இதுவரை வளர்ச்சியால் மாறிய உடம்பு இனிமேல் தேய்வினால் மாற ஆரம்பிக்கிறது. தோல் மாறிச் சுருங்குகிறது. தலைமயிர் மாறி நரைக்கிறது. நமக்கு அப்படித் தெரியாவிட்டாலும், ப்ரதிக்ஷணமும் உடம்பு மாறிக் கொண்டேதானிருக்கிறது என்று டாக்டர்களும், ஃபிஸியாலஜிக்காரர்களும் சொல்கிறார்கள். அதாவது உடம்பை "நான்" என்று நினைக்கிறோமாயினும் அது க்ஷணத்துக்கு க்ஷணம் மாறிக் கொண்டு, அதாவது செத்துப் போய்க் கொண்டிருக்கிறது!

இப்படியேதான் மனஸை எடுத்துக் கொண்டாலும், போன ஸெகன்ட் அதற்குத் துக்கம்; இந்த ஸெகன்ட் ஸந்தோஷம்; அடுத்த ஸெகன்ட் கோபம். மனஸின் வளர்ச்சியும் அறிவின் வளர்ச்சியும் குழந்தைப் பிராயத்திலிருந்து எத்தனை வித்யாஸமாக மாறி இருக்கிறது? அப்புறம்



ரொம்ப விருத்தாப்யத்தில் இவையே தேய்ந்து ஓய்ந்தும் போய் விடுகின்றன. அதாவது மாறுதல் என்கிற அழிவின் ஓட்டம் நிற்பதே இல்லை. இப்படியே நம் உடம்பும் மனஸும் அழிந்து அழிந்து புதுப்புது ரூபம் எடுத்துக் கொண்டேயிருக்கும் போது அத்தனைக்கும் அடிப்படையாக இருக்கிற உயிர்த் தத்வம்தான் ஆத்மா. அது மாறுபடாத வஸ்து. அத்தனை நிலைக்கும் ஆதாரமாயிருந்து கொண்டு, "ஸூத்ரே மணிகணா இவ" என்று பகவான் (கீதை. 7-7) சொன்னபடி, பல மணிகளையும் ஒரே ஜபமாலையாகக் கோத்துக் கொடுக்கிற சரடு மாதிரி, அத்தனை மாறுபட்ட நிலைகளை அததுவும் தனியே சிதறிப் போய் நசித்து விடாமல், தொடர்புப்படுத்தி ஒரு வாழ்க்கையாகக் காட்டிக் கொடுக்கிற ஆத்மாதான் நிஜத்தில் நாம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

தத்தம் ஆசனத்தில் அமர்ந்தனர். கோயில் குருக்கள்மார் தொடர்ந்து வந்து சக்கரவர்த்திக்கும் மற்றவர்களுக்கும் விபூதி குங்குமப் பிரசாதங்களை அளித்து, மலர் மாலைகள் சூட்டி மரியாதைகள் செய்த பிறகு, மங்கள வாத்தியங்களின் முழக்கங்களுக்கிடையே சக்கரவர்த்தி தம் திருக்கரத்தினால் ஆசாரிய ஸ்தபதியின் தலையில் பட்டுப் பரிவட்டம் கட்டினார். பிறகு, உயர்ந்த பட்டு வஸ்திரங்களும் நூறு பொன் 'கழஞ்சு'களும் வைத்திருந்த தாம்பூலத் தட்டையும் அவரிடம் கொடுத்தார். அவற்றை ஆசாரிய ஸ்தபதி வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டார். அவ்விதமே அங்கு வந்திருந்த நூற்றுக்கணக்கான சிற்பிகளுக்கும் மந்திரி மண்டலத்தார்களும் மற்ற அதிகாரிகளும் தலையில் பரிவட்டம் கட்டிப் பட்டு வஸ்திரங்களையும் பொன் 'கழஞ்சு'களையும் பரிசளித்தார்கள்.

பின்னர் மந்திரி மண்டலத்தின் தலைவரான விஷ்ணு சர்மர் எழுந்து சபையோரைப் பார்த்துப் பேசினார். பல்லவ ராஜ வம்சத்தில் தோன்றிய பெயர் பெற்ற மன்னர்களின் வீரதீர பராக்கிரமங்களை அவர் வர்ணித்தார். அவர்களில் கடைசி மன்னரான மகேந்திரவர்மரின் அற்புத குணாதிசயங்களைப் புகழ்ந்தார். அவருடைய அருந்தவப் புதல்வரான மாமல்ல சக்கரவர்த்தி பட்டத்துக்கு வந்த பிறகு பல்லவ சாம்ராஜ்யத்தின் புகழ் கடல்களுக்கு அப்பாலும் பரவியிருக்கிறதென்றும், அதற்கு உதாரணமாக இந்தச் சபையிலேயே ஒரு சம்பவம் நடக்கப் போகிறதென்றும், செண்பகத் தீவிலிருந்து வந்திருக்கும் பிரதிநிதிகள் தங்களுடைய தீவைப் பல்லவ சாம்ராஜ்யத்தில் சேர்த்துக் கொண்டு பரிபாலிக்கும்படி சக்கரவர்த்தியை வேண்டிக் கொள்ளப் போகிறார்கள் என்றும் விஷ்ணு சர்மர் தெரிவித்த போது, சபையோர் தங்களுடைய குதூகலத்தைப் பலவித ஜயகோஷங்களினால் வெளியிட்டனர்.

மீண்டும் அமைச்சர் தலைவர் கூறியதாவது :- "மகாஜனங்களே! காஞ்சியும் மாமல்லபுரமும் பல்லவ சாம்ராஜ்யத்தின் இரு கண்களாகும். சாம்ராஜ்யத்துக்குத் தலைநகரமான காஞ்சி எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு துறைமுகப்பட்டினமான மாமல்லபுரம் நெடுநாளாக முக்கியமாயிருந்து வந்தது. ஆனால் காலஞ்சென்ற மகேந்திர சக்கரவர்த்தி இங்கே சிற்பத் திருப்பணியை ஆரம்பித்த பிறகு, காஞ்சியின் பெருமை சிறிது தாழ்ந்து மாமல்லபுரத்தின் புகழ் ஓங்கி விட்டது. எட்டு வருஷங்களுக்கு முன்பு நமது சக்கவர்த்திப் பெருமான் வடதேசத்துக்குப் படையெடுத்துச் சென்ற போது, இங்கு நடந்து வந்த சிற்பத் திருப்பணியை நிறுத்த வேண்டியிருந்தது. பாதகனான புலிகேசியைக் கொன்று வாதாபியைத் தீக்கிரையாக்கி விட்டுத் திரும்பிய பிறகு சில காலம் தேசத்திலிருந்த பஞ்சம் பிணிகளை நீக்கும் முக்கியமான பிரயத்தனங்களிலும், உள்நாட்டுச் சிறு பகைகளை அழிக்கும் முயற்சியிலும் சக்கரவர்த்தி ஈடுபட்டிருந்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள். பராசக்தியின் அருளினாலும், பல்லவ குலத்தின் பரம்பரையான தர்ம பலத்தினாலும், சக்கரவர்த்தி ஈடுபட்டிருந்த அந்தக் காரியங்கள் எல்லாம் இனிது நிறைவேறி விட்டன. சக்கரவர்த்தியின் திருப்பெயரைப் பூண்ட இந்தப் பட்டினத்திலே சிற்பத் திருப்பணிகள் இன்று மறுபடியும் ஆரம்பமாகின்றன. இனிமேல் சக்கரவர்த்தியும் இந்த நகருக்கு அடிக்கடி விஜயம் செய்து திருப்பணி வேலைகளை மேற்பார்வை செய்வதாக கிருபை கூர்ந்து வாக்களித்திருக்கிறார்."

இவ்விதம் அமைச்சர் தலைவர் கூறிச் சபையோரை ஆனந்தக் கடலில் ஆழ்த்திய பிறகு, செண்பகத் தீவின் தூதர்கள் சக்கரவர்த்தியின் சமூகத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களுடைய தலைவன் பேசியது தமிழ்மொழியேயானாலும் சற்று விசித்திரமான தமிழாயிருந்தபடியால், சபையோர்களுக்குப் புன்னகை உண்டு பண்ணிற்று.

அந்த தூதர் தலைவன் கூறியதின் சாராம்சம் பின்வருமாறு :-



செண்பகத் தீவின் வாசிகள், சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் கரிகால் சோழரின் காலத்தில் சோழ நாட்டிலிருந்து அங்கே போய்க் குடியேறிய தமிழர்களின் சந்ததிகள். அந்தத் தீவை ஆண்டு வந்த ராஜ வம்சம் சந்ததியில்லாமல் சில ஆண்டுகளுக்கு முன்பு நசித்துப் போய் விட்டது. ஆகவே, செண்பகத் தீவு தற்சமயம் ராஜா இல்லாத ராஜ்யமாயிருந்து வருகிறது. இதை அறிந்ததும் பக்கத்துத் தேசங்களிலுள்ள மக்கள் - முக்கியமாகத் தட்டை மூக்குச் சாதியினர் - அடிக்கடி செண்பகத் தீவில் வந்திறங்கிக் கொள்ளையிட்டும், இன்னும் பலவித உபத்திரவங்களை விளைவித்தும் செல்லுகிறார்கள். இதையெல்லாம் உத்தேசித்துச் செண்பகத் தீவின் ஜனங்கள் மகாசபை கூட்டி ஏக மனதாக ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதாவது தற்சமயம் தாய்நாட்டிலே பிரசித்த சக்கரவர்த்தியாய் விளங்கும் நரசிம்ம பல்லவேந்திரருக்குத் தூதனுப்பி, செண்பகத் தீவைப் பல்லவ சாம்ராஜ்யத்தில் சேர்த்துக் கொண்டு சக்கரவர்த்தியின் சார்பாகத் தீவை ஆட்சி புரிவதற்கு இராஜ வம்சத்தைச் சேர்ந்த வீர புருஷர் ஒருவரை அனுப்பும்படி பிரார்த்திக்க வேண்டியது.

சக்கரவர்த்தி, தூதர்களின் பிரார்த்தனைக்கு உடனே, மறுமொழி சொல்லவில்லை. சில நாள் யோசித்தே முடிவு செய்ய வேண்டுமென்றும், அதுவரை அந்தத் தூதர்கள் பல்லவ சாம்ராஜ்யத்திலுள்ள காஞ்சி முதலிய நகரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கலாமென்றும், ஒரு வாரத்துக்குள் அவர்களுக்கு மறுமொழி சொல்லக் கூடும் என்றும் தெரிவித்தார்.

இதன் பின்னர் நரசிம்மவர்மரும் குந்தவி தேவியும், மந்திரிகளும், ஸ்தபதிகளும், பின் தொடர்ந்து வர துர்க்காதேவியின் கோயிலுக்கு மறுபடியும் வந்தனர். அந்தக் கோயிலின் வெளிமண்டபத்தில் இருபுறத்துச் சுவர்களும் வெறுமையாக இருந்தன. சக்கரவர்த்தி ஒரு பக்கத்துச் சுவரின் அருகில் வந்து, குந்தவி தேவியின் கையிலிருந்த காவிக் கட்டியை வாங்கி, அந்தச் சுவரில் சித்திரம் வரையத் தொடங்கினார். அருகில் இருந்தவர்கள் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நிற்கும்போதே, வெகு சீக்கிரத்தில் சிம்ம வாகனத்தின் மீது போர்க்கோலத்துடன் வீற்றிருக்கும் துர்க்காதேவியின் திருஉருவம் அந்தச் சுவரில் சாக்ஷாத்காரமாய்த் தோன்றியது. குந்தவி தேவி பயம் தொனித்த குரலில், "அப்பா! தேவியின் உக்கிரம் தாங்க முடியவில்லை. யாருடன் அம்பிகை சண்டையிடுகிறாளோ அந்த அசுரனுடைய உருவத்தையும் எழுதி விடுங்கள்" என்றாள். உடனே சக்கரவர்த்தி, தேவிக்கு எதிரே கையில் கதாயுதம் தரித்த மகிஷாசுரனுடைய உருவத்தையும் எழுதினார். "இப்போதுதான் பயமின்றிப் பார்க்க முடிகிறது!" என்றாள் குந்தவி. பிறகு, சக்கரவர்த்தி அங்கே அருகில் நின்ற ஆசாரிய ஸ்தபதியைப் பார்த்து, "ஸ்தபதியாரே, இந்த விஜயதசமி தினத்தில்தான் அம்பிகை மகிஷாசுரனை வதஞ் செய்தாள். நமது திருப்பணியை அந்தக் காட்சியுடனேயே ஆரம்பித்து வைக்கலாமல்லவா?" என்றார். ஆசாரிய ஸ்தபதியும் வணக்கத்துடன் ஆமோதித்துத் தம் கையிலிருந்த கல்லுளியைச் சக்கரவர்த்தியின்பால் நீட்ட, சக்கரவர்த்தி அதை வாங்கிக் கொண்டு, தாம் எழுதிய சித்திரத்தின் மேல் கல்லுளியினால் சிலமுறை பொளிந்தார். பிறகு கல்லுளியை ஸ்தபதியிடம் கொடுத்தார். ஸ்தபதியார் அதைப் பக்தியுடன் பெற்றுக் கொண்டு அம்பிகைக்கும் சக்கரவர்த்திக்கும் வணக்கம் செலுத்தி விட்டுச் சிற்ப வேலையை ஆரம்பித்தார்.

அன்று முதற்கொண்டு பல வருஷ காலம் மாமல்லபுரத்தில் ஆயிரக்கணக்கான கல்லுளிகளின் சப்தம் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தது.

8. குந்தவியின் கலக்கம்

"புஷ்பேஷு ஜாதி புருஷேஷு விஷ்ணு:
நாரீஷு ரம்பா நகரேஷு காஞ்சி"

என்று வடமொழிப் புலவர்களால் போற்றப்பட்ட காஞ்சிமா நகரின் மாடவீதியிலே குந்தவிதேவி பல்லக்கில் சென்று கொண்டிருந்தாள். திருக்கோயில்களுக்குச் சென்று உச்சிகால பூஜை நடக்கும்போது சுவாமி தரிசனம் செய்து விட்டு வரும் நோக்

கத்துடன் அவள் சென்றாள். ஆனால், அவளுடைய உள்ளம் மட்டும் ஒரு வாரத்துக்கு முன்பு மாமல்லபுரத்தில் விஜயதசமியன்று கண்ட கோலாகலக் காட்சிகளிலேயே ஈடுபட்டிருந்தது.

அன்று ஆரம்பித்த திருப்பணிகளில் உலகம் உள்ள வரையில் தன் தந்தையின் புகழ் குன்றாதிருக்குமல்லவா? – என்று அவள் எண்ணமிட்டாள். இப்படிப்பட்ட தந்தைக்குப் புதல்வியாய்ப் பிறக்கத் தான் என்ன பாக்கியம் செய்திருக்க வேண்டுமென்று நினைத்தாள். இத்தகைய சக்கரவர்த்தியின் ஆட்சியில் வாழும் பிரஜைகள்தாம் எவ்வளவு பாக்கியம் பண்ணியவர்கள் என்ற எண்ணமும் தோன்றியது. இப்படிப்பட்ட சிந்தனைகளில் ஆழ்ந்தவளாய்ப் பல்லக்கிலே போய்க் கொண்டிருக்கையில், திடீரென்று வீதியில் ஒரு மதில் சுவரின் திருப்பத்தில் அபூர்வமான காட்சி ஒன்றைக் கண்டாள். சகல இராஜ லட்சணங்களும் பொருந்திக் களை ததும்பும் முகத்தினனான ஓர் இளங்குமரன் ஒரு குதிரைமீது வந்து கொண்டிருந்தான். அவனுடைய உடம்பையும் கைகளையும் குறுக்கும் நெடுக்குமாய் இரும்புச் சங்கிலியினால் பிணைத்திருந்தார்கள். குதிரையின் இரு பக்கத்திலும் முன்னாலும் பின்னாலும் அந்தச் சங்கிலிகளைப் பிடித்துக் கொண்டு போர் வீரர்கள் சிலர் விரைந்து நடந்து வந்தார்கள்.


அந்த இளங்குமரன் மிகவும் களைத்துப் போன தோற்றமுடையவனாயிருந்தாலும், அவனுடைய முகத்தில் கொஞ்சமாவது அதைரியத்தின் அறிகுறி காணப்படவில்லை. அஞ்சா நெஞ்சங்கொண்ட தீர புருஷனாகவே தோன்றினான். "என் உடம்பைத்தானே சங்கிலிகளால் பிணைக்க முடியும்? என் உள்ளத்தை யாராலும் சிறைப் படுத்த முடியாதல்லவா?" என்று அலட்சியத்துடன் கேட்பதுபோல் இருந்தது அவனுடைய திருமுகத்தின் தோற்றம்.


இந்தக் காட்சியைக் கண்டதும், குந்தவி தேவியின் விசாலமான நயனங்கள் ஆச்சரியத்தினால் இன்னும் அதிகமாக விரிந்தன. அதே சமயத்தில் அந்த இளைஞனும் சக்கர வர்த்தியின் குமாரியைப் பார்த்தான். சொல்லுக்கெட்டாத அவளுடைய திவ்ய சௌந்தரியம் ஒரு கணநேரம் அவனைத் திகைப்படைந்து நிற்கும்படி செய்திருக்க வேண்டும். அடுத்த நிமிஷத்தில், பல்லக்கும் குதிரையும் ஒன்றையொன்று தாண்டிச் சென்று விட்டன.

குந்தவி பல்லக்கிலிருந்த வண்ணம் இரண்டொரு தடவை திரும்பித் திரும்பிப் பார்த்தான். குதிரைமீது சங்கிலியால் கட்டுண்டிருந்த அந்த இளங்குமரனும் தன்னைப் போலவே ஆவல் கொண்டவனாய்த் திரும்பிப் பார்ப்பான் என்று அவள் எதிர்பார்த்தாளோ என்னவோ, தெரியாது. ஆனால் அந்தக் குமரன் மட்டும், தலையை ஓர் அணுவளவு கூடப் பின்புறமாகத் திருப்ப வில்லை. திருப்ப முடியாதபடி அவனைப் பிணித்திருந்த சங்கிலிகள்தான் தடுத்தனவோ, அல்லது அவனுடைய மனத்தின் திட சங்கற்பந்தான் அவ்விதம் திரும்பிப் பார்க்காத வண்ணம் தடை செய்ததோ, அதுவும் நமக்குத் தெரியாது.

குந்தவிதேவியின் திவ்ய சௌந்தரியத்தைப் போலவே அந்தச் சக்கரவர்த்தி திருமகளின் தெய்வ பக்தியும் அந்நாளில் தேசப் பிரசித்தமாயிருந்தது. சாதாரணமாய் அவள் சிவன் கோயிலுக்குப் போனாலும், பெருமாள் கோயிலுக்குப் போனாலும், பராசக்தியின் சந்நிதிக்குச் சென்றாலும், அந்தந்தத் தெய்வங்களின் தியானத்திலே ஈடுபட்டுத் தன்னை மறந்துவிடுவது வழக்கம். ஆனால் இன்றைய தினம் குந்தவியின் மனம் அவ்விதம் சலனமற்ற தியானத்தில் ஈடுபட வில்லை. தெய்வ சந்நிதானத்தில் நின்றபோது கூட, அவளுடைய மனக்கண்ணின் முன்னால், சங்கிலியால் கட்டுண்டு குதிரைமேல் வீற்றிருந்த இளங்குமரனுடைய முகம் வந்து நின்றது. அவள் எவ்வளவோ முயன்றும் அந்த முகத்தை மறக்க முடியவில்லை. இது வரையில் அவள் அனுபவித்தறியாத அந்தப் புதிய அனுபவமானது அவளுக்கு ஒருவித அபூர்வ இன்பக் கிளர்ச்சியையும் அதே சமயத்தில் பயத்தையும் உண்டு பண்ணிற்று!

ஒருவாறு சுவாமி தரிசனத்தை முடித்துக் கொண்டு குந்தவிதேவி அரண்மனைக்குத் திரும்பினாள். திரும்புங் காலையில் மனத்தை அந்த இளங்குமரன் மேல் செல்லாமல் வேறு நினைவில் செலுத்தும் முயற்சியையே அவள்





''ஏண்டா சங்கீத சிட்சையெல்லாம் முடிச்சியே குரு என்ன சொன்னார்?''

''துவையல் சாதத்துக்குப் பஞ்சமில்லேன்னு ஆசீர்வாதம் பண்ணிட்டார்.''

—ஆர்.பி.எஸ்.

விட்டு விட்டாள். 'அவ்வளவு ராஜ லக்ஷணங்கள் பொருந்திய இளங்குமரன் யாராயிருக்கலாம்? அவனை எதற்காகச் சங்கிலியால் பிணித்திருக்கிறார்கள்? எங்கே அழைத்துச் செல்லுகிறார்கள்? அவன் அத்தகைய குற்றம் என்னதான் செய்திருப்பான்?' என்றெல்லாம் சிந்திக்கத் தொடங்கினாள். திடீரென்று ஒரு ஞாபகம் வந்தது. 'உறையூர் இராஜகுமாரன் ஏதோ சக்கரவர்த்திக்கு விரோதமாகக் கலகம் செய்யப் போகிறான் என்று மாமல்லபுரத்துக்கு ஓலை வந்ததல்லவா? அது விஷயமாக முன்னமே ஏற்பாடு செய்தாகிவிட்டது என்று சக்கரவர்த்தி மறுமொழி தந்தாரல்லவா? அந்தச் சோழ இராஜ குமாரன்தானோ என்னவோ, இவன்?' இந்த எண்ணம் தோன்றியதும் குந்தவிக்கு அக்குமரன்மேல் கோபம் உண்டாயிற்று. 'என்ன அகந்தை, என்ன இறுமாப்பு அவனுக்கு? எவ்வளவு பெரிய துரோகமான காரியத்தைச் செய்துவிட்டு, எவ்வளவு அலட்சியமாய்க் கொஞ்சங்கூடப் பயப்படாமலும் வெட்கப்படாமலும் இறுமாந்து உட்கார்ந்திருக்கிறான்! நரசிம்ம பல்லவேந்திரருக்கு எதிராகக் கலகம் செய்யும்படி அவ்வளவு வந்துவிட்டதா இவனுக்கு? எத்தனையோ தூர தூர தேசங்களில் உள்ள ஜனங்கள் எல்லாரும், நரசிம்ம சக்கரவர்த்தியின் வெண்கொற்றக் குடையின் நிழலில் வாழ்வதற்குத் தவஞ் செய்கிறார்களே! செண்பகத் தீவின் வாசிகள் இதற்காகத் தூது அனுப்பியிருக்கிறார்களே! இந்த அற்பச் சோழநாட்டு இளவரசனுக்கு என்ன வந்துவிட்டது? ஆமாம்; இவன் மட்டும் கலகம் செய்த இளவரசனாயிருந்தால் தந்தையிடம் சொல்லிக் கடுமையான தண்டனை விதிக்கச் செய்யவேண்டும்! அப்போது தான் புத்தி வரும்.'

இவ்வாறு எண்ணிய குந்தவியின் மனம் மறுபடியும் சஞ்சலம் அடைந்தது. 'ஐயோ! பாவம்! முகத்தைப் பார்த்தால் அப்படியொன்றும் கெட்டவனாகத் தோன்றவில்லையே! அவன் தானாக ஒன்றும் செய்திருக்க மாட்டான். ஒருவேளை யாராவது கெட்ட மனிதர்கள் பக்கத்தில் இருந்து தூண்டிவிட்டிருப்பார்கள். அவர்களைப் பிடித்துத் தண்டிக்க வேண்டுமேயன்றி, இந்தச் சுகுமாரனைக் கடுமையாகத் தண்டிப்பதில் என்ன பயன்? அவனுடைய மார்பையும், தோள்களையும் கைகளையும் பிணித்திருக்கும் இரும்புச் சங்கிலிகள் அந்த மிருதுவான தேகத்தை எப்படித் துன்புறுத்துகின்றனவோ? நல்ல புத்தி சொல்லி, எச்சரிக்கை செய்து, அவனை விட்டுவிட்டால் என்ன? அப்பாவிடம் இராத்திரி சொல்லவேண்டும். ஆனால் அவருக்குத் தெரியாத விஷயமா? "தர்ம ராஜாதி ராஜன்" என்று புகழ் பெற்றவராயிற்றே? நியாயமும் தர்மமும் தவறி அவர் ஒன்றும் செய்யமாட்டார். இந்த இளங்குமரனை மன்னித்துத்தான் விடுவார்...' இப்படியெல்லாம் கொந்தளித்துக் கொண்டிருந்த உள்ளத்துடன் குந்தவிதேவி அரண்மனையை அடைந்தாள். சூரியன் எப்போது அஸ்தமிக்கும்? தகப்பனார் எப்போது ராஜசபையிலிருந்து அரண்மனைக்குத் திரும்பி வருவார் என்று எதிர்பார்த்த வண்ணம் ஒவ்வொரு வினாடியையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்துக் கொண்டிருந்தாள்.

(தொடரும்)



''பாகவதருக்கு மாஜிக்கும் தெரியும்! எப்படி ஜம்முன்னு உச்ச ஸ்தாயிக்குப் போறார் பாருங்க!''

– மீனமேஷன்



இடி முழக்கம்; தென்றலின் வருடல்!

உள்ளூர் சந்தான கோபாலசுவாமி கோயிலில் வழக்கம் போல வாசித்துக் கொண்டிருந்தார் அந்தக் கலைஞர். இரண்டு அர்ச்சகர்களுக்குள் ஆகமவிதிகள் சம்பந்தமாக ஒரு விவாதம் வந்து விட்டது. வித்துவானிடம் மத்தியஸ்தத்துக்குப் போனார் ஓர் அர்ச்சகர். மற்ற அர்ச்சகர் உடனே, "மீனாட்சிசுந்தரம் சின்னவன். மேளக்காரன். ஆகம சாஸ்திரமோ, சம்ஸ்கிருதமோ தெரியுமா அவனுக்கு? அவனைப் போய்க் கேட்கிறீரே?" என்று சொல்லிவிட்டார். அன்றே, தமது மகன்களில் ஒருவனை சம்ஸ்கிருதம் படிக்க வைப்பது என்று தீர்மானித்தார் தவில் வித்வான் நீடாமங்கலம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. தாம் காலமாவதற்கு ஒரு மாதம் முன்பு கூட, "சம்ஸ்கிருதத்தை மட்டும் விட்டுவிடாதே!" என்றார் மகனிடம்.

தவில் வாசிப்பில் தன்னிகரற்று விளங்கினார் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. இரட்டைத் தவில் முறையை அறிமுகப்படுத்தியது அவர்தான். இதற்கு மேல் இனி வாசிக்க முடியாது என்னும் அளவுக்கு வல்லினங்களை இடி முழக்கம் போலவும் மெல்லினங்களைத் தென்றல் வருடுவது போலவும் ஒலிக்கச் செய்வார். தமது இசையால் மட்டுமின்றி பல்வேறு குண அதிசயங்களாலும் எல்லோரையும் கவர்ந்தார் இந்தக் கலைஞர்.

எப்போதும் மூன்றாம் வகுப்பில்தான் பயணம் செய்வார். "இன்றைக்கு எனக்கு மேல் வகுப்பில் பயணம் செய்ய வசதி இருக்கிறது, வாஸ்தவம். ஆனால் ஒருநாள் என் தொழில் மங்கிப் போய், நான் மூன்றாம் வகுப்பில் பயணம் செய்ய நேர்ந்தால், 'பாவம், கொஞ்ச காலம் முன்னால், பெரிய வசதி உள்ளவராக இருந்தார். இப்போது பாருங்கள், மூன்றாம் வகுப்பில் பயணம் செய்கிறார்!' என்று சொல்ல மாட்டார்களா?" என்பார்.

தினசரி இரவு டைரியில் அன்றாடச் செலவை எழுதி, வரவு-செலவு கணக்கைச் சரியாக முடித்த பிறகுதான் படுக்கப் போவார். வீட்டுத் தொழுவத்தில் நாலைந்து பசுமாடுகள் எப்போதும் இருக்கும். வெளியூர் கச்சேரிகள் முடிந்து திரும்பிய உடன், நேரே மாட்டுத் தொழுவத்துக்குப் போய் அவற்றிடம் கொஞ்சுவார். சிஷ்யர்களிடம் ஆகாரம் எல்லாம் வேளா வேளைக்குக் கொடுத்தீர்களா என்று அக்கறையுடன் விசாரிப்பார். காலமாவதற்கு முன் இரவு 2.30 மணிக்குக் கூட தொழுவத்துக்குப் போய் அவற்றுடன் நின்று பேசி, தடவிக் கொடுத்து விட்டுத்தான் படுத்துக் கொண்டார்.

வீட்டுத் தூண்கள் எல்லாவற்றுக்கும் வெல்வெட் துணியைக் கொண்டு பொதிந்து வைத்திருப்பார். அதில் தூசு தட்டிச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதும் சிஷ்யப் பிள்ளைகளின் முக்கியமான வேலைகளில் ஒன்று!

மீனாட்சிசுந்தரம் பிள்ளை பழுத்த காங்கிரஸ்காரர். கதர்தான் வாழ்நாள் முழுதும் அணிந்தார். சமயம் கிடைக்கும்போதெல்லாம் சர்க்காவை வைத்துக் கொண்டு நூற்க ஆரம்பித்து விடுவார். காந்திஜி மறைந்த அன்று, திருவையாறு ஆராதனையில் இருந்தார் பிள்ளை. காந்திஜி சுட்டுக் கொல்லப்பட்ட சேதி கேட்டதும், அழுது கொண்டே அங்கிருந்து புறப்பட்டு விட்டார் நீடாமங்கலத்துக்கு. தவிலை ஓர் அறையில் தனியே வைத்துப் பூட்டச் சொன்னார். மூன்று நாளைக்கு ஒரு பிடி உணவு கூட உண்ண மறுத்துப் பட்டினி கிடந்தார். ரேடியோவுக்கு எதிரே உட்கார்ந்து கொண்டு, ஊர்வல வர்ணனை முழுவதையும், மருமகன் வெங்கட்ராமனிடம் மொழி பெயர்த்துச் சொல்லச் சொல்லி, கண்ணீர் விட்டு அழுதபடியே கேட்டுக் கொண்டிருந்தார். "மகாத்மா இறந்த பிறகு நான் எதற்கு இனிமேல் வாழ வேண்டும்!" என்று அரற்றிக் கொண்டே இருந்தார்.

இப்படிப்பட்ட காங்கிரஸ் பக்தரான நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் நூற்றாண்டு விழாவை சுருதி ஃபவுண்டேஷன் சமீபத்தில் கொண்டாடியது. இதில் ஒரு காங்கிரஸ்காரர் கூட கலந்து கொள்ளவில்லை என்பதுதான் ஆச்சரியம்!

விழா நிகழ்ச்சி உரைகளிலிருந்து தொகுப்பு :

சாருகேசி

புகைப்படம் : நன்றி : **"சுருதி"**

தேவன் வருவார்

குளிர். கடும் குளிர். வீட்டுக் கூரை வழியே பனி கோடாய் இறங்கியது. உடல் உதறலெடுத்தது. கைகளை நெஞ்சுக்கு நேரே குவித்து வீதியில் இறங்க, தெரு முழுக்க புகையாய் பனிமூட்டம். தெரு என்றால் விசாலமான தெரு இல்லை. ஒரு மாட்டு வண்டி சிரமப்பட்டு வரலாம். வண்டி வந்தால் மனிதர்கள் ஒதுங்க இடம் இருக்காது. தெருவில் அங்கொன்றும், இங்கொன்றுமாய்க் கிழவிகள். பணியாரம் சுட்டு விற்கின்ற கிழவிகள். "உஸ்க... உஸ்க..." என்று ஊதுகுழலில் ஊதிக் கொண்டிருப்பார்கள். நெஞ்சுக் கூடு கிழிந்து விடும் போல் இருக்கும். எரியாத அடுப்பு. 'குபுக் குபுக்'கென்று புகைதான் பொங்கி எழும்பும். சுற்றிலும் ட்ரவுசர் பையன்கள். "பணியாரம்... பணியாரம்..." என்று பரபரப் புக் காட்டுகின்ற பையன்கள்.

அதில் நானும் ஒருவன்! இருட்டிய உடனே ஐயாவிடம் பணியாரத்துக்குக் காசு வாங்கி வைத்து விடுவேன். எங்களுக்கு ஒவ்வொரு நாள் பொழுதும் பணியாரக் கிழவி முன்புதான் விடியும். பத்துப் பைசாவை உள்ளங்கையில் வைத்துப் பொத்திக் கொண்டு போவோம். கிழவி முன்பு போய் குந்திட்டு உட்கார்ந்து விடுவோம். பனி தாங்காது. 'உஸ்... உஸ்' என்று மூச்சுத் இணைறும். அந்த உதறலோடும் உறுமலோடும் காத்திருப்போம். பணியாரக் கிழவி நடுங்குகிற கையில் பணியாரம் போடும். சிருக்குளியில் குத்தி தூக்கிப் போடும்.

முதலில் ரோஸிக்குத்தான்! ரோஸி என் மாமா மகள். தாய் மாமன். மேற்குத் தெருவில் உழவு மாடு வெச்சிருக்கிறாரே மொக்கையன், அந்த மாமாவின் மகள் ரோஸி. அரைப் பாவாடையை லேசாகக் குடை போல் விரித்துத் தூக்குவாள். பணியாரம் அதில் விழும். நான் உள்ளங்கையை நீட்டுவேன். சூடு தாங்காது. 'ஆஊஊ...' என்ற கூச்சலுக்குப் பின் ட்ரவுசர் பைக்குள் போட்டுக் கொள்வேன். தொடையில் சுடும்.

ரோஸி இருக்கிறாளே ரோஸி, அவள் பெயர் உண்மையில் ரோஸி அல்ல. அங்காள ஈஸ்வரி. 'அங்கு' என்று கூப்பிடுவோம். மொக்கையன் மாமாவின் மகள் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அவள் கறுப்புதான். கறுப்பு என்றால் கரி கறுப்பு அல்ல; மாநிறமும் அல்ல; இது ஒரு மாதிரி புது நிறம். கண்களையும் மனசையும் நிறைக்கிற நிறம்! எப்போதும் எங்கள் வீட்டிலேதான் இருப்பாள். அம்மாவுக்கு உயிர். மருமகளே! மருமகளே! என்று மனசுக்குள் தூக்கி வைத்திருந்தாள். வார்த்தைக்கு வார்த்தை. 'அங்கு', 'அங்கு'தான். அம்மாவின் கைவேலைகளை எல்லாம் இவள்தான் செய்வாள். "உன்னை இந்த வூட்டு மருமகளா கொண்டு வந்து வெச்சுப் போட்டேன்னா, என் ஜோலி ஒழியும்!" அம்மா இந்த வார்த்தையை அடிக்கடி சொல்வாள். நான் இல்லாத போதுதான் சொல்லுவாள். இதை ரோஸி ஒருவித வெட்கத்தோடு என்னிடம் சொல்லியிருக்கிறாள். அசப்பில் என் காதிலும் அது விழுந்திருக்கிறது! நான் அந்த வார்த்தையைச் சொல்லிச் சொல்லிச் சுவைப்பேன். சுவைக்கச் சுவைக்கச் சுவைகூடும்.

ஒருநாள். அதுவும் இதுபோல் ஒரு மார்கழி. பனிக்காலம். எங்கள் ஊர் சர்ச்சுக்கு வர்ணம் பூசினார்கள். (அதை 'கூம்புக் கோவில்' என்றுதான் நான் சொல்வேன்.) ரிப்பன் தோரணம் கட்டினார்கள். கலர், கலராய் பலூன் கொத்துக்களைத் தலைகீழாகத் தொங்க விட்டார்கள். புதுசாக இரண்டு வெள்ளை அங்கி போட்ட ஃபாதர்கள் வந்திருந்தார்கள். மணிசவுண்டு சர்வீஸ்காரர்கள் தெருவைச் சுற்றிலும் சீரியல் பல்ப் போட்டார்கள். அட்டையில் நட்சத்திரம் செய்து உள்ளே ஒரு பல்ப் மாட்டி எரிய விட்டார்கள். கிறுஸ்துமஸ் பண்டிகை ஆரம்பம். ஊரே அங்குதான் கூடிக் கிடந்தது.

எங்க ஐயா என்னை அங்கிட்டுப் போவப்படாது என்று கூறி விட்டார்.

பாரதிபாலன்



அவரும் அன்று வெளியில் எங்கும் போக வில்லை. வீட்டிற்குள்ளே சுற்றிச் சுற்றி வந் தார். எப்போதும் அவர் அப்படி இருந்தது இல்லை. அம்மா அடுக்களைக்குள் இருந் தாள். மொக்கையன் மாமாவைத் திட்டிக் கொண்டிருந்தாள். எதற்கு என்று தெரிய வில்லை. மொணமொணவென்று வாய்க் குள்ளே திட்டிக் கொண்டிருந்தாள். வெயில் உச்சிக்கு ஏறிப் போயிருந்தது. அய்யா பரண் மீது ஏறி, பரணை சுத்தம் செய்து கொண் டிருந்தார். நான் திண்ணையில் உட்கார்ந் திருந்தேன். 'சலிங்' 'சலிங்' என்று நடை வாசலில் சப்தம். நான் எட்டிப் பார்த்தேன். ரோஸி! புதுப்பாவாடை! சூஜாக்கை வைத்த சட்டை! இரட்டைப் பின்னல். ஆளே ஒரு தினுசாக இருந்தாள். அரவம் கேட்டதும் அம்மா எட்டிப் பார்த்தாள்.

"அத்தே!"

"யாரது? அங்குவா?"

"இல்லை. ரோஸி!"

"என்ன?"

"இன்னையில இருந்து, நான் அங்காள ஈஸ்வரி இல்லை. ரோஸி. எங்கப்பா பேரு பீட்டர்!"

"உங்கப்பனுக்கு என்ன ஆச்சுடீ? புத்தி கித்தி பேதலிச்சுடுச்சா?"

ஐயா பரண் மீது இருந்து கீழே இறங்கினார்.

"மாமா எனக்கு ஞானஸ்னானம் ஆச்சு!"

"நல்லா இரும்மா!"

ரோஸி அப்பாவின் காலில் விழுந்தாள்.

"அட! என்னது? எந்திரிம்மா!"

ஐயா மாடப்பிறையில் இருந்த குங்குமச் சிமிழை எடுத்தார். ஆள்காட்டி விரலில் தொட்டு, அவள் நெற்றியை நோக்கி நீட்டி னார்.

"ஐயோ! மாமா நாங்க குங்குமம் வெக்கக் கூடாது!"

ஐயாவின் கை வெட்டு விழுந்தது போல் துவண்டது. ஒரு நிமிடம் அப்படியே நின்று விட்டார். பின்பு சுதாரித்துக் கொண்டார். ஜிப்பாவின் பக்கவாட்டு ஜேபியில் கைவிட்டு, ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து அவளிடம் நீட்டினான். அவள் வாங்கிக் கொண்டாள்.

"அங்கு, நீ வந்தது உங்க அப்பனுக்கு தெரி யுமா?" - அம்மா.

"அங்கு இல்லை அத்தை. ரோஸி!"

"சரி, என்னவோ. தெரியுமா?"

"தெரியாது..."

"இனி வர வேண்டாம். எதுக்கு பொல் லாப்பு!"

ரோஸியின் முகம் இருண்டது.

மனதிற்குள் தூக்கி வைத்திருந்த மரு மகளை அம்மா மெல்ல கீழே இறக்கி வைத் தாள். அம்மா மட்டுமல்ல, பாவாடையக்கா வும், மச்சு வீட்டு அம்மாளும் ரோஸியுடன் பேசுவதில்லை. பல்லாங்கு விளையாடச் சேர்ப்பதும் இல்லை. ஊரில் ஒரு மாதிரிப் பேச்சு அடிபட்டது. மொக்கையன் மாமா வைப் பற்றித்தான். 'வெள்ளைக்காரனிடம் உழவு மாடும், மூன்று மரக்கால் கோது மையும் வாங்கிக் கொண்டு மாறி விட்டான்' என்றார்கள். சுடலை மாடன் கும்பிடுக்குச் சேர்க்கக் கூடாது என்றார்கள். இன்னும் என்ன என்னவோ சொன்னார்கள். வெறும் வாய்க்கு அவல் கிடைத்தால் விடுமா? திண்ணை, திண்ணையாய் உட்கார்ந்து மென்று துப்பியது! பரிகாசம் பண்ணியது. இத்தனை இரைச்சலுக்கும் நடுவில் ரோஸிக்கு நம்பிக்கை. மொக்கையன் மாமா எப்படியோ எனக்குத் தெரியாது! ரோஸிக்கு நம்பிக்கை அதிகம். சர்ச் மீது நம்பிக்கை. ஏசுவின் மீது நம்பிக்கை. ஃபாதர் மீது நம் பிக்கை. கிருஸ்துமஸ் அன்று தேவகுமாரன் பிறந்து வருவான். நம் துன்பங்களை எல்லாம் தீர்ப்பான் என்ற நம்பிக்கை. தினமும் சர்ச்சுக் குப் போவாள். நான் தப்பினாலும் அவள் தப்ப மாட்டாள்.

இப்போது 'சர்ச்' சுத்தமாய் மாறி விட் டது. முன்னாடி இருந்த மணல் மேடு இல்லை! சிமெண்ட் தளம் போட்டாயிற்று! இடதுகோடியில் இருந்து வட கோடி வரை மொத்தமும் மாறி விட்டது. முன்பு போல் மூக்கைப் பிடித்துக் கொண்டு நடக்க வேண் டியதில்லை. வேலி போட்டாச்சு! சிமெண்ட் வேலி. கட்டையாய் - இடுப்பு உசரத்துக்கு சிமெண்ட் பாலம். பூவரசு பூக்கத் துவங்கிற்று.



மஞ்சள் மஞ்சளாய் பூத்துப் பூத்துக் கொட்டிக் கொண்டிருக்கிறது. யாருக்காகப் பூக்கிறது? பூத்துக் கொட்டிய மணியமாகவே இருக்கிறது. சர்ச்சைச் சுற்றிலும் நிறைய மரங்கள். மா, கொய்யா, தென்னை என்று மரங்கள். நல்ல குளுமை. பெரியதாக மணி ஒன்று வாங்கி மாட்டியிருக்கிறார்கள். காலையிலும் மாலையிலும் மணி அடிக்கிறது! மணிச் சத்தம் கேட்டதும் ஆடு, மாடு, கோழி, பறவைகள் எல்லாம் மிரளும். அப்படி ஓர் கணீர். ஊரையே உசுப்புகின்ற கணீர்.

ஊரே மாறி விட்டாற்போல் ஒரு தோற்றம். சர்ச்சுக்கு கூட்டம் நிறைய வருகிறது. நானும் தினசரி போகிறேன். ரோஸியும் வருகிறாள். ரோஸி இப்போது தாவணி போட்டு விட்டாள். சர்ச்சில்தான் அவளோடு பேச முடிகிறது. பேசுவது என்றால் எதிரும் புதிருமாக நின்று கொண்டு அல்ல. மரத்தின் மறைவைக் கடக்கும் போது ஓரிரு வார்த்தை. வாய் வார்த்தையாய்ப் பேசினால்தானா? பேச வேண்டும் என்று மனசும் விருப்பமும் இருந்தால் போதும். எப்படியும் பேசி விடலாம். எதையும் பேசி விடலாம். அப்படித்தான் நாங்கள் நிறைய பேசினோம். சில நேரங்களில் சிரிப்பாள். முழுவதும் வாய் திறந்து சிரிக்கின்ற சிரிப்பு இல்லை. உதட்டோரம் ஒரு சிரிப்பு. நீர்ச்சுழி மாதிரி ஒரு சிரிப்பு. அந்த முகத்தைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். என்ன அமைதி! என்ன களை!

இத்தனை மாறி விட்டது. மனிதர்கள் மட்டும் மாறவில்லை. அவர்கள் மனசு மாறவில்லை. பழைய மனஸ்தாபங்கள் மறையவில்லை. மொக்கையன் மாமா பிடிவாதமாய் இருக்கிறார். எங்கள் குடும்பம் சாத்தான் குடும்பம். எங்கய்யா சாத்தான். எங்கம்மா சாத்தான். நான் குட்டிச் சாத்தான். இது மாமா சொன்னது. டீக்கடை டீக்கடையாய்ப் புலம்புகிறார். எங்கள் வீட்டிலும் அவரை விஷமாக நினைக்கிறார்கள். எங்கம்மாவிடம் ரோஸி பற்றிப் பேச நினைப்பேன். நாக்கு துடிதுடிக்கும். மனசை இழுத்து நாக்கை நிறுத்தி விடுவேன் ரோஸியிடமும் அப்படித்தான்.

ஒருநாள். தனிமை வாய்த்தது. காலம் வந்து விட்டது என்றுதான் நினைத்தேன். சர்ச்சுக்குப் பின்னாடி இருந்த தாழம்புதர் மறைவு. சின்ன வயசில் அந்தத் தாழம்புதரில் மணலை அள்ளி வீசுவேன். அது புதருக்குள் இறங்குகின்ற போது மழை பெய்வது மாதிரி ஒரு இரைச்சல்! வீட்டிற்குப் போன பிற்பாடும் அந்த இரைச்சல் காதுக்குள் ஒழுகிக் கொண்டே இருக்கும். ரோஸிக்கு அந்த இரைச்சல் பிடிக்கும். அதற்காக எத்தனை பிடி மணலைத் தீர்த்திருப்பேன். இப்போது பயமாக இருக்கிறது. எத்தனை மொட்டுகள் நொறுங்கி எத்தனை கூடுகள் உடைந்தனவோ! எத்தனை பூச்சிகளின் கண் அவிந்தனவோ. இப்போது அந்த இரைச்சல் மனதிற்குள் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

"ரோஸி..."

"என்ன?"

"இன்னும் எத்தனை நாளைக்குப் பதுங்கிக் கொண்டிருப்பதாம்?"

"அப்பாவுக்குத் தெரிந்தால், வெட்டி எரித்துப் போடுவார்!"

"இப்போது மட்டும் என்னவாம்? எரிந்து கொண்டுதானே கிடக்கிறது!" - என் குரல் தடுமாறிற்று. அவள் கண்களில் திகைப்பு. லேசான அச்சம். வெட்கத்துடன் தாவணி நுனியை முறுக்கிக் கொண்டிருந்தாள். சிறிது நேரம் மௌனம்.

"காலம் வராமலா? தேவன் வருவார். எப்படியும் இந்த கிருஸ்துமஸுக்கு வருவார். உதிர்த்த கண்ணீரையே உதிர்த்தவனுக்கு உரமாக்கத் தேவன் வருவார்."

அவள் மூச்சு திணறியது.

"நிஜமாவா?"

"பின்ன பொய்யா? வருவார்."

வெகுநேரம் வரை அமைதி. அமைதி என்றால் பேசாமல் ஓசை இல்லாமல் இருத்தல் அல்ல. இது அந்தத் தருணத்துக்கென்றே தனியாக உள்ள அமைதி. அபூர்வமான அமைதி. அந்த அமைதியில் இருவரும் சமாதானம் ஆனோம்.

நாங்கள் காத்திருக்கிறோம்.

வேதபுரத்து வியாபாரிகள்

யதார்த்தத்துடன் ஒத்துப் போக முடியாத தலைவர்கள் சூட்சும சரீரம் ஏற்பதுதான் அரசியல் விவேகம்.
('வேதபுரத்து அரசியல் வியாபாரம்'
— ஆசிரியர் : நஞ்சுகண்டன். பக். 1171 - 74)

மாது குல திலக, வேதபுர ரட்சக, கொற்றவை கொலு நேர்த்தி, ஜெய பவானி, மஹா ராணி ஸ்ரீ, மாட்சிமை மிகு அபூர்வா தேவி, ஏழு மெத்தை விரித்த அவர்தம் அரசுக் கட்டிலில், இரவு முழுவதும் உறக்கமின்றி, விடியற்காலையில், திருத்துயில் உணர்த்தி எழுப்புவோர், திருப்பள்ளியெழுச்சி இசைக்க... எழுந்து, தம் இருக்கைகளை நீட்டிச் சோம்பல் முறித்தார்.

இரவு முழுவதும் ஓயாத சிந்தனை.

அந்த அசுர அமைப்பில் அவர் இப்பொழுது ஒரு பொன் விலங்கிட்ட கைதி.

அவர் அரியணை ஏறிய இரண்டாம் நாள் நஞ்சுகண்டனிடம் சொன்னார் : "நான் இப்போ ராணி, என்ன வேண்டுமானாலும் செய்யலாமில்லையா...? முதல்லே, இந்த வேதபுரத்து மக்களுக்குத் தன்மானம்னா என்னன்னு சொல்லித் தந்தாகணும். ரெண்டு, வயத்துக்குச் சோறிடணுங்கிறதுக்காக, எந்த வியாபாரம் வேணும்னாலும் செய்யலாங்கிற தத்துவம், ஆத்ம சுதந்திரத்துக்குச் செய்யற துரோகம்னு அவர்களுக்குப் புரிய வைக்கணும். இதுதான் என் உடனடித் திட்டம்."

நஞ்சுகண்டன் புன்னகை செய்தான்.

"என்ன சிரிக்கறீங்க?"

"பிளாட்டோ படிச்சிருப்பீங்க... அவர் சொல்ற கதை ஒண்ணு ஞாபகம் வச்சுக்கங்க."

26

"என்ன கதை?"

"காலங் காலமா, பிறந்ததிலேந்து சூர்ய வெளிச்சம்னா என்னன்னே தெரியாமே, ஒரு பாறையோட கையிலும் காலிலேயும் விலங்கு பூட்டி பிணைக்கப்பட்டவங்க, திடீர்னு சூர்ய வெளிச்சத்துக்குத் தளையறுத்துக் கொண்டு வரப்பட்டாங்கன்னா என்ன ஆகும்? ஒண்ணு, வெளிச்சத்தைக் கண்டவுடனே, அவங்க கண் கூசும். ரெண்டு, அவங்க விலங்கு இல்லாமே அவங்களுக்குத் தவிப்பு கொள்ளாது. விலங்கைத் தேடிக்கிட்டு ஓடுவாங்க. வேதபுரத்து மக்கள் காலங் காலமா..."

"நீங்க ஒரு ஸினிக்..." என்று சீறினார் அபூர்வா தேவி அன்று. ஆனால் நாள் ஆக ஆக, அவர் அனுபவத்தில் நஞ்சுகண்டன் சொன்னதுதான் உண்மை என்ற கசப்பான அனுபவம் அவருக்கேற்பட்டது.

'கூறாட் பட்டு நின்றீர்களை எங்கள் குழுவில் புகுதலொட்டோம்' என்று எப்பொழுதோ வேதபுரத்துக் கவிஞர் ஒருவர் பாடியுள்ளார். ஆனால் அந்தக் குழு எந்தக் காலத்திலிருந்தது என்ற வரலாறு, அபூர்வா தேவிக்குத் தெரியவில்லை. நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்... ஏமாப்போம், பிணியறியோம், பணிவோ மல்லோம்' என்பதும் வெறும் கோஷமாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

'ஆத்மாவுக்குப் பிணி இல்லை, ரூபமில்லை, சர்வ சுதந்திரமானது. பரிபூரணனுக்கே அடிமைப்பட்டது' என்பது வேதபுரத்துப் பாரம்பரியத் தத்துவம்.

அந்தப் பரிபூரணன் யாரென்பதைத்தான், அன்றாட சௌக்கியங்கள் நிர்ணயம் செய்தன. கடவுளாக இருக்கலாம். (இது கோட்பாட்டில்) ஆள்பவராக இருக்கலாம், அவரவர்க்கு அடுத்த நிலையிலிருக்கும் யஜ

இந்திரா பார்த்தசாரதி



மானராகவுமிருக்கலாம்.

சரீரம் கோயில், ஆத்மா, பரமாத்மா இருக்கும் கர்பக்கிருஹம், என்று சொன்னாலும், வயிற்றைத்தான் வேதபுரத்து வாசிகள் உற்சவ மூர்த்தியாகக் கொண்டார்கள்.

இந்த உற்சவ மூர்த்திக்காக எந்தத் திருவிழா வேண்டுமானாலும் கொண்டாடலாமென்பதும் அவர்கள் வாழ்க்கைத் தத்துவம்.

நஞ்சுகண்டன் ஒரு காலத்தில் 'கனவு' கண்டவன்தான். இந்த அமைப்புடன் ஒன்றிய பிறகு, வேறுபட்ட காரணத்தினால், அவன் அண்ணன் கொலை செய்யப்பட்டான்.

நஞ்சுகண்டன் 'கனவு' கலைந்து, அமைப்புடன் ஒன்றினான்.

யாரோ ஒருவர் 'தலைவர்' என்பது வேதபுர அமைப்பில் ஓர் எதேச்சையான சம்பவம். அவர் தலைவராக இருப்பதினின்றும் தப்பிக்க முடியாது. இப்படித் தலைவராக ஆக்கிய ஒருவரிடம், தங்கள் சுதந்திரத்தையும் தன்மானத்தையும் 'விருப்பத்துடன் இழந்து', வழிபடுவதுதான் வேதபுர மக்கள் மரபு!... இதை நன்குணர்ந்த நஞ்சுகண்டன், இந்தத் தலைவர் தன்மையை ஸ்தாபனமாக்கியதுடன், புதுய புதிய கட்டுக் கதைகளையும் உருவாக்கி விட்டான்!

வேதபுரத்து வரலாறு, இந்த 'நஞ்சுகண்டர்களின்' வரலாறுதான். ஆனால் இந்த நஞ்சுகண்டன்கள் பின்னணி இயக்குநர்கள், முகமற்றவர்கள்.

ஆரம்பத்தில் அபூர்வாவை அந்த இருண்ட வீட்டுக்கு வரச் சொன்னதிலிருந்தே, மர்மமும் கட்டுக் கதைகளும் உருவாகத் தொடங்கி விட்டன!

அபூர்வாவால் நஞ்சுகண்டன் எந்தப் பக்கமென்று அறிந்து கொள்ள முடியவில்லை. தாங்களே உருவாக்கிய இரண்டு பக்கங்களிலும் இருப்பதுதான் நஞ்சுகண்டன்களுக்குச் சௌகர்யமானது.

அபூர்வா தேவி அரசுக் கட்டிலினின்றும் கீழே இறங்கினார்.

இன்று சனிக்கிழமை.

தயாராக வேண்டும். ஒன்பது மணிக்கு தர்ம தரிசனம் தொடங்குகிறது. மதியம் வரை.

அந்த பிரும்மாண்டமான அரண்மனையின் பிரும்மாண்டமான முன் மைதானத்தில் லட்சக் கணக்கான மக்கள் கூடியிருப்பார்

கள்.

அபூர்வா தேவி உப்பரிகையில் நின்று கொண்டு, புன்னகை செய்து, கை காட்டி அவர்களை ஆசிர்வதிக்க வேண்டும்.

இது தர்ம தரிசனம்.

கட்டண தரிசனமுமுண்டு. திங்கள், புதன், ஞாயிறுகளில், காலை ஒன்பதிலிருந்து மதியம் வரை.

இந்தக் கட்டண தரிசனம் ஏலத்துக்கு விடப்பட்டிருந்தது. இந்தத் தரிசனத்தை ஸ்பான்ஸர் செய்கின்றவர்கள், இந்த ஏற்பாட்டை அதிகத் தொகைக்கு ஏலம் எடுத்தவர்கள், அவர்கள் தனிப்பட்டவர்களிடம் எந்தத் தொகை வேண்டுமானாலும் வசூலித்து, அபூர்வா தேவியுடன் உயர்ந்த பட்சம், பதினைந்து நிமிஷம் சந்தித்து உரையாட ஏற்பாடு செய்வார்கள். போட்டோ எடுத்துக் கொள்ள வேண்டுமானால் அதற்குத் தனிக் கட்டணம்.

தொடக்கத்தில் அபூர்வா தேவி இந்தத் திட்டத்தை எதிர்த்தார். "இது அருவருப்பாக இருக்கின்றது" என்று நஞ்சுகண்டனிடம் சொல்லிப் பார்த்தார்.

"இந்தப் பணம், வளர்ச்சித் திட்டத்துக்காக; எதிர்க்காதீர்கள்" என்றான் நஞ்சுகண்டன்.

"யாருடைய வளர்ச்சித் திட்டத்துக்காக?" என்று அபூர்வா தேவி கேட்டார்.

புன்னகைதான் பதில்.


அபூர்வா தேவி வேதபுரத்து மகாராணியாகப் பட்ட மேறிய பிறகு, இந்திர பிரஸ்தத்தில் இதற்கு எதிர்ப்பு இருக்குமென்று எதிர்பார்த்தார். நஞ்சுகண்டனும் எதிர்பார்த்தான்.

ஆனால் எதிர்ப்பு ஏதுமில்லை,

மாறாக இந்திர பிரஸ்தத்து மஹா ராணி அபூர்வா தேவியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சொன்னார்: "நாமிருவருமே வெளியிலிருந்து வந்தவர்கள். வெளியிலிருந்து வருகின்றவர்களுக்கு முடிசூட்டி விடுவதுதான் இந்த நாட்டு மக்களுடைய இயல்பு போலிருக்கிறது. மரத்தடியில் நின்றோம், மௌலி தலையில் விழுந்து விட்டது. எதற்காக வேண்டாமென்று சொல்ல வேண்டும்? என் வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்ளுங்கள்."

அபூர்வா தேவி நஞ்சுகண்டனிடம் இதைச் சொன்ன போது, அவன் புன்னகையுடன் சொன்னான், 'இதுதான் அரசியல் விவேகம்!'

அபூர்வா தேவியின் மனத்தை உறுத்திக் கொண்டிருந்த ஒரு விஷயத்துக்குச் சரியான பதில் கிடைக்கவில்லை. அவருக்கு முந்தி இருந்த தலைவரின் மரணம் இயற்கையானதா? 'அவரு எப்பவோ போயிட்டாரு'



என்று நஞ்சுகண்டனே சொன்னான். எப்படிப் போனார்? 'இயற்கை மரணந்தான்' என்று நஞ்சுகண்டன் சத்தியம் செய்தாலும் அபூர்வா தேவியின் மனத்தில் ஒரு நெருடல்.

"இயற்கை மரணம் என்றால் இதை மக்களுக்கு ஏன் தெரிவிக்கவில்லை!" என்று அவர் நஞ்சுகண்டனிடம் கேட்டார்.

'வேதபுரத்து மக்கள் தங்கள் தலைவர் இறக்கக் கூடியவர் என்பதை நம்ப மாட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தலைவர் நிரந்தரமானவர். காலத்தால் சாகாதவர், ஏலத்தால் மலியாதவர். ஆகவே அவரிடத்தில் இன்னொரு தலைவரை உருவாக்கும் வரை இந்த ஏற்பாடு" என்றான் நஞ்சுகண்டன்.

"நான்தான் அந்த 'இன்னொரு தலைவர்' என்று எப்படித் தீர்மானித்தீர்கள்?"

"வேதபுரத்து வாசிகள் பெண்களைக் கண்டால் அடி மனத்தில் அஞ்சுபவர்கள். இந்த அச்சந்தான், தற்காப்பு உணர்வாக, பெண்களை அடக்கியாளவும் முற்படுகின்றது. பெண்கள் மோசமாக நடத்தப்படுவதும், தெய்வமாக்கப்படுவதுமான முரண்பட்ட விஷயங்கள் வேதபுரத்தில்தான் சாத்தியம். தாந்திரிக உபாசகர்களாகிய எங்களுக்கு, உங்களைத் தெய்வமாக்கி விடுவதுதான் அரசியல் சௌகர்யமாகப்பட்டது. எங்களுக்கு அரசரும் தெய்வமும் ஒன்றுதான்."

"அரசியல் சௌகர்யத்துக்காக நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யத் தயங்க மாட்டீர்கள், இல்லையா?

வழக்கம் போல் நஞ்சுகண்டனின் பதில், புன்னகை.

அவர் மனத்தில் எழுந்த இக்கேள்வி விசுவரூபமெடுத்து அரித்துக் கொண்டிருந்தது.

நஞ்சுகண்டன் ஒரு தனி மனிதன் இல்லை; அவன் ஒரு ஸ்தாபனம்.

அபூர்வா தேவிக்கு எதைச் சந்திக்கவும் தாம் தயாராக இருக்க வேண்டும் என்று பட்டது. வேதபுரத்து வியாபாரிகளிலேயே முதன்மையான வியாபாரி நஞ்சுகண்டன்தான்.

இந்திர பிரஸ்தத்திலும் இந்த அரசியல்

> "அவர் ஜலதரங்கம் வாசிச்சே பணக்காரர் ஆனவராம்!"
> "அதனால?"
> "இப்பல்லாம் மினரல் வாட்டர் தரங்கம்தான் வாசிக்கறாருன்னா பார்த்துக்கோயேன்!"
>
> — பரணி

வியாபாரந்தான். அங்கேயிருக்கும் நஞ்சுகண்டர்கள் யாரென்றுதான் அபூர்வா தேவிக்குத் தெரியவில்லை.....

அபூர்வா தேவி 'தர்ம தரிசனம்' கொடுக்கத் தயாரான போது மணி எட்டே முக்கால். அவரெதிரே, அவர் தோழி வனிதா தேவி, சர்வாலங்கார பூஷிதையாய், சரீரமே நகைக் கடையாய் வந்து நின்றாள். சரீரம் முழுவதையும் நகையால் மறைப்பது அபூர்வா தேவிக்கு மிகவும் ஓர் ஆபாசமான ரசனையாக ஆரம்பத்தில் பட்டது.

தெய்வச் சிலையை ஆபரணத்தால் மூடி, அதன் கலை அழகை மறைக்கின்றவர்களிடம் வேறு என்ன ரசனையை எதிர் பார்க்க முடியும்?

அபூர்வா தேவியும் இப்பொழுது ஒரு தெய்வச்சிலை. வனிதா தேவியைப் போல் நகை அலங்காரம் செய்து கொண்டு, முடி சூடி, கையில் வேலுடன் பக்த கோடிகளுக்கு தரிசனம் தந்தாக வேணடும்!

ஆனால் அவர் தம்மைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்வதைத்தான் தவிர்த்தார். அந்த அளவுக்கு ரசனை அவரை விட்டு இன்னும் அடியோடு விடை பெறவில்லை என்பது ஆறுதலான விஷயம்.

அபூர்வா தேவி, வனிதாவிடம் சொன்னார்.

"எனக்கு அலுத்துப் போய்விட்டது."

"எது?"

"கோபுர வாசியாக இருந்து..."

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? ராணி போக வாழ்க்கை அலுக்கக் கூடிய விஷயமா?"

"நான் என் வேரைத் தேடிக் கொண்டு வந்தேன். மரம் என்னை விழுங்கி விட்டது. ஆகவே...."

"ஆகவே....?"

"யோசிக்கிறேன்."

"என்ன யோசிக்கிறீர்கள்?"

"இங்கிருந்து தப்பித்துச் சென்றாக வேண்டும்."

"எங்கே போகப் போகிறீர்கள்?" என்று திடுக்கிட்டுக் கேட்டாள் வனிதா.

அபூர்வா பதில் சொல்லவில்லை.

"சரி.. நேரமாகி விட்டது. வா போவோம் தரிசனத்துக்காக..."

மூன்று மணி நேரம் கடுந்தண்டனை, நின்று கொண்டே இருக்க வேண்டும். ஆட்டு மந்தைக் கூட்டம்!

இவர்களை ஆட்டு மந்தைகளாக்கிய அந்த ஸ்தாபனத்தைத்தான் முறியடித்தாக வேண்டும்.

இது சாத்தியமா? முதலில் இங்கிருந்து தப்பித்துச் சென்றாக வேண்டும். இதை வனிதாவிடம் சொல்லியிருக்கக் கூடாது.

அபூர்வா தேவி திரும்பிப் பார்த்தார்.

வனிதா அருகிலில்லை. அவரருகில் அவள் எப்பொழுதும் நின்று கொண்டே இருக்க வேண்டுமென்பது, கடைப்பிடிக்க வேண்டிய நியதிகளிலொன்று.

வனிதா எங்கே?

தரிசனம் முடியும் தருணம், வனிதா வந்து அபூர்வா தேவி அருகில் நின்றாள்.

"எங்கே போனாய்?" என்றார் அபூர்வா தேவி.

"நீங்கள் தப்பித்துப் போக உதவ..."

அபூர்வா தேவி அவளைத் திடுக்கிட்டுப் பார்த்தார்.

'தரிசன' விழா முடிந்து, உப்பரிகையிலிருந்து உள்ளே நுழைந்ததும் அபூர்வா தேவி கேட்டார் : "எப்படி முடியும்?"

"ஏன் முடியாது?" என்று கேட்டுக் கொண்டே வந்தான் நஞ்சுகண்டன்.

அபூர்வா தேவிக்குப் புரிந்து விட்டது. வனிதா நஞ்சுகண்டனுக்குத் தகவல் தெரிவித்திருக்கிறாள்.

"எப்படிப் போவது, சொல்லுங்கள்? நான் தப்பித்துப் போக வேண்டியது, உங்களிடமிருந்துதான். நீங்கள்தான் ஸ்தாபனம்...." என்றார் அபூர்வா தேவி, கைகளைக் கட்டிக் கொண்டு.

"முந்திய தலைவர் போல் சூட்சும சரீரமாகி விடுவதுதான் ஏற்ற வழி" என்றான் நஞ்சுகண்டன் மிக நிதானமான குரலில், புன்னகையுடன். அதே மர்மப் புன்னகை!

"இது அவ்வளவு கஷ்டமான விஷயமில்லை, மிஸ்டர் நஞ்சுகண்டன், நான் வேதபுரத்தைப் பற்றி எழுத வந்தேன். அதை முடித்து விட்டுத்தான் போவேன் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது" என்று கூறிய அபூர்வாவின் இடுப்பிலிருந்து விலகிய கையில் என்ன இருக்கிறதென்று கவனித்த நஞ்சுகண்டன் முகத்தில் பீதி படர்ந்தது!

(முற்றும்)



• பட்டு மாமி :
"Life time role"

21

நினைவலைகள்

WRITING ABOUT HER IS LIKE TRYING TO WRAP UP 115 POUNDS OF SMOKE.

Pete Martin என்கிற திரைப்படப் பிரமுகர் **Grace Kelly** என்கிற ஹாலிவுட் நடிகை பற்றிச் சொன்ன கருத்து இது.

திருமதி சௌகார் ஜானகி அவர்களைப் பற்றி எழுத நினைக்கும் போது இதே கருத்தைத்தான் நானும் சொல்ல விரும்புகிறேன். அவரைப் பற்றி எழுதுவதென்பது 115 பவுண்ட் புகையை வளைத்துப் பிடித்துப் பொட்டலம் கட்டுவதைப் போன்ற ஒரு கடினமான செயல் என்று.

நிறைய நடிக, நடிகையர் நாடகத்திலிருந்து வெண்திரைக்குச் சென்று அங்கும் வரலாறு படைத்ததுதான் நாம் கண்கூடாகக் கண்ட உண்மை. ஆனால் சௌகார் ஜானகி விஷயத்தில் மட்டும் just the opposite.

ஒரு கதாபாத்திரத்தை ஏற்று நடிக்கும் செயல்தான் நடிப்பு என்பது. நாடக மேடை நடிப்பு என்பது செயல்; வெண்திரை நடிப்பு என்பது எதிர்செயல் அல்லது எதிர்விளைவு (Stage is a medium of action; but the screen a medium of reaction) என்று சொல்வார்கள்.

ஆகவே எந்தச் சாதனத்திலிருந்து எந்தச் சாதனத்திற்குப் போகிறோம் என்பது மிக முக்கியமான ஒரு கணிப்பு.

மிகவும் புகழ்பெற்ற Orson Welles நாடக நடிகராகவும், திரைப்பட நடிகர், இயக்குனராகவும் செயல்பட்டிருக்கிறார். இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை அவர் அழகாகச் சொன்னார் :

"நாடக மேடையிலே நடிக்கும் போது நூற்றுக்கணக்கான காமிராக்கள் ஒரே நேரத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன. அதாவது நாடகப் பார்வையாளர்கள். ஆனால் சினிமாவில் ஒரே ஒரு காமிராதான் ஓடுகிறது. ஆக ஒரு இயக்குநரின் கலைப்பண்பும் அதன் இலக்கணமும் இந்த அடிப்படை உண்மையைக் கொண்டுதான் மாறுபடுகின்றன."

மேஜர் சந்திரகாந்த், சர்வர் சுந்தரம் ஆகிய நாடகங்களுக்குப் பிறகு நான் எழுதியது 'மெழுகுவர்த்தி'. அந் நாடகத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த அந்தக் கதாநாயகியின் பாத்திரத்தில் யாரை நடிக்க வைப்பது என்று எங்களுக்குள் பெரும் குழப்பம். வாக்குவாதங்கள் சூடாக நடைபெற்றன. அந்தப் பாத்திரத்திற்கு சௌகார் ஜானகி அவர்கள்தான் கரெக்ட் choice; ஆனால் அவரை எப்படி நெருங்கிக் கேட்பது என்கிற தயக்கமும் எழுந்தது. நாடகத்திலெல்லாம் அவர் நடிக்கவே வர மாட்டார் என்பதுதான் பலரது கருத்தாக இருந்தது. அவர் சினிமாவில் கொடி கட்டிப் பறந்த நேரம் அது!

ஆனால், "எந்த ஒரு நடிகைக்கும் இரண்டு

கே. பாலசந்தர்

பொறுப்புகள் இருக்கின்றன. ஒன்று : நடிகையாக மட்டுமே இருப்பது. இன்னொன்று : மேலும் மேலும் ஒரு நல்ல artiste ஆகத் தன்னை வளர்த்துக் கொள்வது. சௌகார் அவர்களுக்கு இந்த இரண்டு பொறுப்புகளும் புரியும். ஆகவே நிச்சயமாக நாடகத்தில் நடிக்க ஒப்புக் கொள்வார்'' என்று திடமாக நான் சொன்னேன்.

நான் சொன்னது பொய்க்கவில்லை! மேடையில் நடித்துப் பழக்கமில்லை என்பதால், முதலில் கொஞ்சம் தயங்கினாலும் மேஜர் சுந்தரராஜன் நாடக வடிவத்தை முழுதும் சுவைபடச் சொல்லக் கேட்டதும் சௌகார் ஒப்புக் கொண்டார்; இந்தத் தேனான செய்தி நாடகக் குழுவிலிருந்த அனைவருக்குமே ஒரு புத்துணர்ச்சியை ஊட்டியது. 'பாலும் பழமும்', 'புதிய பறவை' ஆகிய படங்களில் மிகத்திறம்பட நடித்து திரைவானில் அவர் புகழேணியில் இருந்த காலகட்டம் அது.

"ஸார், வயலின் ரிப்பேர் பண்ணட்டுமா?"
"நான் கூப்பிடவே இல்லையே!"
"உங்க பக்கத்து வீட்டுக்காரர்தான் போன் பண்ணினாரு!"
— மீனமேஷன்

நாடக ஒத்திகை தொடங்கியது.

'நாள் தவறாமல் அவரால் ஒத்திகைக்கு வர முடியுமா? வந்தாலும் குறிப்பிட்ட நேரத்திற்கு வர முடியுமா?' என்றெல்லாம் நாங்கள் பயந்து கொண்டிருந்த நேரத்தில், சிவப்பு நிற டாட்ஜ் காரில் சரியாகக் குறித்த நேரத்தில் நான் தவறாமல் மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் கிளப் அரங்கத்திற்கு வந்து விடுவார். அவரைப் பார்ப்பதற்கென்றே அரங்கைச் சுற்றி ஒரு கூட்டம் நிற்கும்.

மேடை நாடகத்தின்பால் அவருக்கிருந்த பயபக்தியும் நாடக சக நடிக, நடிகையருக்கும் இயக்குநரான எனக்கும் அவர் அளித்த மரியாதையும் எங்களை பிரமிக்க வைத்தன. எங்கள் நாடகக் குழுவில் ஒருவராகவே அவர் மாறி விட்டார்.

நாடக அரங்கேற்றத்தன்று நடந்த ஒரு நிகழ்ச்சி : நாடகம் ஆரம்பிப்பதற்கு முன் நடக்கும் பூஜையின் போது பங்குபெறும் கலைஞர்கள் அத்தனை பேரும் நாடகாசிரியர் - இயக்குநர் காலைத் தொட்டு மரியாதை செய்வது எல்லா நாடக நடிகை, நடிகர்களிடமும் ஒரு பழக்கம். திடீரென்று சௌகார் ஜானகி அவர்களும் என் காலைத் தொட்டு வணங்கியது எல்லோருக்கும் மிகப் பெரிய ஆச்சர்யத்தையும், எந்த அளவிற்கு மேடைக்கு அவர் மதிப்பும் மரியாதையும் காட்டுகிறார் என்பதையும் எடுத்துக்காட்டியது.

நாடகம் அனைவரின் பாராட்டையும் அபரிமிதமாகப் பெற்றது. இந்த நாடக அனுபவம் ஜானகி அவர்களுக்கு மிகப் பெரிய மகிழ்ச்சியையும் excitement ஐயும் கொடுத்தது.

நாடக ஒத்திகைகளின் போது அவர் தனிக் கவனம் எடுத்துக் கொள்வார்; மேடையில் சிறிதும் தடுமாற்றம் இருக்கக் கூடாது என்பதற்காகவே அதிகப்படியான ஒத்திகைகளை வைக்கும்படி என்னை அவர் வற்புறுத்துவதும் உண்டு.

மெழுகுவர்த்தி நாடகம் வெள்ளி விழா நாடகமாக நடந்த போது நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் தலைமைதாங்கி நினைவுப் பரிசுகளை வழங்கினார்.


இந்த நாடகத்தை அடுத்து நான் எழுதிய எதிர்நீச்சல் நாடகத்தில் சௌகார் ஜானகி அவர்களை 'பட்டு மாமி' என்கிற கதாபாத்திரத்தில் நடிக்கும்படி கேட்டுக் கொண்டேன். 'திரும்பவும் எங்கள் நாடகத்தில் நடிப்பாரா?' என்று சந்தேகம் ஒரு புறம் இருந்தாலும் அவரது நாடக ஆர்வமும் ஒத்துழைப்பும் எங்களை மீண்டும் வேண்டுகோள் விடுக்கச் செய்தது.

" 'பட்டு மாமி' கதாபாத்திரம் ஹாஸ்யப் பாத்திரமாக இருக்கிறதே! நான் நடித்தால் மக்கள் ஒப்புக் கொள்வார்களா? இந்த விஷப் பரீட்சை வேண்டுமா என்று பாருங்கள்'' என்று சொன்னார் ஜானகி.

"இதுவரை நீங்கள் ஏற்று நடித்த கதாபாத்திரங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக, மிகவும் வித்தியாசமான ஹாஸ்ய பாத்திரமாக இருப்பதால், இது ஒரு life time role ஆக அமையும் என்பதில் எனக்கு நிறையவே நம்பிக்கையிருக்கிறது'' என்று நான் அவரை 'கன்வின்ஸ்' செய்த பிறகு 'பட்டு மாமி'யாக நடிக்க ஜானகி ஒப்புக் கொண்டார்.

அவர் மிகத் திறம்பட இந்த ரோலில் நடித்ததாலும் ஜானகியிடமிருந்து எதிர்பார்க்காத ஒரு குணசித்திரமாக அமைந்து விட்டதாலும் இந்த பட்டுமாமி பாத்திரம் மாபெரும் வெற்றி பெற்றது. எங்கும் பட்டு மாமியைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. ஒரு நாடகத்தின் மூலம் ஒரு குறிப்பிட்ட கேரக்டர் இந்த அளவிற்குப் பிரபலமாவதும் பேசப்படுவதும் இதுவே முதல் முறையாக நிகழ்ந்த ஒரு அதிசயம்.

"பட்டு மாமியைப் பார்த்தீர்களா?" என்று போஸ்டர் அடித்து ஒட்டுமளவுக்கு அந் நாட



கழும், இந்தக் கதாபாத்திரமும் பிரபலமாயின. புடவைக் கடைகளில் 'பட்டு மாமி' பெயரைச் சுமந்து புடவைகள் வந்தன. இதன் பின்னர் இதே போன்று மடிசார் கட்டிய மாமி கேரக்டர்கள் நாடகங்களில் பரவலாக வர ஆரம்பித்தன; ஆனால் சௌகார் ஜானகியின் பட்டு மாமி கேரக்டருக்கு முன்பு தோற்றுத்தான் போயின.

அடுத்த நாடகம் 'நீர்க் குமிழி'; அதில் அவருக்கு டாக்டர் வேடம். திரைப்படத் துறையில் என்னை இயக்குநராக அறிமுகப் படுத்தியதும் என்னை அடையாளம் காட்டியதும் இந்த 'நீர்க்குமிழி'தான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

எங்களது நாடக உலகத் தொடர்பு வெள்ளித் திரையிலும் தொடர்ந்தது.

'நீர்க்குமிழி' திரைப்படத்தில் படகு ஓட்டிக் கொண்டே ஒரு பாடல் காட்சி. போட் கிளப்பில் படப்பிடிப்பிற்கு வந்து இறங்கிய அவர், தனது பயத்தை வெளியே காட்டிக் கொள்ள விருப்பமில்லாமல், தன்னால் தனியாக படகு ஓட்ட முடியாதென்றும், தனக்குத் தண்ணீரில் ஏதோ கண்டம் இருப்பதாகவும் இந்தப் பாடல் காட்சியை வேறு விதமாக எடுத்துக் கொள்ளச் சொல்லுங்கள் என்றும் எனது உதவியாளர்களிடம் சொல்லியனுப்பினார்.

எனது ஈகோ முதல் முறையாக சற்றுக் காயம் பட்டது.

“அவரை வீட்டிற்குப் போகலாம் என்று சொல்லியனுப்பி விடு; ஜானகி மாதிரி உடல் வாகு கொண்ட ஒரு ஜூனியர் ஆர்டிஸ்டை அழைத்து வர ஏற்பாடு செய். 'லாங் ஷாட்'டுகளை டூப் போட்டு எடுத்துக் கொள்கிறேன். ஆகாயத்தை background ஆக வைத்து ஜானகியின் குளோசப்களை இன்னொரு நாள் எடுத்துக் கொள்கிறேன்” என்று கூறி இந்த முடிவை ஜானகியிடமும் சொல்லி விட்டு வரச் சொன்னேன். சிறிது நேரம் கழித்து அவர் இருந்த பக்கம் எனது பார்வையைச் செலுத்திய போது அவர் போட்டில் உட்கார்ந்து கொண்டு துடுப்பு எப்படிப் போடுவது என்று கேட்டுத் தெரிந்து கொண்டு பிராக்டிஸ் பண்ணிக் கொண்டிருந்தார். தனக்குப் பதிலாக ஒரு 'டூப்' நடிப்பதை அவரால் சகித்துக் கொள்ள முடியாத நிலையில், தானே தண்ணீரில் இறங்கி விட்டார்!

அதுதான் ஜானகி; அதுதான் உண்மையான ஒரு கலைஞரின் மேம்பாடு.

பிற்பாடு எத்தனையோ படங்களில் நாங்கள் தொடர்ந்து பணிபுரிந்தோம்.

To have Sowcar Janaki in the set is real inspiration for any creative director.

வாழ்வில் எத்தனையோ சாதனைகளைக் கண்டு, கூடவே சோதனைகளையும் ஒருமுகமாகத் தாங்கிக் கொண்டு, எதிர்நீச்சலையும் இன்முகத்தோடு போட்டுக் கொண்டு வாழ்ந்து காட்டும் இவரைப் போன்ற துணிச்சல் மிகுந்த பெண்மணியை நாம் காண்பது மிக மிக அபூர்வம்தான்.

அவருடைய ஆங்கிலப் புலமை என்னை அவ்வப்பொழுது பிரமிக்க வைக்கும்.

அவர் கோபமாக இருக்கும் போது ஆங்கிலம் இன்னும் அழகாக இருக்கும்!

தனக்குள்ள சிந்திக்கின்ற திறன் அல்லது ஐக்யூ (I.Q.) தனது வேலைக்காரர்கள் உள்பட எல்லோரிடமும் அதே அளவுக்கு இருக்க வேண்டும் என்று சௌகார் எதிர்பார்ப்பது தான் அவருடைய சின்ன பலவீனம் என்று நான் ஒரு Rotary Club விழாவில் சொன்னேன்.

“It requires more courage to suffer than to die” என்கிற Napoleon quotation ஐ ஒருமுறை அவர் என்னிடம் சொன்ன போது எத்தனை வாழ்க்கைச் சோகங்களை அவர் தாங்கிக் கொண்டிருந்திருக்கிறார் என்பது புரிந்தது.

வெண் திரைப் புகழும் popularity யும் ஒரு credit card மாதிரி. பர்ஸ், உடைமைகள் எல்லாவற்றையும் பறிகொடுத்து விட்டு ஏதோ ஒரு ஊரில் சல்லிக்காசு கூட கையில் இல்லாமல் நிற்கின்ற நிலைக்குத் தள்ளப் பட்ட போதும் சினிமா கலைஞரின் முகத்துக்குப் பின்னால் ஒளிவிட்டு நிற்கின்ற வெண்திரைப் புகழ் ஒரு credit card மாதிரி.

துரதிர்ஷ்டவசமாக எந்த credit cardக்கும் expirty date இருக்கிறது.

ஆனால் சௌகார் ஜானகியின் முகத்திற்கு மட்டும் expirty date கிடையாது! இன்றைக்கும் என்றைக்கும் அதே மரியாதையையும் இம்மியளவு கூடக் குறையாத அந்தஸ்தையும் அவரது வெண்திரைப் புகழ் ஆணையிட்டுப் பெற்றுக் கொள்கிறது என்று சொன்னால் அது மிகையில்லை.

(தொடரும்)

படம் உதவி : **பிலிம் நியூஸ் ஆனந்தன்**



1

கொல்ல வல்லாயோ கிளியே



"உங்க உண்மையான பெயரே 'அகில்' தானா?"

"இல்லை...! வீட்ல அம்மா அப்பா வெச்ச பேர் அகிலாண்டேஸ்வரன். காலேஜ் டேஸ்ல ஃப்ரண்ட்ஸ் 'அகில்... அகில்'ன்னு கூப்பிடப் போய் அதையே வெச்சுகிட்டேன்..."

"காலேஜ் டேஸ்ல இருந்தே... ஓவியம் வரையறதுல உங்களுக்கு ஈடுபாடு உண்டா...?"

"ஓரளவுக்குத்தான் இருந்தது. பின்னாடி அதை ப்ராக்டீஸ் பண்ணிட்டேன்."

"இதுவரையிலும் எத்தனை ஆர்ட் காலரி எக்ஸிபிஷன் கண்டக்ட் பண்ணியிருக்கீங்க...?"

"பத்தொன்பது..."

"உங்களை ஒரு கேள்வி கேட்டா நீங்க தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே...?"

'ஏணிப்படிகள்' - வானொலி பேட்டிக்காக வந்திருந்த அந்தப் பெண் அகிலிடம் இந்தக் கேள்வியைக் கேட்டதும் அவன் அழகாய்ப் புன்னகைத்தான்.

"பேட்டின்னு வந்த பிறகு நீங்க எந்தக் கேள்வியை வேண்டுமானாலும் கேட்கலாம். ஐ'ம் ரெடி டு ஆன்ஸர்..."

"உங்க ஆர்ட் காலரியை நேத்து பார்த்தேன். அதில் பாதிக்கு மேல் பெண்களின் ஓவியங்கள். அந்த ஓவியங்களில் ஒரு 'டீஸன்ஸி' இல்லை. பெண்களோட அழகை உங்க தூரிகை கொச்சைப்படுத்தியிருக்கு. இப்படி நீங்க கொச்சைப் படுத்தலாமா...?"

அகில் தன் அடர்த்தியான தலைக்கேசத்தை இரண்டு கைகளாலும் கோதி விட்டுக் கொண்டு, பல் வரிசை நேர்த்தியாய்த் தெரிய சிரித்தான்.

" 'பெண்'ன்னு சொன்னாலே அழகுதான். அந்த அழகை என்னோட விரல்கள் வெளிப்படுத்தும் போது சில சில்மிஷ வேலைகளைப் பண்ணத்தான் செய்யும். ஆனா... அதில் நீங்க சொல்ற மாதிரி கொச்சைப்படுத்தறதில்ல... என்னோட ஓவியங்கள் யாருக்குக் கொச்சையா தெரியுதோ... அவங்க அந்த ஓவியங்களைப் பார்க்கிற கோணம் சரியில்லைன்னு அர்த்தம்..."

"உங்ககிட்டே இருக்கிற ஒரு தனிச்சிறப்பு... ஒருத்தரை ஒரு நிமிஷம் பார்த்தாலே போதும்; அவரை அப்படியே துல்லியமாய் வரையக் கூடியவர்ங்கற நியூஸ் உண்மைதானா...?"

"உண்மையோ... உண்மை! ஒருநாளைக்கு நீங்க என்னோட ஆர்ட் காலரிக்கு வாங்க. உங்களை வரைஞ்சு காட்டறேன்..."

"உங்களோட ஆம்பிஷன் என்ன?"

"கூடிய சீக்கிரமே வெளிநாடுகளுக்குப் போய் எக்ஸிபிஷன் கண்டக்ட் பண்ணி என்னோட திறமையை வெளிப்படுத்தணும்..."

"உங்களுடைய முயற்சி வெற்றியடைய நிலையத்தின் சார்பில் வாழ்த்துக்கள்..."

"நன்றி...!"

அகில் என்கிற அந்த முப்பத்திரண்டு வயது இளைஞன் பேட்டியை முடித்துக் கொண்டு, வானொலி நிலையத்தை விட்டு வெளியே வந்த போது சூரியன் மேற்கில் துளி வெளிச்சம் இல்லாமல் காணாமல் போயிருந்தான். கார்ப்பரேஷன்

விளக்குகள் மின்சாரத்துக்காகக் காத்திருந்தன.

தன் ஃபியட் காரை கிளப்பிக் கொண்டு சாலைக்கு வந்தான் அகில். மணிக்கட்டில் இருந்த எலக்ட்ரானிக் கடிகாரம் நேரம் 7:25 என்பதை சிவப்பாய் ஒளிர்ந்து காட்டியது.

அகிலுக்கு சிட்டியின் அவுட்டரில் இருக்கும் மகாராணி நகரில் வீடு. பதினைந்து கிலோ மீட்டர் தூரம். போய்ச் சேர எப்படியும் எட்டு மணியாகி விடும்.

கார், நகரின் வெளிச்ச மின்னல்களை விழுங்கி விட்டு 'மகாராணி நகர்' போகும் சாலையில் கிலோ மீட்டர்களை பின்னுக்குத் தள்ளியது.

வெளிச்சப் பொட்டுக்கள் இல்லாத இருட்டான சாலை. எதிரே வாகனங்கள் வராததால் ஆக்ஸிலேட்டரில் காலை அழுத்தமாகவே வைத்திருந்தான் அகில். கார் அறுபதில் சீறிக் கொண்டிருந்தது. ஆடியோ காஸெட்டின் ட்ரம்ஸ் ஸ்ட்ரோக்குக்கு ஏற்ற மாதிரி அகிலின் விரல்கள் ஸ்டீயரிங்கில் தாளம் போட்டுக் கொண்டிருக்க, அவனுடைய பார்வை சாலையில் இருந்தது.

மகாராணி நகருக்குப் போகும் பிரிவில் கார் தன் வேகத்தைக் குறைத்துக் கொண்டு திரும்பிய போது -

சற்று தொலைவில் ஒரு மரத்துக்குக் கீழே நின்றிருந்த வாகனம் ஒன்று சட்டென்று தன் ஹெட்லைட்களை உயிர்ப்பித்துக் கொள்வதை உணர்ந்தான் அகில்.

"அது என்ன வாகனம்...? காரா... வேனா...?"

ராஜேஷ்குமார்

அகில் யோசித்துக் கொண்டிருக்கும்போதே அந்த ஹெட்லைட் வெளிச்சப் புள்ளிகள் வேகமாய் அவனுடைய காரை நோக்கி வந்தன.

"இந்தக் குறுகலான ரோட்டில் எதற்காக இவ்வளவு வேகமாய் வருகிறார்...?"

அகில் தன் ஹெட்லைட்களை ஒரு தடவை அணைத்து மறுபடியும் போட்டான். எதிரே வருவது ஒரு லாரி என்பது சட்டென்று உறைத்தது. ஒரு ராட்சசன் சப்தம் போட்டுக் கொண்டு வருகிற மாதிரி ஓர் இரைச்சல்.

அகிலின் உடம்பில் தீப்பற்றிக் கொண்ட பரபரப்பு. ஹாரனை பலமாய்க் கொடுத்துக் கொண்டே ஹெட்லைட்களை அணைத்து அணைத்துப் போட்டான். லாரியின் ஹெட்லைட்கள் ஒரு தடவை அணைத்த போது காரின் ஹெட்லைட் வெளிச்சம் லாரியின் உள்ளே பாய்ந்தது.

ஓர் இளைஞன் வியர்வை முகமாய் ஸ்டீயரிங் பிடித்திருக்க, பக்கத்தில் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள்.

அகிலின் மனசுக்குள் 'பளிச்'சென்று அந்த முகங்கள் மாட்டிக் கொண்டன.

"யார் இவர்கள்...?"

"எதற்காக இவ்வளவு வேகமாய் வருகிறார்கள்...?"

லாரி மூர்க்கமாய், ரோட்டையே அடைக்கிற மாதிரி வர, அகில் லாரியின் கோபமான முத்தத்தை தவிர்க்க, ஸ்டீயரிங்கை ஒடித்து இடதுபக்கமாய்த் திருப்ப, வயல்வெளிக்குள் கார் பாய்ந்து, சின்னச் சின்ன சப்தங்களோடு சேற்றுக்குள் புதைந்து ஒரு பக்கமாய்ச் சரிந்தது.

காரின் இடதுபக்கக் கண்ணாடி, சில்லுச் சில்லாய் உடைய, அகிலின் கன்னத்தை ஒரு கண்ணாடிச் சில் ரத்தமாய்க் கீறிப் பார்த்தது.

இரவு எட்டரை மணி.

மகாராணி நகர் போலீஸ் ஸ்டேஷன். வலது கன்னத்தில் பிளாஸ்திரியோடு நாற்காலியில் உட்கார்ந்து, இன்ஸ்பெக்டர் அரவிந்தன் கேட்ட கேள்விகளுக்கு அகில் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

"மிஸ்டர் அகில்! நீங்க சொல்றது ஆச்சர்யமாயிருக்கு. அந்த லாரி கேபின்ல டிரைவருக்கு



பெண் குழந்தை பிறந்தது என்று கவலை வேண்டாம்!
அதனை கொண்டு சென்று அரசு தொட்டிலில் இட வேண்டாம்!

உங்கள் பெண், ஆண் குழந்தைகளை படிக்க வைக்க திருமணம் முடிக்க கவலை கொள்ள வேண்டாம். இதோ ஒரு அருமையான திட்டம்! சிறிய முதலீடு! பெரிய வருமானம்!!

திருமாங்கல்ய திருமண திட்டம்



வயது	தாங்கள் செலுத்தும் தொகை	டெப்பாசிட் செய்யும் மாதங்கள்	தங்களுக்கு கிடைக்கும் தொகை
1 வயது	ரூ. 1,000/-	240	64,000
1 வயது	ரூ. 2,500/-	240	1,60,000
1 வயது	ரூ. 5,000/-	240	3,20,000
5 வயது	ரூ. 15,000/-	180	3,60,000
10 வயது	ரூ. 45,000/-	120	3,60,000

* இவை தவிர இன்னும் பல டெப்பாசிட் திட்டங்களும், 6 மாத வட்டி 1 வருட வட்டி டெப்பாசிட் செய்தவுடனேயே பெறும் திட்டங்கள் உண்டு.

** தங்க நகை, இந்தியாவில் எங்கும் உள்ள சொத்துக்களுக்கும் பணம் கிடைக்கும்.

தொடர்பு கொள்க!

சேவா தேவிகள் பங்குதாரர்களுக்கு மட்டும் | செவ்வாய் வார விடுமுறை

சசிநாத் சாஸ்வத நிதி லிமிட்டெட்

H.O. 36, ரங்கநாதன் தெரு,
சென்னை - 600 017. Ph : 4346786
கிளைகள் : 35, M.C. ரோடு சென்னை - 600 021.
34, C, ரயில்வே ரோடு, காஞ்சிபுரம் - 631 501.
56, கடப்பா டிரங் ரோடு, திருத்தணி - 631 209.

மக்கள் சேவையில் 17 ஆம் ஆண்டு

சசிநாத்துடன் இணைவோம்! சௌவுக்கியமாக வாழ்வோம்!

SOORYA ADVERTISINGS

மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்!

மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்!
மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்! மகளிர் மட்டும்!

மோட்டார் சைக்கிள் பரிசுப் போட்டி - 16

முதலில் இந்த இதழை ஒரு வரி விடாமல் படித்து முடியுங்கள். அப்புறம் கீழேயுள்ள 12 சொற்களை, ஒன்றுக்கொன்று தொடர்புடைய ஜதைகளாக ஒன்று சேருங்கள். ஆறு ஜோடிகளுக்கும் உரிய எண் - எழுத்து சேர்க்கையைக் கூப்பனில் தரப்பட்டுள்ள கட்டங்களில் நிரப்பி வைத்துக் கொள்ளுங்கள். 26 வாரங்கள் முடிந்ததும் போட்டி கூப்பன்கள் அனைத்தையும் சேர்த்து அனுப்ப வேண்டும். அதிகப் போட்டிகளில் பங்கேற்று, அதிக அளவில் சரியான விடைகள் அனுப்பிய ஒருவருக்கு மோட்டார் சைக்கிள் பரிசு. ஆறுதல் பரிசுகளும் உண்டு. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

போட்டி - 16

1. பணியாரம்	a. அபூர்வா
2. லவ்	b. ராதாகிருஷ்ணன்
3. தரிசனம்	c. சௌகார்
4. கன்ஸோல்	d. அகிலாண்டேஸ்வரன்
5. க்ரெடிட் கார்ட்	e. அமராவதி
6. 'ஏணிப்படிகள்'	f. 'அங்கு'

என் பெயர் : ....

விலாசம் : ....

பக்கத்துல ஒரு பெண்ணும் இருந்தாளா?"

"ஆமா... இன்ஸ்பெக்டர்.."

"அவ எப்படியிருந்தா...?"

"ஹெட்லைட் வெளிச்சத்துல அவ முகம் ரெண்டு விநாடிதான் பார்வைக்குக் கிடைச்சது. அடையாளம் சொல்லத் தெரியலை. ஆனா திருத்தமான முகம்."

"டிரைவரையும் பார்த்திங்க இல்லையா?"

"ஆமா..."

"அதுவும் ரெண்டு செக்கண்ட்ஸ்தான்..."

"மறுபடியும் அவர்களைப் பார்த்தா அடையாளம் கண்டுபிடிச்சுடுவீங்களா...?"

"கண்டிப்பா..."

"எல்லா செக்போஸ்ட்களுக்கும் தகவல் அனுப்பிட்டோம். விடியறதுக்குள்ளே லாரியைப் பிடிச்சுடுவோம். பை.த.பை மிஸ்டர் அகில்! இது ஒரு கொலை முயற்சியாய் இருக்கும்னு நீங்க நினைக்கறீங்களா?"

அகில் புன்னகைத்தான். "இன்ஸ்பெக்டர்! நான் ஒரு ஓவியன்! என்னோட வேலை உண்டு; நான் உண்டுன்னு இருக்கேன். என்னைக் கொலை செய்யறதுல யாருக்கு என்ன லாபம்னு தெரியலை... அந்த டிரைவர் என்னைக் கொல்றதுக்காகத்தான் லாரியை வேகமா ஓட்டிட்டு வந்தானா? இல்லை அவ ரோட டிரைவிங்கே அப்படித்தானான்னு எனக்குத் தெரியலை."

"உங்களுக்குக் கல்யாணம்...?"

"இன்னும் இல்லை."

"மகாராணி நகர்ல வீடுன்னு சொன்னீங்க...?"

"ஆமா..."

"எந்த இடத்துல...?"

"கார்டன் அவென்யூ ரோட்ல துளசி அபார்ட்மெண்ட். ஏழாவது மாடியில் ஃப்ளாட்..."

"வீட்ல வேற யார் இருக்காங்க...?"

"நான் மட்டும்தான்..."

"பேரண்ட்ஸ்...?"

"கிராமத்துல இருக்காங்க. மூணு மாசத்துக்கொரு தடவை என்னைப் பார்க்க வருவாங்க. ஒரு வாரம், பத்து நாள் இருந்துட்டுப் போயிடுவாங்க..."

"ரேடியோ ஸ்டேஷன்ல பேட்டியை முடிச்சுகிட்டு நீங்க திரும்பும் போது மணி எவ்வளவு...?"

"ஏழு இருபத்தஞ்சு..."

"யாராவது உங்க காரை ஃபாலோ பண்ற மாதிரி நீங்க ஃபீல் பண்ணீங்களா?"

"இல்லை..."

"தொழில்ரீதியா உங்களுக்கு யாராவது எதிரிகள் உண்டா...?"

"இருக்க வாய்ப்பே இல்லை..! இது பணத்துக்காக நான் செய்யற தொழில் இல்லை.

என்னோட ஆத்மதிருப்திக்காகச் செய்யறது... பெரிய அளவில் புகழ்பெற்ற ஓவியனும் இல்லை..."

"உங்களுக்கு நெருங்கின ஃப்ரெண்ட்ஸ்?"

"குறிப்பிட்டு சொல்லும்படியா யாரும் இல்லை..."

இன்ஸ்பெக்டர் அரவிந்தன் எழுந்தார். "டோண்ட் ஒர்ரி மிஸ்டர் அகில். விடியறதுக் குள்ளே அந்த லாரியை மடக்கிடுவோம். வயல் சேத்துல சிக்கின உங்க காரை நாளைக்கு எடுத்துக்கலாம். இப்போ ஜீப்ல உங்களை ட்ராப் பண்றேன்."

"தேங்க்யூ... இன்ஸ்பெக்டர்..."

போலீஸ் ஜீப் மகாராணி நகருக்குள் நுழைந்து, இரண்டு தெருக்களைக் கடந்து, ஏழு மாடிகளோடு நின்றிருந்த துளசி அபார்ட்மெண்ட்டுக்கு முன்பாய் போய் நின் றது.

மகாராணி நகர் அந் நேரத்துக்கே இருட் டுக்குள் ஆழ்ந்து நிசப்தமாய் இருந்தது. ஒரு சில வீடுகளில் மட்டும் ட்யூப் லைட் வெளிச் சத்தை பூசிக் கொண்ட ஜன்னல்கள் தெரிந் தன.

அகில் ஜீப்பிலிருந்து இறங்கினான். இன்ஸ்பெக்டர் அவன் தோளைத் தட்டி னார். "பி... கம்ஃபர்டபிள் மிஸ்டர் அகில்... லாரியை மடக்கி ஆட்களைப் பிடிச்சதும் உங்களுக்குத் தகவல் தர்றேன். போன் இருக்கா...?"

"இன்னும் வரலை."

"நோ... பிராப்ளம். நான் ஜீப்பை அனுப்ப றேன். ஸ்டேஷனுக்கு வந்துடுங்க."

அகில் நன்றி சொல்லித் தலையாட்ட, அரவிந்தன் ஜீப்பைக் கிளப்பிக் கொண்டு புகை பரவப் போனார்.

அகில் வலிக்கிற கன்னத்துக் காயத்தை மெல்லத் தடவியபடி அபார்ட்மெண்டின் கீழ்த்தளத்துக்கு வந்தான். கீழ்த்தளம் வெறிச் சோடிப் போயிருக்க, லிஃப்ட் காத்திருந்தது.

உள்ளே நுழைந்து, லிஃப்டின் கொலாப்ஸி பின் கதவைச் சாத்த முயன்ற விநாடி,

"எக்ஸ்க்யூஸ்மீ..." என்று குரல் கொடுத்துக் கொண்டே ஒரு ஆணும் பெண்ணும் வேக வேகமாய் வந்து லிஃப்ட்டுக்குள் நுழைந்தார் கள்.

ஆண் கதவைச் சாத்தி ஏழாவது பட்ட னைத் தட்ட, லிஃப்ட் மேலே உயர்ந்தது.

அகில் அவர்களை ஏறிட்டுப் பார்த்தான். மூளையின் முக்கிய பகுதியில் நரம்பு ஒன்று சுளீரென்று சுருண்டது.

லாரி கேபினில் பார்த்த,

அதே ஆண்.

அதே பெண்.

(தொடரும்)

• திவ்யபாரதி



சினி சிப்ஸ்

திவ்யபாரதியின் திவ்ய சரிதம்...

●● பிரசாந்த், ஹிந்திக்குப் போகிறார். புக்காகி இருக்கும் 'முன்னா', 'கலி கலி அனார்கலி' இரண்டிலும் ஹீரோயின் மனிஷா கொய்ராலா என்பது அறிக.

●● வருஷம் தவறாமல் சபரிமலை போகிறார் ராம்கி. அடுத்த வருஷ இறுதிக்குள் திருமணம் உறுதி என்கிறார். ஐயப்பன் முடித்து வைக்கக் கடவாராக.

●● 'யாகவா' தனபாலனுக்கு சமூக சேவை ஆர்வம் மிகுதி என்பது தெரிந்திருக்கும். அவரது சேவையைப் பாராட்டி, இத்தாலியின் 'டயேன்டா' பல்கலைக் கழகம் சர்செவாலியர் பட்டம் தருகிறது. பட்டம் வரும் வேளை, படங்களும் (இனிமேலாவது) ஹிட்டாகப் பிரார்த்திப்போம்.

●● 'தமிழச்சி' படத்தில் பத்திரிகை நிருபராக கெஸ்ட் ரோலில் வருகிறார் ஒரு பெரிய நடிகை.



• ரேவதி

பெரிய நடிகை எப்படி கெஸ்ட் ரோலுக்கு ஒப்புக் கொண்டார்? 'கேரக்டர் பிரமாதம்' என்பது நடிகையின் பதில். வித்தியாசமான நடிகை இல்லை? கடைசி வரியில் நபரை அறிக.

●● மறைந்த திவ்யபாரதியின் திவ்ய சரிதம் சன் டீ.வி.யில் 26 வாரம் வரப் போகிறது. ரசிகர்களின் ஜென்ம சாபல்யம் தீரக் கடவது. இதில் எழுத்தாளராக ஒரு பிரபல நடிகர் வருகிறார். யார் அவர்? இதையும் கடைசி வரியில் காண்க.



• சத்யராஜ்

●● நெப்போலியன். காண்பவரிடமெல்லாம் மூக்கு சிந்தாத குறையாகப் புலம்புகிறார். காரணம்? அருமையான இந்திப்பட (அனில்கபூர் படம்) வாய்ப்பு அம்போ! ஏனாம்? ராஜமுத்திரை, வனஜா கிரிஜா, தமிழச்சி, என் பொண்டாட்டி நல்லவ, மாஸ்டர் என்று அங்கே இங்கே நகர முடியாதபடிக்குத் தமிழ்ப் படங்கள். 'விட்டுத் தள்ளுங்க சார்!' என்று ஆறுதலாக ஒரு கார்டு போடுங்கள்.

●● சத்யராஜ் தன் சொந்த வீடு உருவாகக் காரணமானவர் படத்தை வீட்டு வாசலில் மாட்டி வைத்திருக்கிறார். மேஸ்திரி? கொத்தனார்? கான்ட்ராக்டர்? அடுத்த வரியின் கடைசி நபர்.

1. ரேவதி, 2. ஜெமினி கணேசன், 3. தாமஸ் ஆல்வா எடிசன்.

— ராம் கம்பர்



ஸ்ரீ சங்கர-நாராயணர் துணை

சென்னை சாலிக்ராமம், தேவராஜ் நகரில், திருமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, கடவுளின் ஆசியினாலும், அங்கத்தினர்களின் ஆர்வத்தினாலும், பக்தகோடிகளின் உதவியினாலும், கடந்த 10 வருஷங்களில் 5 முறை கும்பாபிஷேகம் நடத்தி ஸ்ரீ மஹா கணபதி, ஸ்ரீ கல்யாண நவக்ரஹங்கள், ஸ்ரீ துர்க்கை, ஸ்ரீ ஆஞ்சனேயர்,

ஸ்ரீ கோமதி அம்மன்

ஸ்ரீ தர்ம சாஸ்தா, ஸ்ரீவள்ளி - முருகன் - தெய்வானை ஆகிய மூர்த்திகளுக்குக் கோவில்கள் அமைத்திருக்கிறோம்.

மற்றெந்த கோவிலிலும் இல்லாதபடி நவக்கிரஹங்கள் தத்தம் தேவியருடன் காட்சி அளிப்பது இக்கோவிலின் ஒரு சிறப்பு அம்சமாகும்.

ஸ்ரீ கோமதி அம்மனுக்கு இக்கோவில் வளாகத்தில் கோவில் இருக்கிறதென்றும் **ஸ்ரீ சங்கர நாராயணர்** கோவில் திருப்பணி நடந்து கொண்டிருக்கிறதென்றும் பக்தகோடிகள் பலருக்கும், முக்கியமாக இந்த தெய்வங்களைக் குலதெய்வமாகக் கொண்டவர்களுக்குத் தெரியாது. திருப்பணி முடியும் தருவாயில் உள்ளது.

நிகழும் பவ வருஷம் தை மாதம் 22ந்தேதி (5.2.1995) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு மேல் 9 மணிக்குள்

ஸ்ரீ சங்கர-நாராயணருக்கு ஆகம விதிப்படி அஷ்டபந்தன

மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

இதைக் கண்ணுறும் பக்தகோடிகள் கும்பாபிஷேகச் செலவினங்களுக்குத் தங்களாலான த்ரவிய த்யாகம் செய்து கும்பாபிஷேக வைபவத்தில் கலந்து கொண்டு ஸர்வ மங்களங்களையும் அடையுமாறு பிரார்த்திக்கிறோம்.

மணியார்டர்/செக் அனுப்ப வேண்டிய முகவரி :

ஸ்ரீ சங்கர-நாராயணர் டிரஸ்ட்

8, ஸ்ரீராமர் தெரு, தேவராஜ் நகர், சாலிக்ராமம், சென்னை - 600 093.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

தொலைபேசி எண் : 4831832

போர்ட் ஆஃப் டிரஸ்டீஸ்
ஸ்ரீ சங்கர-நாராயணர் டிரஸ்ட்

முதல் ஆண்டு அஞ்சலி



1902 — 1993

'ஹிந்து' கே.எஸ். ராமஸ்வாமி

பெங்களூர்

இன்சொல் விளைநிலத்தில்
அன்புநீர் பாய்ச்சிய
பண்பாளர் பாதமலர்
பணிவுடன் போற்றுவமே.

— குடும்பத்தினர்

சட்டத்தின் காவலர்; சாமானியரின் தோழர்!



ராஜாஜி மேற்கு வங்க கவர்னராக இருந்த போது அவருக்குத் தான் வைத்தியம் செய்திருப்பதாகக் கூறிக் கொண்டு ஒரு போலி டாக்டர் பலரை மோசடி செய்து வந்தார். அவர் மீது அரசு வழக்குத் தொடுத்து, ராஜாஜியை சாட்சியாக அழைத்தது. ராஜாஜி கௌரவம் பார்த்தாரில்லை. சட்டத்தை அமுல்படுத்த ஒத்துழைக்க வேண்டியது தமது கடமை என்று உணர்ந்து, கவர்னர் ஜெனரல் பதவி வகித்திருந்த அவர் நீதிமன்றத்தில் சாட்சிக் கூண்டில் ஏறினார்!

டாக்டர் சார்பில் வழக்காடிய வக்கீல், "ஐயா! நீங்கள் கவர்னராக இருந்த போது ஆயிரக்கணக்கான நபர்களைச் சந்தித்திருப்பீர்கள். குறிப்பாக இவர் வந்து உம்மைப் பார்க்கவே இல்லை என்று உங்களால் ஞாபகம் வைத்திருந்து கூற முடியாது இல்லையா?" என்று கேட்டார்.

ராஜாஜி புன்னகையுடன், "இளைஞரே! இப்படி ஒரு சந்தேகத்தை நீங்கள் எழுப்புவது சரியே. ஆனால் இதை நான் எதிர்பார்த்து, கவர்னராக இருந்த போது நான் எழுதிய டயரியை உடன் கொண்டு வந்திருக்கிறேன். இதில் பலரது பெயர்கள் காணப்படுகின்றன. ஆனால் உமது கட்சிக்காரர் பெயர் இல்லை!"

போலி டாக்டர் தண்டனை பெற்றார். சட்டத்தின் ஆட்சிக்கும், நீதி வழங்குதலுக்கும் சிறந்த ஜனநாயக மரபுகளுக்கும் அவ்வளவு முக்கியத்துவம் தந்தார் ராஜாஜி. சட்ட மறுப்பு இயக்கங்கள் மூலம்தான் நாடு சுதந்திரம் பெற்றது என்பதை அறியாதவர் அல்லவே அவர்! அதனாலேயேதான் சுதந்திர இந்தியாவில் சட்டமும் நீதியும் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதில் மிகுந்த கவனம் செலுத்தினார்.

●● 1950களில் அவர் தமிழக முதல்வராக இருந்த போது ஒரு குற்றவாளி எல்லை கடந்து மைசூர் சென்று விட்டான். அவனைத் துரத்திச் சென்ற இன்ஸ்பெக்டர் அவனைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் கட, அவன் இறந்து போனான். மைசூர் அரசு அந்த இன்ஸ்பெக்டரைக் கைது செய்தது. ராஜாஜி தமிழ்நாட்டின் அன்றைய மிக உயர்ந்த வக்கீலான வி. எல். எதிராஜின் உதவியை நாடினார். அவரும் தமிழக அரசு சார்பில் ஆஜராகி இன்ஸ்பெக்டரை ஜாமீனில் விடுவித்து அழைத்து வந்தார்.

ஆனால் இதே ராஜாஜிதான் சென்னை நகர போலீஸ், வேலை நிறுத்தம் என்று ஆரம்பித்த போது மிகக் கடுமையாக நடந்து கொண்டு ஒரே நாளில் அதை முறியடித்தார்! சட்டமன்றத்தில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் இதுகுறித்துப் பெருமையாகப் பேச நினைத்த போது, "வேண்டாம், விண்டு போகும் சமாசாரம்; போலீஸை சிறுமைப்படுத்துவது போல் பேசுவது நல்லதல்ல" என்று கூறி விஷயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

●● வடநாட்டில் சுதந்திரா கட்சி தேர்தல் பிரசாரத்தின் போது ராஜாஜி, "அரசியலில் ஈடுபடுவோர் சுயசம்பாத்தியம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்; அரசியலையே வருவாய்க்கு உபாயமாகக் கொள்ளக் கூடாது; இன்றுள்ள பல அரசியல்வாதிகள், 'வருவாய் எப்படி வந்தது?' என்று போலீஸ் தட்டிக் கேட்கக்கூடிய நிலையில்தான் உள்ளனர்" என்றார்.

இதற்கு ஆந்திரா சட்ட சபை ஆட்சேபணை எழுப்பி, உரிமைப் பிரச்னை கொணர்ந்தது. முந்நாள் கவர்னர் ஜெனரலை அவர்களால் ஒன்றும் செய்திருக்க முடியாது எனினும் ராஜாஜி, அரசியல் சாசன நிபுணர் ஒருவரை தமது சார்பில் அனுப்பி, தன்னிலை விளக்கம் அளித்தார். பொதுவாக நாட்டின் நிலையைத்தான் தாம் வர்ணித்ததாகவும் ஆந்திரா சட்டசபையையோ அதன் அங்கத்தினர்களையோ அவமதிக்கும் நோக்கம் தமக்கு இல்லை என்றும் எடுத்துக் கூறினார்.

●● இவ்வாறு சட்டம், மரபுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் தந்த ராஜாஜி, மனிதாபிமானம் மிக்கவராகவும் இருந்தார். சுதந்திரா கட்சிக்கு சென்னை, எழும்பூரில் இரண்டு கிரவுண்டு நிலம் ஒருவர் அளித்திருந்தார். அதை விற்று, கட்சி நிதியில் பணத்தைச் சேர்த்து விடுமாறு என்னிடம் பொறுப்பு ஒப்படைத்தார். நான் எல்லா ஏற்பாடுகளையும் முடித்துக் கொண்டு அவரை அணுகிய போது, "ஆமாம், அதில் சிலர் குடிசை போட்டிருந்தார்களே, அவர்களை என்ன செய்தாய்?" என்று கேட்டார். "அவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள், அகற்றப்பட வேண்டியவர்கள், நமக்கென்ன" என்பது போல் பதில் கூறினேன், அலட்சியமாக. "அப்படியல்ல; அவர்கள் வேறு இடத்துக்குக் குடியேற பண உதவி செய்து விட்டு பிறகு சாசனத்தைப் பதிவு செய்" என்றார் ராஜாஜி.

'இவரையா மகாராஜாக்களின் தோழர் என்றும் பணக்காரக் கட்சித் தலைவர் என்றும் முத்திரை குத்துகிறார்கள்!' என்று எண்ணிய போது என் கண்கள் கலங்கி விட்டன.

- ஜி. நாராயணசுவாமி.

சந்திர மண்டலத்துக்குப் பயணம் செய்த விஞ்ஞானிகள் சாதாரணமான ஆடையில் போகவில்லை. அவ்விடத்துச் சூழல் தம்மைப் பாதிக்காதபடி பல்வேறு உபகரணங்களை வடிவமைத்துக் கொண்டு, பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொண்டு விசேஷ உடையுடன் சந்திரனில் கால் வைத்தார்கள். அது போலவே பூ மண்டலத்தில் வாழ நினைத்துக் கால் வைக்கும் மனிதனும் சில முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும். பூமி ஒரு கர்ம க்ஷேத்திரம். இதில் பிறக்கும் உயிர்களின் செயல்கள் விளைவுகளை ஏற்படுத்தி அவற்றைப் பந்தப்படுத்தும். இவ்வாறு பந்தப்படுத்தாதபடி செய்து கொள்ளும் முன்னேற்பாடே ஞானம்.

உடம்பெல்லாம் எண்ணெய் பூசிக் கொண்டு சண்டைக்குப் போகிறவர்கள் எதிரியின் பிடியில் சிக்குவதில்லை. எரியும் பருத்திக்குப் பதிலாக எரியாத துணி உடுத்தும் தீயணைப்புப் படை வீரர்கள் நெருப்பின் நாக்குகளில் கருகுவதில்லை. அதே போல, நான் உடம்பல்ல என்ற ஞானம் பெற்று - செயலைச் செயலுக்காகவே செய்து, பலனை ஈஸ்வர அர்ப்பணம் செய்யும் தீரர்கள் கர்மத்தளைகளில் சிக்குவதில்லை. ஸ்திதப்ரக்ஞனாய், சமநிலை பால்நின்று கடமை ஆற்றுவதால் இன்பதுன்பங்கள் அவர்க்கு இல்லை. இந்நிலை நிற்றலே யோகம். அத்தகு வாழ்வே யாகம். இவைதான் கீதையின் முதல் நான்கு அத்தியாயங்களின் சாரம்.

நமது செயல்கள் (கர்மம்) நம்மைத் தளைப்படுத்தாவண்ணம் வாழ இரண்டு வழி உண்டு. செயல்கள் அனைத்தையும் விட்டு விடும் துறவு - சந்யாஸம். அது ஞான யோகமாகிறது. செயல்களைச் செய்து கொண்டே இவற்றை நான் செய்கிறேன் என்ற எண்ணத்தை மட்டும் விட்டு விடுதல் கர்மயோகமாகிறது.

இவை ஒன்றுக்கொன்று முரண்பட்டதா? ஒன்றை விட ஒன்று உயர்வானதா? பின்பற்றத்தக்கது எது என்ற ஐயத்தை மனிதகுலப் பிரதிநிதியான பார்த்தன் எழுப்புகிறான்.

"கிருஷ்ணா... கர்மத்தைத் துறக்கவும் பின்பு அதைக் கையாளவும் சொல்லுகிறீர். இவ்விரண்டினுள் சிறந்தது எது என்று நிச்சயிக்கப்பட்டதை எனக்கு இயம்பும்'' என்று சந்தேகம் கேட்பதாக ஐந்தாம் அத்தியாயம் முதல் சுலோகம் தொடங்குகிறது.

வாழ்வில் உயர விரும்பும் ஒவ்வொருவரும் மனதில் எழும் சந்தேகங்களைப் புதைக்காதீர்கள். உடனுக்குடன் கேட்டு தீர்வு காணுங்கள். கேட்கலாமா என்ற தயக்கம் வெற்றியை ஒத்திப் போடும். கேட்காமலேயே விடுவது தோல்விக்கு வழிவகுக்கும். சந்தேகம் இரும்பில் துரு போல... உடனடியாகக் கவனிக்காவிட்டால் ஒருநாள் வலிமை வாய்ந்த தூணையே சாய்க்கும். அது புற்று நோய் போல. தொடக்கத்தில் உடம்பின் ஒரு பகுதியை விலைபேசி இறுதியில் எல்லாவற்றையும் வளைத்துப் போடும். சந்தேகம் எப்படிப்பட்டது என்பதை ஒரு அழகான பழமொழி மூலம் ஸ்ரீசத்ய சாய்பாபா விளக்குகிறார். "கண்ணில்



மச்சம் போல, செருப்பில் கல்லைப் போல, காலில் முள்ளைப் போல வீட்டில் கலகம் போல ஒரு மனத்தில் சந்தேகங்களும் துன்பம் தருகின்றன."

கர்ம சந்யாஸம் என்பது எல்லாக் கர்மங்களையும் விட்டு விடுவதாகும். அதற்குப் பதிலாக எல்லாக் கர்மங்களையும் திறம்படக் கையாளுதல் கர்மயோகமாகும். இரண்டின் மதிப்பும் ஒன்றுதான் என்றாலும் கர்மயோகமே மேலானது என்கிறது கீதை. (அத் 5 சுலோ 2) ஒருவரிடம் ரூபாய் ஐயாயிரம் இருக்கிறது. அவர் மனைவியிடம் ஐயாயிரம் மதிப்புடைய தங்கம் இருக்கிறது. இரண்டும் சமம் தான். ஆனால் உலக வழக்கில் ஐயாயிரம் ரூபாயை விட தங்கத்தின் மதிப்பு மேலானது. ஏன்? காற்றில் பறக்கும் அரசுகள் பதவிக்கு வந்தால் ரூபாய் நோட்டுகளும் காற்றில் பறக்கும். ஆனால் தங்கம் அப்போதும் மதிக்கப்படும். அப்போது தங்கம் மேலானது என்று நிரூபிக்கப்படும். கர்மயோகம் தங்கம்; சந்யாஸம் ரூபாய் மாதிரி. சந்யாஸம் எல்லோருக்கும் எளிதல்ல. அதன் தவறான பிரயோகம் கேலிக்குரியதாகி விடும். கர்மயோகத்தில் ஒருவன் நழுவினாலும் அவமானம் அவனுக்கு இல்லை. ஆராய்ச்சி அளவில் ஞானயோகமும் கர்மயோகமும் சமம் என்றாலும் அனுபவத்தில் நம் போன்றவருக்குக் கர்மயோகமே மேலானது. அது கருதியே "உலகம் ஒரு வைத்தியசாலை. அஞ்ஞானம் என்ற நோய்க்கு இங்கே வைத்தியம் செய்ய கர்மயோகமே சரியான சிகிச்சை முறை" என்கிறார் பகவான் ராமகிருஷ்ணர்.

கர்மயோகியை, ஐந்தாம் அத்தியாயத்தின் எட்டு ஒன்பது சுலோகங்கள் படம் எழுதிக் காட்டுகின்றன. "ஆத்ம சொரூபம் நிலைபெற்ற யோகி பார்த்தாலும், கேட்டாலும், தீண்டினாலும், முகர்ந்தாலும், உண்டாலும், நடந்தாலும், உறங்கினாலும், சுவாசித்தாலும், பேசினாலும், நீக்கினாலும், பிடித்தாலும், கண்விழித்தாலும், இமைத்தாலும் - 'பொறிகள் புலன்வழி நிற்கின்றன. இவை எதையும் நான் செய்கின்றேன் இல்லை' - என்றே நினைக்கிறான். "சரீரத்தால் - சரீரத்தில் நிகழும் நிகழ்வுகள் ஆன்மாவின் செயல்கள் அன்று" என்று யோகி தெளிவடைந்துள்ளான்.

கண்ணபெருமானுக்குப் பட்டத்து மகிஷியர் எட்டு பேர். போதாக்குறைக்கு கோபியர் (ரை) கொஞ்சம் ரமணன் என்ற குற்றச்சாட்டும் அவன் மீது உண்டு. என்றாலும் அவனது நிலை ஆச்சரியமானது.

ஒரு நிகழ்ச்சி... அபிமன்யுவின் மனைவி உத்தரை. அவள் கருவில் உதித்த சிசுவையும் கொல்லக் கருதி அஸ்வத்தாமன் அஸ்திரம் ஏவினான். காத்து ரட்சித்தான் கண்ணபெருமான். எனினும் கரிக்கட்டையாகவே பிள்ளை பிறந்தது. எவன் ஒருவன் களங்கமே

சுற்றுகிற பம்பரம்!

இல்லாத பிரம்மச்சாரியோ அவன் தொட்டால் பிண்டம் உயிர்த்துக் குழந்தையாகும் என்றனர் பெரியோர். யார் தொடுவது? தொட்டும் குழந்தை எழவில்லையென்றால் தங்கள் பிரம்மச்சர்யம் பற்றி உலகம் சந்தேகப்படுமே என்று முனிவர்கள் கலங்கினர். யோகேச்வரனாகிய கண்ணன் "நான் உத்தமமான பிரம்மச்சாரி என்பது சத்யம் என்றால் இந்தக் கரு உயிர்த்தெழட்டும்" என்று பிரதிக்ஞை செய்து கையால் தொட்டதும் சிசு சிலிர்த்தது.

எல்லாக் கருமங்களையும் முழுமூச்சில் செய்து கொண்டு, நான் எந்தக் கருமமும் செய்கின்றேன் இல்லை என்று செயலொழிந்தவன் போல் நிற்பது எப்படி சாத்தியம்?

சின்ன வயதில் முழு வீச்சில், மும்முரமாகப் பம்பரம் சுற்றும் போது 'என் பம்பரம் நிக்குது' என்று பெருமை அடித்துக் கொண்டோமே நினைவிருக்கிறதா? வேகமாகச் சுற்றும் பம்பரம் அசைவற்று நிற்பது போலவே இருக்கும். கர்மயோகியும் அப்படித்தான். எல்லாம் செய்யினும் ஏதும் செய்யாத மனோநிலையில் இருக்கிறான். கண்ணுக்குத் தெரியும் பம்பரத்தின் சுழற்சிக்குக் காரணம் சாட்டை. அது பம்பரம் விட்டவன் கையில் இருக்கிறது. கர்ம வினையே சாட்டை. கடவுளே குழந்தை... நாமே பம்பரம்.. இயக்கத்தில் இயக்கமின்மை என்பதே கர்மயோகம்.

சுகி சிவம்



பிராணியை —— அவமானப்படுத்தலாமா?

♦ தலையங்கம் எழுதுவதில் கல்கிக்கு நிகர் கல்கியே. சேஷன் நடத்திய ஏர்போர்ட் நாடகம் நேர்மையான தலையங்கம். யார் சிந்தித்துப் பார்க்கிறார்கள் என்பது தான் கேள்வி.
திருமங்கலக்குடி, சாந்து உஸ்மானி.

♦ சேஷன் ஏர்போர்ட்டில் நடத்தியது நீங்கள் சொன்னது போல் நாடகமே! இந்தியாவின் உயர் பொறுப்பில் இருக்கும் அதிகாரி, தானாக சட்டம் ஒழுங்கு பிரச்னையை உருவாக்கி, மாநில அரசை தர்மசங்கடத்தில் ஆழ்த்த முயலுவது நியாயமில்லைதான்.
தேவிப்பட்டினம், பி. சிவராமன்.

♦ சமயம், தத்துவம், பொருளாதாரம் ஆகிய மூன்றும் அடிப்படைக் கல்வியாக மக்களுக்குப் போதிக்கப்பட வேண்டும்; பள்ளி - கல்லூரிப் பாடத் திட்டங்களில் சேர்க்கப்பட வேண்டும் என்ற பெரியார்தாசனின் கூற்று மிகவும் வரவேற்கத்தக்கது.
பூண்டி, பி. எஸ். சுஜாதா.

♦ என்னவோய்... ஆக்டோபஸ்ஸுக்கு பிரேமானந்தா தலையை வைத்து பிராணியை அவமானப்படுத்துகிறீர்...? பிராணிகள் வதை தடுப்புச் சட்டத்தில் உம்மைப் போட்டு... ம்...!
குணசிலம், ஆர். சங்கரநாராயணன்.

♦ கவர் ஸ்டோரியில் காணப்பட்ட கருத்துக்கள் கோடி பொன் பெறும். எது கயிறு எது பாம்பு என்று இனங்கண்டு கொள்ள இயலாத மாக்கள் இருக்கும் வரை இத்தகைய அவலங்கள் தொடர்ந்து கொண்டுதானிருக்கும்.
சென்னை - 30, புளியரை கணேசன்.

♦ "போலி மதவாதிகளைத் தோலுரித்துக் காட்ட வேண்டிய நாத்திக இயக்கமே இன்னொரு சந்தர்ப்பவாத நிறுவனமாக மாறி விட்டது கொடுமை" என்று பெரியார் கட்சிக்காரர்களைப் பெரியார்தாசனே சாடியிருப்பது வியப்பாக உள்ளது.
சென்னை - 14, பொ. வஜ்ரவேலு.

♦ அலாதீன் கார்ட்டூன் படக் காட்சிகளை கண்முன் நிறுத்தி, சிறு விமர்சனம் கொடுத்து குடும்பத்தோடு படம் பார்க்கும் ஆவலைத் தூண்டி விட்டீர்.
திருச்சி - 3, எச். சபிதாநேசன்.

♦ ஒரு பிளாட்பார சிறுவனின் நிஜமான கதையைப் படித்து முடித்த போது என்னையுமறியாமல் இரண்டு சொட்டு கண்ணீரே வந்து விட்டது. மனித வாழ்க்கையில்தான் எத்தனை எத்தனை விசித்திரங்கள்!
கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

♦ எம்.எல்.ஏ. என்று சொல்லியும் தன்னைப் போலீஸார் அடித்ததாக 'கராத்தே' சொல்வது...? அண்ணன் 'தாமரை' ஸ்டைலில் ஓங்கித் தட்டியிருப்பார்களோ?
அரக்கோணம், எல். கோபாலகிருஷ்ணன்.

♦ ஆர். வெங்கடேஷின் "ஹாய்" ஒரு பக்கக் கதை இளைய சமுதாயத்தின் காதுகளில் ஓதப்பட வேண்டிய தாரக மந்திரம்!
திருச்சி - 2, கனகராஜ்.

♦ சத்யாவின் 3 லட்சம் விற்பனைக்கு முத்தான யோசனைகள் படித்துச் சிரித்துச் சிரித்து வயிறு வலித்து விட்டது. சில பத்திரிகைகள் சர்க்குலேஷன் உயரச் செய்யும் செயல்களை அப்படியே நம் மனக்கண்முன் படம்பிடித்துக் காட்டி விட்டார். பாராட்டுக்கள்.
சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

எல்டி-எல்கே

மோட்டார் ஸ்டார்ட்டர் டைப் எம்கே 1



**விவசாயியின்
நண்பன்
மட்டுமல்ல
இலெக்ட்ரீஷியனின்
முதல் தேர்வும்
இதுவே.**

30 வருடங்களுக்கு மேலாக எல் டி நிறுவனத்தின் எம்கே1 டிஓஎல் மோட்டார் ஸ்டார்ட்டர் நம்பிக்கைக்கு ஒரு அறிகுறியாக விளங்குகிறது.

நாங்கள் கூறுவதை அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டாம். இதைப் பற்றி நன்கறிந்தவர்களைக் கேளுங்கள்-ஆம், விவசாயி அல்லது இலெக்ட்ரீஷியன். எம்கே1 டிஓஎல் ஸ்டார்ட்டரின் தனிச் சிறப்பான டிசைன் மற்றும் கட்டுறுதியான அமைப்பைப் பற்றி அவர்கள் கூறுவார்கள். வேறெந்த ஸ்டார்ட்டரும் இத்தகைய நற்பயன்களை வழங்குவதில்லை. ஆகையால் தான், நாடெங்கிலும் உள்ள கிராமங்கள் அல்லது நகரங்களில் எல்டி-எல்கே எம்கே1 டிஓஎல் விவசாயி மற்றும் இலெக்ட்ரீஷியனின் பொதுவான தேர்வாக அமைந்துள்ளது. உங்கள் அருகாமையிலுள்ள எல்&டி அங்கீகரிக்கப்பட்ட ஸ்டாக்கிஸ்டிடம் ஸ்டார்ட்டரை வாங்குங்கள்.

ஸ்விச்கியர் - ஸ்டாண்டர்ட் ப்ராடக்ட்ஸ் டிவிஷன்

லார்ஸன் & டூப்ரோ லிமிடெட்

த.பெ. எண் 8119, பம்பாய் 400 051 தொ.பேசி: 6401232
த.பெ.எண் 6223, புது தில்லி 110 015. தொ.பேசி : 531302
த.பெ.எண் 619, கல்கத்தா 700 001. தொ. பேசி : 2422301/5
த.பெ.எண் 5247, சென்னை 600 002. தொ.பேசி : 8522141
த.பெ.எண் 119, புனே 411 001. தொ.பேசி : 624447

L&T/ADV Dept SWS 309TMU



REGISTERED NO. M. 4302
Registered as Newspaper in Srilanka